சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

★★
வெள்ளிக்கிழமை
13 நவம்பர் 2026
மதுரை
12 பக்கங்கள் ரூ.9

உள்ளே...



- இந்தியாவின் வெற்றிகளை உலகுக்கு பறைசாற்றுங்கள்: ஊடகங்களுக்கு வேண்டுகோள்



- என்விடியா சிஇஓ ஜென்சன் ஹுவாங் ராஜிநாமா
- ஜெம் வீரமணிக்கு எதிரான முதல் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல்

நவ.19-க்கு பிறகு வங்கக் கடலில் புதிய புயல்

சென்னை, நவ. 12: வங்கக் கடலில் வரும் நவ. 19-ஆம் தேதிக்கு பிறகு மற்றொரு புயல் உருவாவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதுகுறித்து அந்த மையம் சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு: பூமத்திய ரேகைப் பகுதியில் உள்ள பசிபிக் பெருங்கடலில் தற்போது 'சூப்பர் எல் நினோ' நிலை நிலவுகிறது. இதனால், இந்தியாவில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் 'சூப்பர் எல் நினோ' தாக்கம் தீவிரமடையும். இது, வங்கக் கடல் மற்றும் அரபிக் கடலில் மேகக் கூட்டங்கள் உருவாகவும், காற்றழுத்தத் தாழ்வுப் பகுதிகள் உருவாவதற்கும் சாதகமான சூழல்களை உருவாக்கும்.

புயல் சின்னம்: அந்த வகையில், தெற்கு அந்தமான் கடல் பகுதியில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, வியாழக்கிழமை மத்திய அந்தமான் கடல் மற்றும் அதையொட்டிய பகுதிகளில் நிலவியது.

இதன் தாக்கத்தால் வெள்ளிக்கிழமை (நவ.13) தென்கிழக்கு வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகும். இது சனிக்கிழமை (நவ.14) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாகவும், நவ.15-இல் தெற்கு வங்கக் கடலின் மத்திய பகுதியில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும் வலுப்பெற வாய்ப்புள்ளது.

இது, மேலும் வலுப்பெற்று நவ.19 முதல் நவ.25-ஆம் தேதிக்கு இடைப்பட்ட காலத்தில் தெற்கு வங்கக் கடலின் மத்திய பகுதியில் புயலாக உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் புயல் சின்னம் நகரும் திசை மற்றும் கரையைக் கடக்கும் பகுதியைப் பொருத்தே தமிழகத்தில் மழை பாதிப்பு இருக்கும்.

தமிழகத்தில் 5.77 கோடி வாக்காளர்கள்

வரைவுப் பட்டியல் வெளியீடு; எஸ்ஐஆருக்கு பிறகு 4 லட்சம் அதிகரிப்பு

சென்னை, நவ. 12: தமிழகத்தில் சிறப்பு சுருக்கமுறை திருத்தப் பணிக்கு (எஸ்எஸ்ஆர்) பிறகு 5.77 கோடி வாக்காளர்கள் கொண்ட வரைவுப் பட்டியல் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. அதில், ஆண் வாக்காளர்கள் 2,82,03,992 பேரும், பெண் வாக்காளர்கள் 2,95,34,734 பேரும், மூன்றாம் பாலினத்தவர் 7,892 பேரும் அடங்குவர்.

சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு (எஸ்ஐஆர்) பிறகு சுமார் 4 லட்சம் வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர்.

மாநிலத்திலேயே அதிகமான வாக்காளர்களைக் கொண்ட சட்டப்பேரவைத் தொகுதியாக 5,58,729 வாக்காளர்களுடன் செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது. குறைந்த அளவு வாக்காளர்களைக் கொண்ட சட்டப்பேரவைத் தொகுதியாக 1,20,852 வாக்காளர்களுடன் சென்னை மாவட்டத்தின் துறைமுகம் தொகுதி உள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவும், நீக்கவும், திருத்தவும், இடமாற்றம் செய்யவும் நவ. 21, 22, 29 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்



கள் நடத்தப்படும் என்றும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை டிச. 11-ஆம் தேதி வரை சமர்ப்பிக்கலாம் என்றும் தலைமைத் தேர்தல் ஆணையர் அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியலில் பெயரைச் சேர்க்க வசிப்பிட முகவரி மற்றும் வயதுக்கான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். 2027 ஜன.1, ஏப்.1, ஜூலை 1 ஆகிய தேதிகளில் 18 வயதை பூர்த்தி செய்பவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும் படிவம் 6-இல் விண்ணப்பிக்கலாம். வெளிநாடு வாழ் வாக்காளர் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க படிவம் 6-ஏ, பெயரைச் சேர்க்கவும், நீக்கவும், ஆட்சேபணை தெரிவிக்க படிவம் 7, தொகுதி மாற்றம் செய்யவும், திருத்தம் செய்யவும், மாற்று வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை பெறுவதற்கும் படிவம் 8 ஆகியவற்றில் விண்ணப்பிக்க வேண்டும் என்று அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

வாக்காளர்கள் அதிகரிப்பு: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலின்போது மேற்கொள்ளப்பட்ட சிறப்பு தீவிர திருத்தத்தின்போது (எஸ்ஐஆர்) 5,73,43,291-ஆக இருந்த வாக்காளர் எண்ணிக்கை, இந்த எஸ்எஸ்ஆர் பணிக்குப் பிறகு 5,77,46,618-ஆக அதிகரித்துள்ளது.

சட்டப்பேரவைத்தேர்தல்கடந்த மே 4-ஆம் தேதி நடைபெற்று முடிந்த பிறகு 6-ஆம் தேதிமுதல் வாக்காளர் பட்டியலில் பெயரைச் சேர்க்கும் பணி தொடங்கியது.

எஸ்ஐஆர் பணிக்கு முன்பு 6,41,14,587 பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தன. சிறப்பு தீவிர திருத்தத்தின் வரைவு வாக்காளர் பட்டியலில் 97.38 லட்சம் பேர் நீக்கப்பட்டு, பின்னர் 27.53 லட்சம் தகுதியுள்ள வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர்.

வரைவு வாக்காளர் பட்டியல் (மாவட்ட வாரியாக)

1. திருவள்ளூர்	32,39,301	20. திருவாரூர்	9,95,279
2. சென்னை	29,14,908	21. தஞ்சை	19,80,334
3. காஞ்சிபுரம்	12,21,180	22. புதுக்கோட்டை	13,18,948
4. வேலூர்	11,59,481	23. சிவகங்கை	11,26,500
5. கிருஷ்ணகிரி	15,82,153	24. மதுரை	25,13,711
6. தருமபுரி	12,59,510	25. தேனி	10,46,972
7. திருவண்ணாமலை	19,47,156	26. விருதுநகர்	15,19,601
8. விழுப்புரம்	16,08,995	27. ராமநாதபுரம்	11,33,535
9. சேலம்	27,95,315	28. தூத்துக்குடி	13,95,495
10. நாமக்கல்	13,29,376	29. திருநெல்வேலி	12,74,966
11. ஈரோடு	17,69,770	30. கன்னியாகுமரி	15,26,871
12. நீலகிரி	5,54,840	31. அரியலூர்	5,29,528
13. கோவை	27,68,820	32. திருப்பூர்	20,01,436
14. திண்டுக்கல்	17,01,894	33. கள்ளக்குறிச்சி	11,30,530
15. கரூர்	8,56,198	34. தென்காசி	12,80,475
16. திருச்சி	21,61,238	35. செங்கல்பட்டு	23,26,822
17. பெரம்பலூர்	5,62,134	36. திருப்பத்தூர்	9,28,853
18. கடலூர்	20,49,811	37. ராணிபேட்டை	9,58,271
19. நாகை	5,35,448	38. மயிலாடுதுறை	7,40,963

மொத்தம் 5,77,46,618

ஜம்மு-காஷ்மீர்: இரு காவல் அதிகாரிகள் சுட்டுக் கொலை

ஜம்மு, நவ. 12: ஜம்மு-காஷ்மீரின் தச்சன் பகுதியில் புதன்கிழமை காணாமல் போன இரு சிறப்பு காவல் அதிகாரிகள், குண்டுக் காயங்களுடன் உயிரிழந்த நிலையில் கிஷ்த்வார் மாவட்டத்தில் வியாழக்கிழமை மீட்கப்பட்டனர்.

அதிகாரிகளின் இரு துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை, அவர்களை சுட்டுக் கொன்ற பயங்கரவாதிகள் எடுத்துச் சென்றுவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குல்காம் மாவட்டத்தில் மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎஃப்) சோதனைச் சாவடி மீது இருசக்கர வாகனத்தில் வந்த பயங்கரவாதிகள் புதன்கிழமை துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 3 சிஆர்பிஎஃப் வீரர்கள் காயமடைந்தனர். இந்த நிலையில், கிஷ்த்வார் மாவட்டத்தில் இரு காவல் அதிகாரிகளை பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்று, ஆயுதங்களையும் பறித்துச் சென்றிருப்பது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: தச்சனில் உள்ள கியர் கிராமத்தில் உள்ளூர் காவல் துறையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவில் பணியமர்த்தப்பட்டிருந்த சிறப்பு காவல் அதிகாரிகளான பாபி சந்த் (57), ராஷ்பல் குமார் (45) இருவரும் தங்களின் முகாமிலிருந்து, தர்னா-மர்வா பகுதியில் ரோந்துப் பணிக்காக புதன்கிழமை சென்றுகொண்டிருந்தபோது காணாமல் போயினர். ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்), மோப்ப நாய்களின் உதவியுடன் அவர்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டது. இந்த நிலையில், கிஷ்த்வார் மாவட்டத்தில் குண்டு காயங்களுடன் உயிரிழந்த நிலையில் அவர்கள் இருவரின் உடல்களும் வியாழக்கிழமை அதிகாலை மீட்கப்பட்டன.

அதிகாரிகளின் இரு துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை, பயங்கரவாதிகள் பறித்துச் சென்றுள்ளனர். அவர்களின் உடல்களுக்கு அருகிலிருந்து, பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட கவசத்தைத் துளைக்கக்கூடிய வெடிமருந்துகளின் காலி உறைகள் கண்டெடுக்கப்பட்டன. பயங்கரவாதிகளைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றனர்.

இந்தத் தாக்குதல்களுக்கு யுனியன் பிரதேசத்தில் ஆளும் தேசிய மாநாட்டுக் கட்சி, எதிர்க்கட்சியான பாஜக, காங்கிரஸ், மக்கள் ஜனநாயக கட்சி, மார்சிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

'24 மணி நேரத்துக்குள் இரு பயங்கரவாத தாக்குதல்கள் நடந்திருப்பது தீவிர கவலைக்குரிய விஷயம். இந்தச் சம்பவங்கள், ஜம்மு-காஷ்மீரை பயங்கரவாதமற்ற பகுதியாக மாற்றிவிட்டதாக மத்திய பாஜக அரசு முன்வைக்கும் கூற்றுக்கு முரணாக உள்ளது' என்று ஜம்மு-காஷ்மீர் துணை முதல்வர் சுரிந்தர் சௌதரி தெரிவித்தார்.

அரசுப் பள்ளிகளில் இன்று குழந்தைகள் தின கொண்டாட்டம்

மாணவர்களுக்கு கேக் வழங்குகிறார் முதல்வர் விஜய்

சென்னை, நவ. 12: குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, சென்னை பெரம்பூரில் உள்ள அரசுப் பள்ளியில் நடைபெறவுள்ள விழாவில் முதல்வர் ஜோசப் விஜய் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு கேக், வாழ்த்து அட்டையை வெள்ளிக்கிழமை (நவ. 13) வழங்கவுள்ளார்.



தமிழகத்தில் நிகழாண்டு குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் உள்பட 61,84,566 மாணவர்களுக்கு கேக் வழங்குவதற்காக தமிழக அரசு சார்பில் ரூ.9.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதை யடுத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கேக்குகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அதன் அடிப்படையில் 4 பெரு நிறுவனங்கள் வாயிலாக எஃஎஸ்எஸ்ஏஐ தரத்தில் உள்ள கேக்குகளின் முன் மாதிரிகள் உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக ஆணையக அதிகாரிகளால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து இந்த கேக்குகள் சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் பராமரிக்கப்பட்டு வாழ்த்து அட்டைகளுடன் சேர்த்து மாணவர்களுக்கு வெள்ளிக்கிழமை (நவ. 13) வழங்கப்படவுள்ளது.

சென்னை பெரம்பூர் மடுமா நகர் பகுதியில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் காலை 10 மணிக்கு நடைபெற உள்ள குழந்தைகள் தின விழாவில் முதல்வர் ஜோசப் விஜய் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கேக், வாழ்த்து அட்டைகளை வழங்கவுள்ளார்.

தொடர்ந்து, தமிழகம் முழுவதும் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்களுக்கு கேக் விநியோகிக்கப்பட உள்ளது.

கல்வித் துறை விளக்கம்: பள்ளிக் கல்வித் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி மேலாளர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் கேக்குகள் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்குகள் மற்றும் பள்ளிகளில் எலிகள், பூச்சிகள் போன்றவை இல்லாத வகையில் பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளனவா என்பதை ஆய்வின் மூலம் உறுதி செய்துள்ளனர்.

மேலும், மாவட்ட ஆட்சியர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் சிறப்புக் கண்காணிப்புக் குழுவினர் பள்ளிகளில் மாணவர்களுக்கு கேக்குகள் வழங்கப்படுவதைக் கண்காணிப்பார்கள்' என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வினாத்தாள் கசிவு எதிரொலி

தேர்வுப் பார்வையாளர்களாக ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள்: என்டிஏ

புது தில்லி, நவ.12: தொடர் வினாத்தாள் கசிவு சர்ச்சையைத் தொடர்ந்து, எந்தவொரு முறை கேட்டுக்கும் இடமளிக்காமல் போட்டித் தேர்வுகளை நடத்தும் வகையில், ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள், துணை ராணுவப் படையினர் மற்றும் ஓய்வு பெற்ற மத்திய, மாநில அரசு அதிகாரிகளை தேர்வு பார்வையாளர்களாக நியமிக்க தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) முடிவு செய்துள்ளது.

இளநிலை மருத்துவப் படிப்புகள் சேர்க்கைக்கான தகுதிகாண் நுழைவுத் தேர்வு (நீட்), ஐஐடி உள்ளிட்ட மத்திய அரசு தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் இளநிலை பொறியியல் படிப்புகளில் சேர்க்கை பெறுவதற்கான ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வு (ஜேஇஇ-மெயின்) தேர்வு, மத்திய அரசின் இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகை பெற மற்றும் கல்லூரி உதவிப் பேராசிரியர் பணிக்கு தகுதி பெறுவதற்கான தேசிய தகுதித் தேர்வு (நெட்), மத்திய அரசு பல்கலைக்கழகங்களில் இளநிலை மற்றும் முதுநிலை கலை-அறிவியல் படிப்புகளில் சேர்க்கை பெறுவதற்கான பொதுப் பல்கலைக்கழக தகுதித் தேர்வு (க்யூட்) உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளை என்டிஏ நடத்தி வருகிறது.

இந்நிலையில், கடந்த மே மாதம் நடத்தப்பட்ட நீட் தேர்வின் வினாத்தாள் முன்கூட்டியே வெளியான விவகாரம் மிகப் பெரிய சர்ச்



(கோப்புப் படம்)

சையானது. அதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் 22 லட்சத்துக்கும் அதிகமானோர் எழுதிய நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டு, மறு தேர்வு நடத்தப்பட்டது. இந்த சர்ச்சை அடங்குவதற்குள், நெட் தேர்வு குளறுபடி தொடர்பாக எழுந்த புகார் மிகப்பெரிய சர்ச்சையானது. அதைத் தொடர்ந்து, நெட் தேர்வின் 4 பாடங்களுக்கு மறுதேர்வு நடத்தப்பட்டது.

இந்த சர்ச்சைகளைத் தொடர்ந்து, நுழைவுத் தேர்வுகளை எந்தவிதக் குளறுபடிகளும் இன்றி நடத்த அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், பல்வேறு நடவடிக்கைகளை என்டிஏ மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள், துணை ராணுவப் படையினர் மற்றும் ஓய்வு பெற்ற மத்திய, மாநில அரசு அதிகாரிகளைக் கொண்ட நிரந்தர தேர்வு பார்வையாளர்கள் குழுவை உருவாக்க என்டிஏ முடிவு செய்துள்ளது.

தேர்வு நடைபெறும் நாளில் நியமிக்கப்படும் மத்திய கண்காணிப் பாளர், நகர ஒருங்கிணைப்பாளர்களுடன் இந்தப் பார்வையாளர்களும் ஒவ்வொரு தேர்வு மையத்திலும் நியமிக்கப்படுவர். இந்தப் பார்வையாளர்கள் என்டிஏ-வுடன் நேரடித் தொடர்பில் இருப்பர்.

அந்த வகையில், தேர்வு பார்வையாளர்களாகப் பணிபுரிய விரும்பும், ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள், துணை ராணுவப் படையினர் மற்றும் ஓய்வு பெற்ற மத்திய, மாநில அரசு அதிகாரிகள், அரசுப் பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களை என்டிஏ வரவேற்றுள்ளது.

வெளிநாடுகளில் அமைக்கப்படும் தேர்வு மையங்களில், தேர்வு மையம் அமைந்துள்ள நகரில் வசிக்கும் ஓய்வு பெற்ற இந்திய தூதரக அதிகாரிகள், வெளியுறவு அமைச்சகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிகாரிகள், தகுதியுள்ள பிற இந்தியர்கள் பார்வையாளர்களாக நியமிக்கப்படுவர்.

தேர்வு மையங்கள்: மேலும், போதிய எண்ணிக்கையில் கணினிகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளுடன் சொந்தமாக தேர்வு மையங்களை வைத்துள்ள அல்லது தேர்வு மையங்களைச் செயல்படுத்தக்கூடிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளிடமிருந்தும் என்டிஏ விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது.

மதுரை நகைக் கடையில் ரூ.20 கோடி தங்க நகைகள் கொள்ளை

மதுரை, நவ. 12: மதுரை பழங்காநத்தம் புறவழிச் சாலையில் உள்ள நகைக் கடையில் வியாழக்கிழமை அதிகாலை சுமார் ரூ. 20 கோடி மதிப்பிலான 15 கிலோ தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இந்தக் கொள்ளையில் தொடர்புடையவர்களைக் கைது செய்ய காவல் உதவி ஆணையர்கள் தலைமையில் 3 தனிப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மதுரை பழங்காநத்தம் புறவழிச் சாலையில் நேரு நகர், நேதாஜி பிரதான சாலையில் உள்ளது தனிஷ்க் நகைக் கடை. இந்தக் கடை கடந்த மாதம் 14-ஆம் தேதி திறக்கப்பட்டது. வியாழக்கிழமை காலை வழக்கம்போல கடையைத் திறந்த ஊழியர்கள், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளில் பாதிக்கு மேல் கொள்ளை போனதையறிந்து, மதுரை எஸ்.எஸ். காலனி காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர்.

நிகழ்விடத்துக்கு வந்த போலீஸார் கடையில் ஆய்வு செய்தனர். அப்போது, ரூ. 20 கோடி மதிப்பிலான 15 கிலோ தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது தெரியவந்தது. இதுதொடர்பாக, அங்கிருந்த கண்காணிப்புகேமராக்களின் பதிவுகளை போலீஸார் ஆய்வு செய்தபோது, முகமூடி அணிந்த மர்ம நபர் ஒருவர் நகைக் கடையில் மின்தூக்கிக்காக அமைக்கப்பட்டிருந்த துவாரம் வழியாக உள்ளே நுழைந்து, கடையிலிருந்த நகைகளைக் கொள்ளையடித்துச் சென்ற காட்சிகள் பதிவாகியிருந்தன.

துளையிடாமல் நுழைந்தது எப்படி?: நகைக் கடை அமைந்துள்ள கட்டடம் மூன்று தளங்களைக் கொண்டது. இதில், முதல் தளத்தில் இந்தக் கடை செயல்படுகிறது. இந்தக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் முழுமையடையாத நிலையிலேயே, தீபாவளி விற்பனையைக் கவனத்தில் கொண்டு கடை திறக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தற்போது, மூன்றாவது தளத்தில் நகைகளைப் பாதுகாப்பதற்கான பெட்டகம் அமைக்கும் பணிகளும், கடைக்குள் மின்தூக்கி அமைக்கும் பணிகளும் நடைபெறுகின்றன. இரண்டாம் தளம் காலியாக உள்ளது. மேலும், சில கட்டுமானப் பணிகளும் இங்கு நடைபெறுகின்றன. இதற்காக கட்டடத்தின் பின் புறத்தில் இரும்பு சாரம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இரும்பு சாரத்தின் வழியாக மூன்றாவது தளத்தின் மேல் பகுதிக்குச் சென்ற அந்த மர்ம நபர், மின்தூக்கி அமைக்கும் பணிக்காக துளையிடப்பட்டிருந்த பகுதி வழியாக கயிற்றைப் பயன்படுத்தி முதல்





நகைக் கடையில் விசாரணை நடத்திய போலீஸார்.

மதுரை பழங்காநத்தம் புறவழிச் சாலையில் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட நகைக் கடையின் முகப்பு.

தளத்தில் உள்ள நகைக் கடைக்குள் இறங்கியது கண்காணிப்பு கேமராவில் பதிவாகியிருந்தது.

உடல் முழுவதும் கருப்பு நிற ஆடையால் மறைத்தும், முகமூடி அணிந்தும், கைகளில் கையுறை, கால்களில் ஷூ அணிந்தும் வந்த அந்த நபர், கடைக்குள் சுமார் ஒரு மணி நேரம் பதற்றமின்றி ஒவ்வொரு நகையாகத் தேர்வு செய்து பையில் எடுத்துப் போடுவதும், சென்சார் மூலம் ஒலி எழுப்பக் கூடிய பகுதியிலிருந்த சில நகைகளைத் தவிர்த்துவிட்டு, விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த தங்க நகைகளை மட்டும் எடுத்துச் செல்வதும் கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகியிருந்தன.

பின்னர், தங்க நகைகள் அடங்கிய பையுடன் அந்த நபர், நேதாஜி பிரதான சாலை வழியாக நடந்து செல்லும் காட்சியும் பதிவாகியிருந்தது.

இந்தக் கடையின் பாதுகாப்புக்கு 5-க்கும் மேற்பட்ட பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையிலும், கடையின் பின்புறத்தில் போதுமான கண்காணிப்பு இல்லாததும் இந்தக் கொள்ளைச் சம்பவத்துக்கு முக்கிய காரணமாகக் குறிப்பிடப்படுகிறது.

3 தனிப் படைகள் அமைத்து விசாரணை: மதுரை மாநகரக் காவல் ஆணையர் ராஜேந்திரன் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று விசாரணை நடத்தினார். மாநகரக் காவல் துணை ஆணையர் இனிகோ திவ்யன் தலைமையில், 3 உதவி ஆணையர்கள், 9 ஆய்வாளர்களைக் கொண்ட 3 தனிப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கொள்ளையரின் முகம் தெளிவாகப் பதிவாகாத நிலையில், அவரது உடல் அமைப்பு, நடமாட்டம், செயல்பாடுகளின் அடிப்படையில் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், ஏற்கெனவே பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட நபர்களின் புகைப்படங்களுடன் கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஒப்பிட்டும் ஆய்வு செய்து வருகின்றனர்.

கொள்ளை நடைபெற்ற நேரத்தில் அந்தப் பகுதியில் இருந்த வாகனங்கள், அவற்றின் உரிமையாளர்கள் குறித்தும் விசாரணை நடத்தப்படுகிறது. மாடக்குளம், நேரு நகர், புறவழிச் சாலை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கேமராக்களையும் போலீஸார் ஆய்வு செய்து வருகின்றனர்.

கட்டடத் தொழிலாளர்களிடமும் விசாரணை: நகைக் கடையில் பணிபுரியும் மேலாளர்கள், ஊழியர்கள், விற்பனையாளர்கள், கட்டடப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், மின் இணைப்பு, குழாய்கள் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் உள்ளிட்டோரிடமும் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்களது விரல் ரேகைகளும் சேகரிக்கப்பட்டன.

மேலும், நகைக் கடையின் கட்டடப் பணிகள், உள்அலங்காரப் பணிகளில் ஈடுபட்டவர்களின் தொடர்புகுறித்தும்விசாரிக்கப்படுகிறது. இந்தப் பணிகளுக்காக வடமாநிலங்களிலிருந்து அழைத்து வரப்பட்ட தொழிலாளர்களின் விவரங்களையும் சேகரித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவத்தைத் தொடர்ந்து, மதுரை மாநகர், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாகனத் தணிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாநகரக் காவல் துணை ஆணையர் இனிகோ திவ்யன் கூறுகையில், மதுரை பழங்காநத்தம் புறவழிச் சாலையில் உள்ள நகைக் கடையிலிருந்து சுமார் ரூ. 20 கோடி மதிப்பிலான 15 கிலோ (1,875 பவுன்) தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாக நகைக் கடைத் தரப்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றார்.

பச்சை அலங்காரத்தில்...



திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கந்தசஷ்டி விழாவின் 3-ஆம் நாளான வியாழக்கிழமை பச்சை அலங்காரத்தில் எழுந்தருளிய சண்முகர், வள்ளி, தெய்வானை அம்மன்.

மதுரை மாவட்டத்தில் 25.13 லட்சம் வாக்காளர்கள்

மதுரை, நவ. 12: மதுரை மாவட்டத்தில் மொத்தம் 25.31 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

2027-ஆம் ஆண்டு, ஜனவரி 1-ஆம் தேதியைத் தகுதி நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட சிறப்பு சுருக்கத் திருத்தப் பணிகளுக்குப் பிறகு தயாரிக்கப்பட்ட வாக்காளர்கள் வரைவுப் பட்டியல் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது.

இதற்கான நிகழ்ச்சி மதுரை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா தலைமை வகித்து, வாக்காளர்கள் வரைவுப் பட்டியலை வெளியிட்டார். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அரசுத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

இந்த வாக்காளர்கள் வரைவுப் பட்டியலின்படி, மாவட்டத்தில் உள்ள வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை - 25,13,711. ஆண்கள் - 12,29,742. பெண்கள் - 12,83,703. மூன்றாம் பாலினத்தவர் - 266.

சட்டப்பேரவைத் தொகுதி வாரியான வாக்காளர்கள் எண்ணிக்கைகள்

மேலூர்: ஆண்கள்-1,14,826, பெண்கள்-1,16,859, மூன்றாம் பாலினத்தவர்-11, மொத்தம்-2,31,696.



மதுரை மாவட்ட ஆட்சியரகத்தில் வாக்காளர்கள் வரைவுப் பட்டியலை வியாழக்கிழமை வெளியிட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா. உடன் அரசுத் துறை அலுவலர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள்.

மதுரை கிழக்கு: ஆண்கள் - 1,65,111, பெண்கள் - 1,74,225, மூன்றாம் பாலினத்தவர் - 58, மொத்தம் - 3,39,394.

சோழவந்தான் (தனி): ஆண்கள் -1,05,955, பெண்கள் -1,10,387, மூன்றாம்பாலினத்தவர்-13, மொத்தம் - 2,16,355.

மதுரை வடக்கு: ஆண்கள் - 1,07,930, பெண்கள் - 1,14,418, மூன்றாம் பாலினத்தவர் - 49, மொத்தம் - 2,22,397.

மதுரை தெற்கு: ஆண்கள் - 88,570, பெண்கள் - 92,099, மூன்றாம் பாலினத்தவர் - 49, மொத்தம் -1,80,718.

மதுரை மத்தி: ஆண்கள் - 97,301, பெண்கள் - 1,03,162, மூன்றாம் பாலினத்தவர் - 25, மொத்தம் - 2,00,488.

மதுரை மேற்கு: ஆண்கள்- 1,35,985, பெண்கள்- 1,41,652, மூன்றாம் பாலினத்தவர் - 12, மொத்தம் - 2,77,649.

திருப்பரங்குன்றம்: ஆண்கள் -1,53,572, பெண்கள்- 1,60,605, மூன்றாம் பாலினத்தவர்-32, மொத்தம் - 3,14,209.

திருமங்கலம்: ஆண்கள்- 1,27,343, பெண்கள் - 1,35,433, மூன்றாம் பாலினத்தவர் - 9, மொத்தம் - 2,62,785.

உசிலம்பட்டி: ஆண்கள் - 1,33,149, பெண்கள் - 1,34,863, மூன்றாம் பாலினத்தவர் - 8, மொத்தம் - 2,68,020.

சிறப்பு முகாம்கள்... மாவட்டத்தின் வாக்காளர்கள் இறுதிப் பட்டியல் வருகிற 2027-ஆம் ஆண்டு, ஜன. 4-ஆம் தேதி வெளியிடப்படும். இதையொட்டி, ஜன. 1-ஆம் தேதியைத் தகுதி நாளாகக் கொண்டு புதிய வாக்காளர்களைச் சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

இதேபோல, வாக்காளர்கள் பட்டியலிலிருந்து பெயரை நீக்க, முகவரி மாற்றம் செய்ய, திருத்தம் மேற்கொள்ள வருகிறடிச.11-ஆம் தேதி வரை பொதுமக்கள் உரிய படிவத்தில் வட்டாட்சியர் அலுவலகங்களில் நேரடியாக அல்லது https://voters.eci.gov.in இணையதள முகவரி மூலம் விண்ணப்பிக்கலாம். இதையொட்டி, நவ. 21, 22, 29-ஆம் தேதிகளில் அனைத்து வாக்குச் சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட வுள்ளன.

வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை உயர்வு... வாக்குச்சாவடிகள் சீரமைப்புப் பணி கடந்த மாதம் நடைபெற்றது. மாவட்டத்தில் 1,200-க்கும் அதிகமான வாக்காளர்களைக் கொண்ட வாக்குச் சாவடிகள் கண்டறியப்பட்டு, புதிதாக 7 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 12 வாக்குச் சாவடிகளில் இணைக்கப்பட்டிருந்த தெருக்கள் மாற்றப்பட்டன.

ஒரு வாக்குச்சாவடி இட மாற்றம் செய்யப்பட்டது. மிகக் குறைந்த வாக்காளர்கள் எண்ணிக்கையைக் கொண்டிருந்த ஒரு வாக்குச்சாவடி மற்றொன்றுடன் இணைக்கப்பட்டது.

இந்த மாற்றங்களுக்கு இந்திய தேர்தல் ஆணையம் அண்மையில் ஒப்புதல் அளித்தது. இதன் மூலம், மதுரை மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 3,076-லிருந்து 3,082-ஆக உயர்ந்தது.

கப்பலூர் பகுதியில் இன்று மின் தடை

திருப்பரங்குன்றம், நவ. 12: திருமங்கலத்தை அடுத்த கப்பலூர், நிலையூர் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளிக்கிழமை (நவ. 13) மின் தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டது.



இதுகுறித்து திருமங்கலம் மின் வாரிய செயற்பொறியாளர் பி. முத்தரசு வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கப்பலூர் துணை மின் நிலையத்துக்கு உள்பட்ட பகுதிகளில் வெள்ளிக்கிழமை மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெறுகிறது.

இதனால், கப்பலூர், கருவேலம்பட்டி, சம்பக்குளம், பரம்புப்பட்டி, மெட்கோ, தியாகராஜர் ஆலை, ஜே.எஸ். அவென்யூ, புளியங்குளம், சொக்கநாதன்பட்டி, தர்மத்துப்பட்டி, உச்சப்பட்டி, டி.என்.ஹெச்.பி. குடியிருப்பு, தனக்கன்குளம், நிலையூர், கைத்தறி நகர், ஹார்விபட்டி. பி.ஆர்.சி. குடியிருப்பு, மகளிர் தொழில்பேட்டை, கப்பலூர் தொழில்பேட்டை, ஹைடெக் ஆட்டோமொபைல், வேடர் புளியங்குளம், எச்.பி.எல்., கப்பலூர் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, கூத்தியார்குண்டு, தோப்பூர், முல்லைநகர், எஸ்.ஆர்.வி. நகர், இந்திராநகர், ஆலை குடியிருப்பு, இந்தியன் எண்ணெய், எரிவாயு நிறுவனம் ஆகிய பகுதிகளில் அன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் இருக்காது என்றார் அவர்.

விவசாயிகளுக்கு விளைநிலம் காப்போம் பயிற்சி முகாம்

திருப்பரங்குன்றம், நவ. 12: திருப்பரங்குன்றம் வட்டாரம், விராதனூர் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு அங்கக சான்றளிப்பு, விளைநிலம் காப்போம் பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த முகாமுக்கு திருப்பரங்குன்றம் வேளாண்மை உதவி இயக்குநர் மீனாட்சி சுந்தரம் தலைமை வகித்து, இயற்கை முறை வேளாண்மையைக் காப்பதன் அவசியம் குறித்து விளக்கிக் கூறினார். விதைச் சான்று அலுவலர் நித்யா, அங்கக சான்று பெறுவதற்கான நடைமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

வேளாண்மைக் கல்லூரிப் பேராசிரியர் சரவணன், விளைநிலத்தைப் பாதுகாத்தல் குறித்தும், வேளாண்மை அலுவலர்கள் அருள், நவமணி, விஜயபாரதி ஆகியோர் மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் உரங்களைப் பயன்படுத்துவது, வேளாண் துறைத் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

துணை வேளாண்மை அலுவலர் அழகேசன், பயிர்க்காப்பீடு, உழவர் அடையாள எண் பதிவு, பி.எம். கிசான் திட்டம் குறித்து விளக்கினார். தொடர்ந்து, கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் என்.எம்.வி. வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவி கயல்விழி மண்புழு உரம் தயாரிப்பு, அதன் பயன்கள் குறித்து பேசினார்.

முகாமுக்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் லதா, உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர், மகாலட்சுமி ஆகியோர் செய்தனர். இதில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

விசாரணையின் போது இளைஞர் உயிரிழப்பு: சிபிசிஐடி பதிலளிக்க உத்தரவு

மதுரை, நவ. 12: காவல் துறையினரின் விசாரணையின் போது இளைஞர் ஆகாஷ் டெலிசன் உயிரிழந்த விவகாரத்தில் சிறப்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்யக் கோரிய மனு தொடர்பாக சிபிசிஐடி தரப்பில் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வியாழக்கிழமை உத்தரவிட்டது.

சிவகங்கை மாவட்டம், மானாமதுரையைச் சேர்ந்த ராஜேஷ் கண்ணன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

எனது மகன் ஆகாஷ் டெலிசனுக்கும் மாற்றுச் சமூகத்தைச் சேர்ந்த சிலருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதையடுத்து, மானாமதுரை காவல் நிலைய போலீஸார் கடந்த மார்ச் 6-ஆம் தேதி எனது மகனைக் கைது செய்தனர்.



இந்த நிலையில், கைது செய்த போது தப்பிக்க முயன்ற ஆகாஷ் டெலிசனுக்கு காயம் ஏற்பட்டு சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக போலீஸார் தரப்பில் கூறப்பட்டது. அங்கு அவரிடம் விசாரித்த நீதித் துறை நடுவரிடம், காவல் துறையினர் தன்னைத் தாக்கியதாக தெரிவித்தார். பின்னர், அவர் தீவிர சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் கடந்த மார்ச் 8-ஆம் தேதி உயிரிழந்தார்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை சிபிசிஐடி-க்கு மாற்றப்பட்டது. இதையடுத்து, வன் கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட காவலர்கள் திலீபன், குகன், மகேந்திரன், காளீஸ்வரன், தெய்வேந்திரன், பழனியப்பன் ஆகிய 6 பேரும் நீதிமன்றத்தில் விசாரணைக்கு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முன்னிலையாகினர். ஆனால், என்னை நீதிமன்றத்துக்குள் செல்லவிடாமல் போலீஸார் தடுத்தனர்.

இதையடுத்து, இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு தலா ரூ.20 ஆயிரம் மதிப்பிலான பிணையுடன் தனிப்பட்ட பிணைப் பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது சட்டத்துக்கு புறம்பானது.

எனவே, சிறப்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து, குற்றஞ்சாட்டப்பட்ட வர்களைக் கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதி டி.லிங்கேஸ்வரன் முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, இந்த மனு தொடர்பாக சிபிசிஐடி தரப்பில் பதிலளிக்க வேண்டும். வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது என நீதிபதி உத்தரவிட்டார்.

செவிலியர்கள் ஆர்ப்பாட்டம்

மதுரை, நவ. 12: பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை வளாகத்தில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தொகுப்பூதியத்தில் பணியாற்றும் செவிலியர்களை குறைந்த ஊதியத்தில் பணி நிரந்தரம் செய்யும் முடிவைக் கைவிட்டு, அவர்களுக்கு முழு ஊதியத்துடன் பணி நிரந்தரம் வழங்க வேண்டும். காலியாக உள்ள 2,500 செவிலியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். ஒப்பந்தப் பணி முறையை முழுமையாகக் கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



மதுரையில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தினர்.

இதற்கு தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தின் மாவட்டத் தலைவர் வி.பிரேமலதா தலைமை வகித்தார். மாவட்ட இணைச் செயலர்கள், துணைத் தலைவர்கள் முன்னிலை வகித்தனர். மாநில துணைத் தலைவர் சி.க.சுஜாதா தொடக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலர் மு.தாமரைச்செல்வி கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் இரா. தமிழ், பொருளாளர் ஆ.பரமசிவன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலர் க.நீதிராஜா நிறைவுரையாற்றினார். முன்னதாக, தமிழ்நாடு செவிலியர் மேம்பாட்டு சங்க மாநிலச் செயற்குழு உறுப்பினர் டி.ராஜி வரவேற்றார். மாவட்டப் பொருளாளர் லூ.சகாய டெய்சி நன்றி கூறினார்.

கனரா வங்கி Canara Bank

Fincaz Syndicate

வாடிப்பட்டி கிளை

அசையா சொத்துக்களை கையகப்படுத்துதல் அறிவிப்பு - விதி 13(4)

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002ன் (சட்டம் 54/2002) (Securitisation & Reconstruction of Financial Assets & Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules 2002 கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிடப்பட்ட **கனரா வங்கி, வாடிப்பட்டி கிளை** யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம் மேற்படி சட்டம் பிரிவு 13(12) விதி 3-ன் படி 20.08.2026 தேதிய கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன் தொகையான **ரூ.15,98,733.95/-** (ரூபாய் பதினைந்து இலட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து எழுநூற்று மூப்பத்து மூன்று மற்றும் பைசா தொன்னூற்று ஐந்து மட்டும்) + மற்றும் வட்டி சேர்த்து இந்த அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் நிலுவை தொகை வட்டியுடன் திரும்பச் செலுத்த வேண்டுமென்று கடன்தாரர் M/s. MUTHUKUMARAN AGRO CORPORATION அதன் உரிமையாளர் மற்றும் உத்திரவாதி திரு.**B.கண்ணன்** என்பவருக்கு அனுப்பப்பட்டது.

கடன் பெற்ற நபர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால் குறிப்பாக கடன் பெற்ற நபருக்கும், உத்திரவாதிக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி 13(4) துணை பிரிவின் சட்டம் 8&9ன்படி கீழே கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும் விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **11.11.2026** அன்று கீழேகையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்.

இது முதற்கொண்டு குறிப்பாக கடன் பெற்றவரோ அல்லது பொதுமக்களோ இந்தச் சொத்தின் பேரில் எவ்வித பரிவர்த்தனையும் வைத்துக் கொள்ள வேண்டாம் என்றும் அப்படி ஏதேனும் மேற்கொண்டால் அது, **கனரா வங்கி, வாடிப்பட்டி கிளையின் 17.08.2026** வரை சேரவேண்டிய பாக்கி கடன் தொகை **ரூ.15,98,733.95/-** (ரூபாய் பதினைந்து இலட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து எழுநூற்று மூப்பத்து மூன்று மற்றும் பைசா தொன்னூற்று ஐந்து மட்டும்) மற்றும் 18.08.2026 விருந்து பின்வட்டியும், பிற செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

மேற்படி சட்டம் 2002, சார் பிரிவு (8), பிரிவு 13-ன்படி இந்த கால அவகாசத்திற்குள் மேற்படி நிலுவைத் தொகையினை செலுத்துவதற்கு சம்பந்தப்பட்ட கடனாளிகளின் கவனம் வரவேற்கப்படுகிறது.

அசையாச் சொத்துக்களின் விவரம்

திரு. B.கண்ணன் பெயரிலுள்ள சொத்து:

Item No. 1 : திண்டுக்கல் மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், வாடிப்பட்டி சார்பதிவு மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், ராமராஜபுரம் கிராமத்தில் அமைந்துள்ள நிலம் மற்றும் அதன் மீதான கட்டுமானங்கள்; பழைய கதவு எண் 5/77 (புதிய கதவு எண் 5/63) கொண்டதும், பழைய நத்தம் சர்வே எண் 4/1A-க்கு தொடர்புடைய புதிய நத்தம் சர்வே எண் 48/6-ல் அமைந்ததும், 1354 சதுர அடி பரப்பளவு கொண்டதுமான இந்நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு:** கிழக்கு-மேற்குத் தெரு. **தெற்கு:** கிழக்கு-மேற்குப் பாதை. **கிழக்கு:** திரு. M. சுப்பையா பிள்ளை அவர்களின் காலி மனை, **மேற்கு:** வடக்கு-தெற்கு 4 அடி அகலமுள்ள பொது வழிப்பாதை - **அளவீடுகள்:** வடக்கு பக்கம் கிழக்கு-மேற்காக: 28 1/2 அடி, தெற்கு பக்கம் கிழக்கு-மேற்காக: 28 1/2 அடி, கிழக்கு பக்கம் வடக்கு-தெற்காக: 47 1/2 அடி, மேற்கு பக்கம் வடக்கு-தெற்காக: 47 1/2 அடி

மொத்தப் பரப்பளவு: 1354 சதுர அடி

Item No. 2 : பழைய நத்தம் சர்வே எண் 49/1-க்கு தொடர்புடைய புதிய நத்தம் சர்வே எண் 281/18-ல் அமைந்துள்ள, 819 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி மனை. இதன் எல்லைகள் பின்வருமாறு: - **வடக்கு:** கிழக்கு-மேற்குத் தெரு. **தெற்கு:** கிழக்கு-மேற்குப் பாதை. **கிழக்கு:** திரு. கிருஷ்ணகோன் மற்றும் திருமதி லட்சுமி அம்மாள் ஆகியோரின் காலி மனை. **மேற்கு:** கீழே பொருள் எண் 3-ல் விவரிக்கப்பட்டுள்ள சொத்து - **அளவீடுகள்:** - வடக்கு பக்கம் கிழக்கு-மேற்காக 18 அடி, தெற்கு பக்கம் கிழக்கு-மேற்காக 18 அடி, கிழக்கு பக்கம் வடக்கு-தெற்காக 45 1/2 அடி, மேற்கு பக்கம் வடக்கு-தெற்காக 45 1/2 அடி - **மொத்தம் 819 சதுர அடி**

Item No. 3 : பழைய நத்தம் சர்வே எண் 49/1-க்கு தொடர்புடைய புதிய நத்தம் சர்வே எண் 281/17-ல் அமைந்துள்ள, 409 1/2 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி மனை. இதன் எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு:** கிழக்கு-மேற்குத் தெரு. **தெற்கு:** கிழக்கு-மேற்குப் பாதை. **கிழக்கு:** மேலே பொருள் எண் 2-ல் விவரிக்கப்பட்டுள்ள சொத்து. **மேற்கு:** மேலே பொருள் எண் 1-ல் விவரிக்கப்பட்டுள்ள சொத்து. **அளவீடுகள்:** - வடக்கு பக்கம் கிழக்கு-மேற்காக 9 அடி, தெற்கு பக்கம் கிழக்கு-மேற்காக 9 அடி, கிழக்கு பக்கம் வடக்கு-தெற்காக 45 1/2 அடி, மேற்கு பக்கம் வடக்கு-தெற்காக 45 1/2 அடி - **மொத்தம் 409 1/2 சதுர அடி**

ஆக 3 சொத்துகளின் மொத்த பரப்பளவு 2582 சதுர அடி.

தேதி: 11.11.2026
இடம்: மதுரை.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கனரா வங்கி

IndusInd Bank இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட்
எண் 36, கோபதி நாராயணசுவாமி செட்டி (G.N.) சாலை, தி. நகர், சென்னை-600017.

பிற்சேர்க்கை IV-A[விதி 8(6)-இன் வரம்புரையைக் காண்க]
அசையாச் சொத்தை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

கடன்பட்டுள்ள கொர்க்கமர்களுக்கும் மற்றும் கடன்பட்டுள்ள மற்றும் கடன்பட்டுள்ள சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் அதனுடன் கடன்பட்டுள்ள சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)-இன் கீழ் அளிக்கப்பட்டது. அதன்படி கடன்பட்டுள்ள சொத்தை விற்பனை செய்வதற்கான பின்னணி ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் கொடுக்கப்பட்டுள்ள பாலனர்களும் கடன்தாரர்(கள்) மற்றும் தாமின்தார்(கள்) ஆகியோருக்கும் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், எந்த பொறுக் கடனளித்த நிறுவனத்துக்கு அடமானம் வைக்கப்பட்ட / பற்றுவைக்கப்பட்டுள்ள M/s. இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் 11.09.2026 அன்று தேதி வைக்கப்பட்டுள்ள அமலாக்க கீழே விவரிக்கப்பட்டுள்ள கடன்பட்டுள்ள சொத்து, கடன்தாரான M/s. எட்கோகார் சொல்யூஷன் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஜாமின்தார்களான திரு. முருகன் பட மற்றும் திருமதி. நூல்லை தேவி ஆகியோரிடமிருந்து இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட்டுக்கு 31.10.2026 தான்படி வர வேண்டிய ரூ.78,14,541.53/-(ரூபாய் எழுபத்தெட்டு இலட்சத்து பதினான்காயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்று மற்றும் ஐம்பத்து மூன்று பைசா மட்டும்) தொகைகளுடனும் மற்றும் வரவேண்டிய மேல்பட்டி மற்றும் செலவுகள், கட்டணங்கள், செலவினங்களுடன் திருப்பப் பெறும் பொருட்டு,"உள்ளது உள்ள இடத்தில்","உள்ளது உள்ளது","உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் அடிப்படையில் 11.12.2026 அன்று ஏடு பொதுக் கடனளித்த நிறுவனத்தால் விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரரின் பெயர்	M/s. எட்கோகார் சொல்யூஷன் பிரைவேட் லிமிடெட்
	திரு.MV சாமி ரால் அவர்களின் மகன் திரு.MS யாதவன் பாபு அவர்களின் சொத்து. விற்பனைப் பத்திர ஆவண எண் 623/2003, நாள் 19-02-20203. மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், சம்பந்தர் ஆலங்குளம், தாமரை மலர் தெரு, கதவு எண் 7-15/1 கொண்ட நிலமும் கட்டடமும், இன்னியமையப் பகுதிகள் அனைத்தும் கூடிய சொத்து. பழைய சர்வே எண் 17/2, பின்னர் R.S. எண் 35/3, தற்போதைய புதிய R.S. எண் 35/3A-இல் அடங்கிய மனை எண் D-இன் வடமேற்குப் பகுதி.(மதுரை மேற்கு வரைட்சி ஒன்றிய ஆணையரால் 21.09.1981 நாளிட்ட அனுமதி எண் 9428/81A-2-இன்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு.) பரப்பளவு 851 சதுர அடி, கட்டடம் மற்றும் இதர வசதிகளுடன் கூடியது. எல்லைகள்: வடக்கு: கிழமேலாகச் செல்லும் 20 அடி அகலப் பொதுச் சாலை; தெற்கு: திரு. குலசேகரனுக்குச் சொந்தமான மனை எண் D(தெற்குப் பக்கம்) கொண்ட நிலம்; கிழக்கு: திரு. குலசேகரனுக்குச் சொந்தமான 5 அடி அகலக் காலி மனை; மேற்கு: திரு. ரா்மாஜுக்குச் சொந்தமான மனை எண் C. அளவுகள்: கிழமேலாக வடபுறம் 23 அடி, கிழமேலாகத் தென்புறம் 23 அடி, தென்வடலாகக் கிழக்குப்புறம் 37 அடி, தென்வடலாக மேற்குப்புறம் 37 அடி. மதுரை வடக்குப் பதிவு மாவட்டம் மற்றும் சொக்கிகுளம் சார்பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.
குறைந்தபட்ச விலை:	ரூ.36,19,050/-(ரூபாய் மூப்பத்தாறு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து ஐம்பது மட்டும்)
டேவணித்தொகை (குறைந்தபட்ச விலையில் 10%):	ரூ.3,61,905/-(ரூபாய் மூன்று இலட்சத்து அறுபத்தோராயிரத்து தொள்ளாயிரத்து ஐந்து மட்டும்)
தெரிந்த விவரங்கள், ஏதும் இருப்பின்	வங்கிக்குத் தெரிந்த வரையில் ஏதுமில்லை.

சொத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் ஏதும் இருப்பின் அவையும், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்துக்குத் தெரிந்த இதர நிலுவைகள் மற்றும் மதிப்பும்: வங்கிக்குத் தெரிந்த வரையில் அறியப்படவில்லை.

சொத்து ஆய்வு:04/12/2026 அன்று முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை.

தொடர்பு நபர் மற்றும் தொலைபேசி எண்: செல்வி.A. கிருஷ்ணகுமாரி (அதிகாரப்பூர்வ அலுவலர்), கைப்பேசி எண்:9342332287, மின்னஞ்சல்:Krishnakumari.A@indusind.com; திரு. கமல் மிஸ்ரா, கைப்பேசி எண்:9819820760.

ஏலப்புள்ளி சமர்ப்பிக்கக் கடைசி நாள்:10/12/2026, மாலை 04.00 மணி வரை.

ஏலப்புள்ளி திறக்கும் நேரம் மற்றும் இடம்: மின்னணு ஏலம் / ஏலக்கேட்பு இணையதளம் மூலம்:https://www.bankeauctions.com-இல் 11/12/2026 அன்று முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை.

ஏல உயர்வுத் தொகை ரூ.50,000/-

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், சம்பந்தப்பட்ட சொத்தின் மின்னணு ஏலம் / விற்பனை மற்றும் பிற விவரங்களுக்கு, மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கான ஏலப்புள்ளிகளைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் இணையதளமான https://www.indusind.com-இல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைக் காணவும். ஏலதாரர்கள் https://www.bankeauctions.com இணையதளத்தையும் பார்வையிடவும் அல்லது சேவை வழங்குநரான M/s.C1 இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும். ஏலதார் உதவி எண்கள்:0124-4302020/21/22, +917291981124/1125/1126; மின்னஞ்சல்:support@bankeauctions.com. திரு. பிரபாகர், தொடர்பு எண்:+917418281709.

SARFAESI சட்டம் 2002-இன் கீழான SARFAESI விதிகள், விதி 8, உட்விதி 6-க்கு இணங்க, இந்த 30 நாள் அறிவிப்பு தாங்கள் அனையருக்கும் வழங்கப்படுகிறது.

இடம்: சென்னை
நாள்:11.11.2026

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
இண்டஸ்இண்ட் வங்கி லிட்.

sf | **சுந்தரம் ஹோம்**
- சுந்தரம் ஃபைனான்ஸ் குழுமம் -

பதிவு அலுவலகம்:எண்.21, பட்டுலாஸ் சாலை, சென்னை 600002
நிறுவன அலுவலகம்:அந்தரம் டவர்ஸ், எண்.46, ஓல்டீஸ் சாலை, சென்னை 600014
கிளை அலுவலகம்: கதவு எண் 422/4A, முதல் தளம், நேருஜி சாலை, வார்டு எண் 17, தேனி அல்லிநகரம் நகராட்சி, தேனி - 625531

கவாதின அறிவிப்பு

சட்டம் பிரிவு 13(4) மற்றும் பிற்சேர்க்கை IV மற்றும் 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(1)-ன் கீழ் அளிக்கப்பட்டது.

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் (SARFAESI) கீழ், சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட்-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மற்றும் சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் (விதிகள்) கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தார் திருமதி. தனலட்சுமி K மற்றும் இணை-கடன்தார் திரு. கிருஷ்ணராஜ் N அவர்களுக்கு சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் 08-08-2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி அந்த அறிவிப்புத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், அதில் காணும் கடன் கணக்கு எண்.STH20240137-ல் 08-08-2026 அன்றுள்ளபடி பாக்கித் தொகை ரூ.4,71,247/- (ரூபாய் நான்கு லட்சத்து எழுபத்தோராயிரத்து இருநூறது நாற்பத்தேழு மட்டும்) மற்றும் அத்தொகை உண்மையில் செலுத்தப்படும் தேதிவரை அதன் மீதான வட்டி, செலவ

அங்கன்வாடி குழந்தைகளுக்கும் கேக் வழங்கக் கோரிக்கை

மதுரை, நவ. 12: பள்ளிக் கல்வித் துறையின் கீழ் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு குழந்தைகள் தினத்தையொட்டி கேக், வாழ்த்து அட்டை வழங்குவதைப் போல, அங்கன்வாடி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டும் என தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி கோரிக்கை விடுத்தது.

இதுகுறித்து தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மதுரை மாவட்டச் செயலர் பெ. சீனிவாசகன் தமிழக முதல்வருக்கு அனுப்பிய கோரிக்கை மனு:

முன்னாள் பிரதமர் ஜவாஹர்லால் நேருவின் பிறந்த நாளான நவம்பர் 14-ஆம் தேதி ஆண்டு தோறும் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நிகழாண்டு குழந்தைகள் தினத்தையொட்டி, பள்ளிக் கல்வித் துறையின் கீழ் பயிலும் அரசு, அரசு உதவிபெறும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கேக், வாழ்த்து அட்டை வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்து, அதற்கான நிதியையும் ஒதுக்கியது. இதன்படி, அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கேக், வாழ்த்து அட்டைகள் வழங்கப்படுகின்றன.

எனவே, குழந்தைகள் தின விழாவை அனைத்து குழந்தைகளும் சமமாகக் கொண்டாடும் வகையில், நிகழாண்டு முதலே அங்கன்வாடி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கும் கேக், வாழ்த்து அட்டைகள் வழங்க தமிழக முதல்வர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

2.69 லட்சம் மாணவர்களுக்கு கேக் வழங்க ஏற்பாடு

மதுரை, நவ. 12: குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, மதுரை மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த 2.69 லட்சம் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், பள்ளி அலுவலகப் பணியாளர்களுக்கு கேக் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மதுரை மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலருமான கொ.வீரராகவராவ், மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா ஆகியோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் காணொலி காட்சி வாயிலாக வியாழக்கிழமை ஆலோசனை நடத்தினர்.

இதில் மாவட்ட கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது, குழந்தைகள் தினத்தையொட்டி பள்ளி மாணவர்களுக்கு கேக் வழங்குவதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள், கேக் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மதுரை மாவட்டத்தில் உள்ள 1,544 அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், பள்ளி அலுவலகப் பணியாளர்கள் என மொத்தம் 2,69,023 பேருக்கு கேக் வழங்கப்பட உள்ளது.



மதுரை சௌனாய்நகரில் உள்ள இளங்கோ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு வரப்பெற்ற கேக்குகளை வியாழக்கிழமை ஆய்வு செய்த மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத் துறைச் செயலருமான கொ. வீரராகவராவ். உடன் மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா உள்ளிட்டோர்.

இதைத் தொடர்ந்து, மதுரை சின்னசொக்கிகுளத்தில் உள்ள காக்கைப்பாடினியார் மாநகராட்சி பெண்கள் பள்ளி, சௌனாய் நகரில் உள்ள இளங்கோ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியிலும் மாணவ, மாணவிகளுக்கு வழங்குவதற்காக வரப்பெற்ற கேக் பெட்டிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள், எண்ணிக்கை, கேக்கின் தரம் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்து, வீரராகவராவ் ஆலோசனை வழங்கினார்.

அப்போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தயாளன், மாநகராட்சி கல்வி அலுவலர் சரவணமுருகன், பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

புதை சாக்கடை சீரமைப்புப் பணிகள்: மாநகராட்சி ஆணையர் ஆய்வு



மதுரை செல்லூர் கட்டபொம்மன் நகரில் நடைபெற்று வரும் புதை சாக்கடை சீரமைப்புப் பணிகளை வியாழக்கிழமை ஆய்வு செய்த மாநகராட்சி ஆணையர் கௌரவ் குமார். உடன் துணை ஆணையர் ஜெய்னுலாப்தீன் உள்ளிட்டோர்.

மதுரை, நவ. 12: மதுரை செல்லூர் கட்டபொம்மன் நகரில் நடைபெற்று வரும் புதை சாக்கடை சீரமைப்புப் பணிகளை மாநகராட்சி ஆணையர் கௌரவ் குமார் வியாழக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது, சீரமைப்புப் பணிகளை விரைந்து முடிக்கவும், பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படாத வகையில் பணிகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார். தொடர்ந்து, செல்லூர் 50 அடி சாலையில் உள்ள கால்வாயைப் பார்வையிட்டு, மழைக்காலங்களில் மழைநீர் தேங்காத வகையில் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

மேலும், அந்தப் பகுதியில் குவிந்திருந்த குப்பைகளை உடனுக்குடன் அகற்றவும், குப்பைகள் அதிகமாகச் சேரும் இடங்களில் கூடுதல் வாகனங்களைப் பயன்படுத்தி அவற்றை அகற்றி, சுற்றுப்புறத்தை தூய்மையாகப் பராமரிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது துணை ஆணையர் ஜெய்னுலாப்தீன், மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஒருவரின் ஓ.பி.சி. தகுதி நிலையானதல்ல

மதுரை, நவ. 12: மத மாற்றத்தால் ஒருவருக்கு கிடைக்கும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ஓ.பி.சி.) என்ற தகுதி நிலையானதல்ல என சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வியாழக்கிழமை தெரிவித்தது.

மதுரையைச் சேர்ந்த கோடீஸ்வரன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 அட்டவணை-1 பகுதி ஏ-வில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பட்டியலில் சில கிறிஸ்தவப் பிரிவுகள், மதம் மாறிய சில பிரிவினர் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் அரசமைப்புச் சட்டப்படி சமூக, கல்வி ரீதியாக தங்களின் பின்தங்கிய நிலையை உறுதிப்படுத்த எந்த ஆய்வுக்கும் உள்படுத்தப்படாமல் பிற்படுத்தப்பட்ட பிரிவினராகக் கருதப்படுகின்றனர்.

கடந்த 1970-ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவராக இருந்த ஏ.என். சட்டநாதன் வெளியிட்ட அறிக்கையும், கடந்த 1985-ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவராக இருந்த ஜே.ஏ. அம்பாசங்கர் வெளியிட்ட அறிக்கையும், மதம் மாற்றம் மூலம் சில பிரிவினர் பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளில் சேர்க்கப்படுவதை வெளிப்படையாக நிராகரிக்கிறது.



இருப்பினும், உரிய தரவுகளின்றி அரசின் நிர்வாக உத்தரவுகள் மூலம் சில ஜாதியினர் மதம் மாற்றத்தால் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது, இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது. எனவே, கிறிஸ்தவ மதத்துக்கு மாறியவர்களை பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் பட்டியலிலிருந்து நீக்க வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், எம்.டி. சுமதி அமர்வு முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டுப் பட்டியலில் பல்வேறு கிறிஸ்தவப் பிரிவுகள், மதம் மாறிய சில பிரிவினரை சேர்த்ததன் தன்மை குறித்து விரிவான அரசமைப்புச் சட்டப் பரிசீலனை தேவைப்படுகிறது. ஓ.பி.சி. தகுதி என்பது நிலையானதல்ல. ஒருவர் ஓ.பி.சி. பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு தெளிவான காரணங்கள் இருக்க வேண்டும். இந்த விவகாரத்தில் அரசு தனது நியாயத்தை நீதிமன்றத்துக்கு நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளது.

ஒரு பிராமணர் மதம் மாறி சி.எஸ்.ஐ. சபையில் இணைந்தால், அவரும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வராகத் தகுதி பெற முடியும் என்ற மனுதாரரின் வாதம் உண்மையானால், இதுகுறித்து தீவிரமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

எனவே, இந்தவிவகாரத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகவும்பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர் நலத் துறை முதன்மைச் செயலர், மனித வள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலர் ஆகியோர் 8 வாரங்களுக்குள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றனர் நீதிபதிகள்.

வங்கிக் கடனை திருப்பி செலுத்தியவர்களுக்கு பாராட்டு

மதுரை, நவ. 12: பிரதமரின் சாலையோர வியாபாரிகளுக்கான ஆத்மநிர்பார் நிதித் திட்டத்தின் கீழ், மூன்று கட்ட வங்கிக் கடன்களையும் முறையாகச் செலுத்திய சாலையோர வியாபாரிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ், கேடயம் வழங்கப்பட்டது.

மத்திய அரசின் வீட்டு வசதி, நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம், நகராட்சி நிர்வாக இயக்குநரின் அறிவுறுத்தலின்படி, மதுரை மாநகராட்சி ஆணையர் கௌரவ்குமார் வழிகாட்டுதலின் பேரில், அறிஞர் அண்ணா மாளிகை கருத்தரங்கக் கூட்டரங்கில் ஆத்மநிர்பார் பெருவிழா புதன்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில் மேயர் (பொறுப்பு) தி. நாகராஜன் பங்கேற்று, மூன்று கட்ட வங்கிக் கடன்களையும் முறையாகத் திருப்பிச் செலுத்திய சாலையோர வியாபாரிகளுக்கும், பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய அவர்களது குழந்தைகளுக்கும் சான்றிதழ்கள், கேடயங்களை வழங்கிப் பாராட்டினார்.



பிரதமரின் ஆத்மநிர்பார் நிதித் திட்டத்தின் கீழ், மூன்று கட்ட வங்கிக் கடன்களையும் முறையாகச் செலுத்திய சாலையோர வியாபாரிக்கு சான்றிதழை வழங்கிய மேயர் (பொறுப்பு) தி. நாகராஜன் உள்ளிட்டோர்.

இந்தத் திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகளுக்கு எந்தவித பிணையும் இன்றி வங்கிக் கடனுதவி வழங்கப்படுகிறது. இதன்படி, மதுரை மாநகராட்சியில் இதுவரை முதல் கட்டமாக தலா ரூ.15,000 வீதம் 15,628 பேருக்கும், இரண்டாம் கட்டமாக தலா ரூ.25,000 வீதம் 8,713 பேருக்கும், மூன்றாம் கட்டமாக தலா ரூ.50,000 வீதம் 3,631 பேருக்கும் கடனுதவி வழங்கப்பட்டது. மேலும், மண்டலங்கள் வாரியாக சிறப்பு கடனுதவி முகாம்கள் நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் துணை ஆணையர் ஜெய்னுலாப்தீன், உதவி நகர் நல அலுவலர் அபிஷேக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கனரா வங்கி Canara Bank

சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I
எண். 524, மேது தளம், கனரா டவர்ஸ், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. போன்: 2849 6339/6900
e-mail id cb2361@canarabank.com, Website: www.canarabank.com

மின் ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரெக்கமாக்குதல் நிதி சொத்துக்களை பாதுகாத்தல் சட்டம் 2002 மற்றும் பிணைகாப்பு நிதி சொத்துக்கள் அமலாக்க சட்டம் 2002-ன் கீழ் உள்ள விதி எண். 8 (6)-ன் பிரிவு நிபந்தனைகளின்படி அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடு செய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை **சென்னை ஆயிரம் விளக்கு கிளை-ன்** அதிகாரபூர்வ அதிகாரியால் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்ட சொத்துக்களை **சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I**, சென்னை-க்கு மாற்றப்பட்டதிலிருந்து கனரா வங்கி சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I க்கு செலுத்த வேண்டிய **07.11.2026** அன்று வரை **ரூ.5,21,94,166.69 (ரூபாய் ஐந்து கோடியே இருபத்து ஒரு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து நூற்று அறுபத்து ஆறு மற்றும் பைசா அறுபத்து ஒன்பது மட்டும்)** மேலும் வட்டி மற்றும் வங்கியால் ஏற்படக்கூடிய அதற்குண்டான பிறக்கட்டணங்கள் சேர்த்து **M/s. ASPV இண்ட்ரேஷனல் புரடக்ஷன் பிரைவேட் லிமிடெட்,** 45, காசி டவர்ஸ், புலிவிச்சாலை, சென்னை- 600095. **திரு. சரவணன்.S.P,** எண் 45 காசி டவர், ஓம் சக்தி நகர், வானகரம், சென்னை - 600095. **திரு.விஜயால் பிரியன்.P,** த/பெ பாண்டியன், பாரதியார் தெரு, சங்கர் நகர், கொல்கேரி, கிருஷ்ணராயபுரம், திருவள்ளூர், தமிழ்நாடு - 601204. **திருமதி.V.ஷர்மிளா** க/பெ. வினோத் குமார், பழைய எண்.10, புதிய எண். 19, பாலாஜி தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600015. **திருமதி.அனிஸ் வினிதா,** 2/157, S P V நகர், கள்ளிக்குடி நாலுக்கா M புளியங்குளம், மதுரை - 625707. தமிழ்நாடு, ஆகியோர்களிடமிருந்து வருவிக்கும் கொருட்டு அசையா சொத்துக்களை **"உள்ளது உள்ளபடி" "உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **02.12.2026** அன்று (காலை 10.30 மணி முதல் 11.30 வரை) (ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் விற்பனை முடியும் வரை கால அளவு நீட்டிக்கப்படும்.) விற்பனை செய்யப்பட உள்ளது என்று இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

அசையா சொத்துக்களின் விவரங்கள் : சுவாதீன நிலை: அடையாளப்பூர்வ சுவாதீனம்,

திருமதி. சர்மினா.B அவர்கள் பெயரில் உள்ள சொத்து : (CERSAI ID: 400076524436): **வகை எண்.1 :** திருவள்ளூர் பதிவு மாவட்டம், திருத்தணி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட அகூர் கிராமம், புஞ்சை சர்வே எண்.346ன்படி **1 ஏக்கர் மற்றும் 52 சென்ட்,** புஞ்சை சர்வே எண்.345/2ன்படி **1 ஏக்கர் 58 சென்ட்** (79 சென்ட்+ 79 சென்ட்) சேர்த்து **மொத்த பரப்பளவு - 3 ஏக்கர் மற்றும் 10 சென்ட்.** மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பருதிகளும்.

வகை எண்.2 : திருவள்ளூர் பதிவு மாவட்டம், திருத்தணி துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட அகூர் கிராமம், புஞ்சை சர்வே எண்.345/3B, பட்டாவின்படி புஞ்சை சர்வே எண்.345/3B1ன்படி **மொத்தமுள்ள 1 ஏக்கர் 58 சென்டில் 95 சென்ட் நிலம்.** மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பருதிகளும். எல்லைகள் : வடக்கில் : சர்வே எண்.345/2, தெற்கில் : சர்வே எண்கள்.345/4 மற்றும் 346/2, கிழக்கில் : சர்வே எண்கள். 346/1 மற்றும் 346/2, மேற்கில் : திரு. R. சந்திரமோகன் அவர்களின் மீதமுள்ள நிலம்.

குறைந்த பட்ச விலை : ரூ.3,70,47,000/- | டெபாசிட்தொகை : ரூ.37,04,700/- | ஏல உயர்வு தொகை : ரூ.1,00,000/-

மின் ஏல தேதி / நேரம் : 02.12.2026
அன்று காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை
ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் விற்பனை முடியும் வரை கால அளவு நீட்டிக்கப்படும்.

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் :
30.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

டேவணி தொகை செலுத்த கடைசி தேதி : குறைந்த பட்ச விலையில் 10% டேவணி தொகையை M/s.PSB அலையன்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் E-wallet (BAANKNET) என்ற போர்டலில் நேரடியாகவே அல்லது டேவணி தொகையை Challan எடுத்து RTGS / NEFT மூலமாக Challan-ல் குறிப்பிட்டுள்ள கணக்கு விவரத்தில் **01.12.2026 அன்று அல்லது அதற்கு முன்பு மாலை 5.00 மணிக்குள்** செலுத்த வேண்டும்.

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் வலைதளத்தில் (www.canarabank.com) "E-Auction" இணைப்பில் தெரிந்து கொள்ளலாம் அல்லது கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை I, சென்னை (தொலைபேசி எண்.044-2849 6339 / 2849 6900), cb2361@canarabank.com என்ற மின் அஞ்சலில் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும் அல்லது ஏல சேவை வழங்குநரின் விவரங்கள்: Baanknet (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No. 7046612345 / 6354910172/ 8291220220/ 9892219848 / 8160205051, **மின்னஞ்சல்:** support.baanknet@psballiance.com/ support.baanknet@procure247.com).
மின் ஏல போர்டல்: https://baanknet.com

இந்த சொத்து வங்கியின் அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது மற்றும் ஏல கொள் முதல்தாரர் நிலையான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடுதலாக பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.

1. சொத்து அடையாளப்பூர்வ சுவாதீனத்தில் உள்ளது மற்றும் ஏல கொள்முதல்தாரர் தனது சொந்த முயற்சியிலேயே மற்றும் பொறுப்பில் சொத்தை கொள்முதல் செய்ய வேண்டும். **2.** அசல் சுவாதீனத்தை ஒப்படைப்பதற்கு வங்கி பொறுப்பேற்காது. **3.** வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு உரிமை கோருவதற்கு உரிமை இல்லை. **4.** வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் மின்-ஏலத்திற்கு பிறகு மேற்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள மேற்படி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை (1 முதல் 3 வரை) உறுதிப்படுத்தும் உறுதிமொழி உடன்படிக்கையை உடனடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். **5.** விற்பனைக்குப் பிறகு, வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் பிரகடனத்தையும் ஒப்புக்கொள்ளும் சமர்ப்பிக்கத் தவறினால் ஏல முன்வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படும்.

தேதி : 10.11.2026
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அதிகாரி, கனரா வங்கி

இந்தியா நிப்பான் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம் : எண். 11 & 13, மட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600 002.
போன்: 044-28460073. இணையதளம் : https://indianippon.com இமெயில் : investors@inel.co.in CIN : L31901TN1964PLC011021

30 செப்டெம்பர் 2025க் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகளின் சாரம்

(ரூ. லட்சத்தில் பங்கொன்றுக்கு ஈட்டிய தொகை தவிர)

வ.எண்.	விவரங்கள்	காலாண்டு முடிய		அரையாண்டு முடிய	ஆண்டு முடிய
		30 செப்டெம்பர், 2026	30 செப்டெம்பர், 2025	30 செப்டெம்பர், 2026	31 மார்ச், 2026
		தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்தது
1	செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் (நிகரம்)	34,748	27,256	65,196	1,06,848
2	வரிக்கு முந்தைய காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்)	2,853	3,208	6,337	14,601
3	வரிக்கு பிந்தைய காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்)	2,181	2,320	4,884	11,126
4	நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் / (நஷ்டம்) {நடப்புக் காலத்திற்கு வரிக்குப்பின் இலாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப்பின் இதர விரிவான வருமானம் / (நஷ்டம்) உள்ளடங்கியது}	3,441	5,052	4,708	14,550
5	சமபங்கு மூலதனம்	1,131	1,131	1,131	1,131
6	இதர மதிப்பீடுகள்	81,002 31 மார்ச், 2026 வரை			
7	பங்கொன்றுக்கு ஈட்டிய வருமானம் (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (ரூ.5/- ஒவ்வொன்றுக்கும்) அடிப்படை : / நுண்ணிய :	9.64 / 9.64	10.26 / 10.26	21.59 / 21.59	49.18 / 49.18

குறிப்பு SEBI-ன் (LODR) விதிகள் 2015-ன் படி விதி 33-ன் கீழ் பங்குபரிவர்த்தனைகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதி அறிக்கை விவரங்களின் சாரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. நிதிநிலை அறிக்கைகளின் முழு வடிவம் பங்குபரிவர்த்தனையின் இணையதளங்களான www.bseindia.com/www.nseindia.com மற்றும் நிறுவன இணையதளமான https://indianippon.com-ல் கிடைக்கப்பெறும்.

இடம் : சென்னை
தேதி : 12.11.2026

இயக்குநர்கள் சார்பில்
அஜித் மாலாரி
நிர்வாக இயக்குனர்
DIN: 00557711

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
மண்டல அலுவலகம், திருச்சி.

நகை ஏல அறிவிப்பு

எங்கள் நிறுவனத்தில் **30.09.2025** வரை நகைக்கடன் மற்றும் **31.03.2026** வரை சிறுநு நகைக்கடன் திட்டத்தின்கீழ் ஈடு வைக்கப்பட்டு காலவரையறை முடிந்தும் திருப்பப்படாத நகைகள் கெடு முடிவடைந்துள்ளது. மேற்படி நகைக்கடன்களுக்கு உரிய கடன்தாரர்களுக்கு சாதாரண தபால் மற்றும் ஏலதாரர் மூலமாக பதிவு தபால் அனுப்பியும் ஈடு வைக்கப்பட்ட நகைகளை மீட்கவோ அல்லது கடன்களை புதுப்பிக்கவோ இல்லை. அதனால் சம்பந்தப்பட்ட கடன்களுக்கு உரிய ஈடு வைக்கப்பட்ட நகைகளை நிறுவனத்தின் விதிப்படி கீழ்கண்ட விபரப்படி ஏலம் விடப்படும். நகை அடகு வைத்தவர் இறந்து இருந்தாலும், வெளியூர் சென்றிருந்தாலும் இந்த அறிவிப்பு அவர்கள் வாரிசுகளும் பொருந்தும். பதிவு தபால் கிடைக்கப் பெறாதவர்களுக்கும், முகவரி மாற்றம் செய்தவர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலத்திற்கு வரும் பாக்கெட்டுகளில் குறிப்பிட்ட பாக்கெட்டுகளை ஏலம் விடாமல் நிறுத்தி வைப்பதற்கு நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

ஏல தேதி	நேரம்	நகை ஈடு வைக்கப்பட்டுள்ள கிளைகள் மற்றும் நகைக்கடன் எண்	ஏலம் நடைபெறும் இடம்	நகை மீட்க கடைசி தேதி
20.11.2026	காலை 10.00 மணி	அரும்பலோட்டை, ராஜபாளையம், சாத்தூர், சிவகாசி-II & விருதுநகர்.	ஒ.105, மதுரை மெயின் ரோடு, ஆக்சிஸ் வங்கி மாடியில், விருதுநகர்-626 001.	18.11.2026
நகைக்கடன் எண் : - ARPK2378410, ARPK2378506, ARPK2378553, ARPK2378617, ARPK2378619, ARPK2378658, ARPK2378737, ARPK2378797, ARPK2378915, ARPK2378922, ARPK2378950, ARPK2378975, ARPK2379003, ARPK2379081, ARPK2379083, ARPK2379087, RUY2366705, SATTH364646, SATTH364673, SATTH365048, SATTH365122, SATTH365440, SATTH365587, SATTH365729, SATTH365742, SATTH365793, SATTH365883, SATTH365999, SATTH366018, SATTH366347, SATTH366359, SIKA2370691, SIKA2370694, VRDN1365452, VRDN1366032, VRDN1366104, VRDN1366105, VRDN1366106, VRDN1366246, VRDN1366246, VRDN1366336, VRDN1366503.				
20.11.2026	நண்பகல் 12.00 மணி	காரியாபட்டி - திருத்தங்கல் STFC BRANCHES	ஒ.103/AC, N R GRAND, KATCHERRY ரோடு, மதுரை மெயின் ரோடு, விருதுநகர்-626 001.	18.11.2026
நகைக்கடன் எண் : - KRPTI1656, KRPTI1656TOPUP, TTNGL000600.				
20.11.2026	மதியம் 2.00 மணி	ஆரப்பாளையம், பெத்தானியபுரம், கொக்கிகுளம், சோழவந்தான், தெற்குவீதித்துரை, காளவாசல், கே.புதூர்-II, அண்ணாநகர், மேலூர் & திருநகர்.	ஒ.77/2, 2வது தளம், ராஜாஸ்ரீ பில்டிங், மடப்புரம் ரோடு, காளவாசல், மதுரை-625 010.	18.11.2026
நகைக்கடன் எண் : - ARAPA376716, ARAPA377296, ARAPA377305, BETHA386886, BETHA386903, CHKLMPI378283, CHKLMPI378571, CHOLA426970, CHOLA427364, CHOLA427718, CHOLA427944, CHOLA428116, CHOLA428118, CHOLA428937, CHOLA428976, CHOLA428988, CHOLA429005, CHOLA429010, CHOLA429014, CHOLA429040, JHDPU382985, JHDPU383413, KLVSL386471, KPUD2378544, KPUD2378590, KPUD2378591, KPUD2378592, KPUD2378696, KPUD2378730, KPUD2378733, KPUD2378931, KPUD2378958, MADNG380846, MADNG380870, MADNG381030, MADNG381040, MADNG381041, MADNG381042, MADNG381051, MADNG381102, MADNG381138, MADNG381204, MADNG381215, MADNG381237, MELU368136, MELU368989, MELU368997, THRNG385110, THRNG385152.				
20.11.2026	மாலை 4.00 மணி	அலங்காநல்லூர் - மேலபூபி - உசிலம்பட்டி - STFC BRANCHES.	ஒ.348/2B, வீரனன் கலையகம் காம்பளெக்ஸ், அலங்காநல்லூர், மதுரை-625 301.	18.11.2026
நகைக்கடன் எண் : - TAGNL000950, AGNLR001099, PERYR2522, PERYR2495, PERYR2905, USILM3402, TUSIL003206, USILM3532, USILM3368				

கடன் பெற்றவர் கடன் எண், பெயர் விவரம், நகைகளின் விபரம் நகை ஈடு வைத்த கிளையின் அறிவிப்பு பலகையில் காணலாம். விளம்பர செலவு ஏதேனும் வரும் பட்சத்தில் அதுவும் மேற்கண்ட நகைகளை அடகு வைத்தவர் மேற்படி தேதியில் **மாலை 3.00 மணிக்குள்** அசல், வட்டி, ஏலச்செலவு மற்றும் விளம்பர செலவுகளை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். **ரூ.1,00,000/-** (ரூபாய் ஒரு லட்சம்) டேவணி தொகை கட்டியவர்கள் மட்டும் ஏலத்தில் கலந்து கொள்ளலாம். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் **PAN** கார்டு மற்றும் அட்ரஸ் ப்ரூஃப் கொடுக்க வேண்டும்.

தேதி: 13.11.2026. இடம்: விருதுநகர் & மதுரை மாவட்டம்.

இப்படிக்கு
நிர்வாக குழு அங்கீகாரம் பெற்ற ஏலதாரர்.

இண்டியன் பேங்க் Indian Bank

கார்ப்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.

செயல்படாத கணக்குகளை செயல்படுத்துவதற்கான பொது அறிவிப்பு

எங்கள் வங்கியில் உள்ள சில கணக்குகள் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக வாடிக்கையாளர்களால் பரிவர்த்தனை எதுவும் செய்யப்படாமல் உள்ளன என்பதை வங்கி கண்டறிந்துள்ளது.

செயல்படாத கணக்குகளை வைத்திருப்பவர்கள், ஆதார் / ஓட்டுநர் உரிமம் / வாக்காளர் அடையாள அட்டை போன்ற புதிய **KYC** ஆவணங்களைச் சமர்ப்பித்து, உங்களுடைய கிளை அல்லது அருகிலுள்ள இந்தியன் வங்கி கிளைக்குச் சென்று தங்கள் கணக்குகளை மீண்டும் செயல்படுத்தும்படி இதன்மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

ச

ஆன்மிக சிந்தனை

மனத் தூய்மையால் மட்டும்தான் மனிதன் இறைவனின் அன்புக்குப் பாத்திரமாக முடியும்.

– ராமகிருஷ்ணர்

ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்.

– 1யோவான் 4ஃ 7.

தம்முடைய உள்ளத்தின் உலோபித்தனத்தை விட்டு எவர்கள் விலகி இருக்கின்றார்களோ அத்தகையவர்கள்தாம் வெற்றி பெறக்கூடியவர்கள்.

(அல்குர்ஆன் 64.16)

இன்றும்

வெள்ளிக்கிழமை
(13–11–2026)
பராபவ ஆண்டு, ஐப்பசி–27
பிறை: வளர்பிறை

திதி : சதுர்த்தி இரவு 7.44 வரை பிறகு பஞ்சமி.
நட்சத்திரம் : மூலம் மாலை 5.08 வரை பிறகு பூராடம்.
யோகம் : அமிர்த / சித்தயோகம்
ராகு காலம் : காலை 10.30 – 12.00 மணி
எமகண்டம் : பிற்பகல் 3.00 – 4.30 மணி
சூலம் : மேற்கு
நல்ல நேரம் : காலை 6 – 7 மணி. மாலை 5 – 6 மணி.

இன்றைய விசேஷம்: வளர்பிறை சதுர்த்தி விரதம். சுபமுகூர்த்த தினம். மிலட்டூர் ஸ்ரீ விநாயகப் பெருமான் புறப்பாடு. குமாரவயலூர் ஸ்ரீ முருகப் பெருமான் கஜமுகாசூரனுக்கு பெரு வாழ்வு தந்தருளல் அன்ன வாகன புறப்பாடு. தேரெழுந்தூர் ஸ்ரீ ஞானசம்பந்தர் புறப்பாடு. சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்மன் தங்கப் பாவாடை தரிசனம். திருப்பதி ஸ்ரீ ஏழுமலையப்பன் கத்த வால் சமஸ்தான மண்டபம் எழுந்தருளல். இராமேஸ்வரம் ஸ்ரீ பர்வதவர்த்தினியம்மன் நவசக்தி மண்டபம் எழுந்தருளி அம்பாள் தங்கப் பல்லக்கில் புறப்பாடு. திருமாலிருஞ்சோலை ஸ்ரீ கள்ளழகர் கோயிலில் ஸ்ரீ சுந்தரவல்லித் தாயார் கோயிலுக்குள் புறப்பாடு. கரூர் தான்தோன்றிமலை ஸ்ரீ கல்யாண வெங்கட ரமண சுவாமிக்கு திருமஞ்சன சேவை. லால்குடி ஸ்ரீ பிரவிருந்த ஸ்ரீமதி என்கிற ஸ்ரீ பெரு திருப்பிராட்டியார் சமேத ஸ்ரீ சப்தரிஷீஸ்வரர் கோயிலில் அபிஷேகம். கீழ்த்திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் காலை திருமஞ்சன சேவை, மாலை ஊஞ்சல் சேவை, மாடவீதி புறப்பாடு. தூத்துக்குடி ஸ்ரீ பாகம்பிரியாள், வீரவநல்லூர் ஸ்ரீ மரகதாம்பிகை தலங்களில் அபிஷேகம்.

மேஷம் அன்பு
ரிஷபம் அமைதி
மிதுனம் ஆக்கம்
கடகம் அனுகூலம்
சிம்மம் பயணம்
கன்னி வெற்றி
துலாம் உற்சாகம்
விருச்சிகம் கடமை
தனுசு புகழ்
மகரம் நிம்மதி
கும்பம் சுகம்
மீனம் இன்பம்

நாளையும்

சனிக்கிழமை
(14–11–2026)
பராபவ ஆண்டு, ஐப்பசி–28
பிறை: வளர்பிறை

திதி : பஞ்சமி இரவு 9.49 வரை பிறகு சஷ்டி.
நட்சத்திரம் : பூராடம் இரவு 7.40 வரை பிறகு உத்திராடம்.
யோகம் : சித்தயோகம்
ராகு காலம் : காலை 9.00 – 10.30 மணி
எமகண்டம் : நண்பகல் 1.30 – 3.00 மணி
சூலம் : கிழக்கு
நல்ல நேரம் : காலை 7 – 8 மணி. மாலை 5 – 6 மணி.

இன்றைய விசேஷம்: சிக்கல் ஸ்ரீ சிங்கார வேலவர் ரதோற்சவம் இரவு ஸ்ரீ உமாதேவியாரிடம் சக்தி வேல் வாங்குதல். திருஇந்தளூர் ஸ்ரீ பரிமள ரங்கநாதர் திருக்கல்யாணம் இரவு வெள்ளி ரதத்தில் பவனி. குச்சனூர் ஸ்ரீ சனிபகவான் சிறப்பு அபிஷேகம். ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ வைகுண்டபதி பால் அபிஷேகம். ஸ்ரீவில்லிபுத்தூர் சமீபம் திருவண்ணாமலை ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள் பவனி. நயினார் கோவில் ஸ்ரீ சௌந்தரநாயகி, திருவாடானை ஸ்ரீ சிநேகவல்லியம்மன் தலங்களில் காலைஅபிஷேகம்.திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள், மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால சுவாமி, கீழ்த் திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் தலங்களில் ஸ்ரீ வரதராஜ மூல வருக்கு திருமஞ்சன சேவை. உப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள் ஸ்திர வார திருமஞ்சன சேவை. திருமோகூர் ஸ்ரீ காளமேகப் பெருமாள், திருவட்டாறு ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் தலங்களில் அலங்கார திருமஞ்சன சேவை. ஸ்ரீரங்கம் ஸ்ரீ நம்பெருமாள், திருவள்ளூர் ஸ்ரீ வைத்ய வீரராகவப் பெருமாள் தலங்களில் அலங்கார திருமஞ்சன சேவை.

மேஷம் தனம்
ரிஷபம் போட்டி
மிதுனம் ஆர்வம்
கடகம் விவேகம்
சிம்மம் ஆக்கம்
கன்னி பாராட்டு
துலாம் அன்பு
விருச்சிகம் செலவு
தனுசு நற்செயல்
மகரம் வரவு
கும்பம் பணிவு
மீனம் சுபம்

அணைகளின் நீர்மட்டம் (அடியில்)

	உயரம்	தற்போதைய நீர்மட்டம்
முல்லைப் பெரியாறு	152	122.40
வைகை அணை	71	54.30

சாலைப் பணியாளர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

மதுரை, நவ. 12: பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணியாளர் சங்கம் சார்பில் மதுரை நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்புப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்கக் காலத்தைப் பணிக்காலமாக முறைப்படுத்த வேண்டும். மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்தைக் கலைக்க வேண்டும்.

பணியின் போது உயிரிழந்த சாலைப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் விரைவாக பணி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதற்கு சங்கத்தின் கோட்டத் தலைவர்கள் இரா. மாரி, வீ. மணிமாறன் ஆகியோர் தலைமை வகித்தனர். துணைத் தலைவர்கள் வா. மாரியப்பன், மு. முனியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோட்டச் செயலர்கள் த. மனோகரன், மு. ராஜா ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.



மதுரை நெடுஞ்சாலைத் துறை அலுவலக வளாகத்தில் சாலைப் பணியாளர்கள் சங்கம் சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலர் க. நீதிராஜா ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசினார். தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாநிலச் செயலர் முனைவர் சு. கிருஷ்ணன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றுப் பேசினார். சங்கத்தின் மாநிலப் பொருளாளர் இரா. தமிழ் நிறைவுரையாற்றினார். கோட்டப் பொருளாளர் கா. சதுரகிரி நன்றி கூறினார்.

இந்தப் போராட்டத்தில், கவனத்தை ஈர்க்கும் விதமாக சாலைப் பணியாளர்கள் வாயைக் கையால் மூடிக் கொண்டு பங்கேற்றனர். இரு சாலைப் பணியாளர்கள் நீதி தேவதையை நினைவூட்டும் வகையில், கண்களை கருப்புத் துணியால் கட்டிக் கொண்டு, கையில் தராசு ஏந்தி நின்றனர்.

திருப்பரங்குன்றம் கோயிலில் நவ.16–இல் கார்த்திகை தீபத் திருவிழா கொடியேற்றம்

திருப்பரங்குன்றம், நவ. 12: திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கார்த்திகை தீபத் திருவிழா வருகிற 16–ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

திருப்பரங்குன்றம் கோயிலில் கொண்டாடப்படும் விழாக்களில் கார்த்திகை தீபத் திருவிழா புகழ் பெற்றது. 10 நாள்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவை முன்னிட்டு, வருகிற 16–ஆம் தேதி காலை 7 மணிக்கு மேல் 7.30 மணிக்குள் கொடியேற்றம் நடைபெறுகிறது. விழா நாள்களில் தினமும் காலையில் தங்கச் சப்பரத்திலும், மாலையில் வெள்ளி பூத வாகனம், அன்ன வாகனம், சேஷ வாகனம், வெள்ளி ஆட்டுக்கிடா வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் சுப்பிரமணிய சுவாமி தெய்வானையுடன் எழுந்தருளி வீதியுலா நடைபெறும்.

விழாவின் முக்கிய நிகழ்வாக வருகிற 23–ஆம் தேதி சுப்பிரமணிய சுவாமிக்கு பட்டாபிஷேகம் நடைபெற உள்ளது. சிகர நிகழ்ச்சியாக வருகிற 24–ஆம் தேதி காலையில் சிறிய வைரத் தேரோட்டமும், மாலை 6 மணிக்கு மலை உச்சியில் மகா தீபம் ஏற்றும் வைபவமும் நடைபெறவுள்ளன. வருகிற 25–ஆம் தேதி தீர்த்த உத்சவத்துடன் விழா நிறைவடைகிறது.

விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் துணை ஆணையர் ஜி.செல்வி தலைமையில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

வனப் பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள்: மத்திய, மாநில அதிகாரிகள் பதிலளிக்க உத்தரவு

மதுரை, நவ. 12: தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகள், சோதனைச் சாவடிகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்கள் (சிசிடிவி) முறையாகச் செயல்படுவதை உறுதி செய்யக் கோரிய மனு தொடர்பாக மத்திய, மாநில வனத் துறையின் முதன்மைச் செயலர்கள் உள்ளிட்டோர் பதில் மனு தாக்கல் செய்ய சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வியாழக்கிழமை உத்தரவிட்டது.

மதுரையைச் சேர்ந்த புஷ்ப வனம் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

தேசிய வன விலங்கு செயல் திட்டப் பரிந்துரைகளின்படி தமிழகத்திலுள்ள அனைத்து வன சோதனைச் சாவடிகள், வனச் சரக அலுவலகங்கள், வனத் துறை விருந்தினர் இல்லங்கள், தங்கும் விடுதிகள், மலையேற்றப் பயணிகளுக்கான ஓய்வுக் கூடங்கள், வேட்டைத் தடுப்புக் கூடங்கள், யானைகளை அடைத்து வைக்கும் கொட்டில்கள், மரக்கட்டை சேமிப்புக் கிடங்குகளில் இரவிலும் தெளிவாகக் கண்காணிக்கக் கூடிய நவீன கண்காணிப்பு கேமராக்களை பொருத்த வேண்டும். மேலும், தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகள், வன சோதனைச் சாவடிகளில் இதுவரை பொருத்தப்பட்டுள்ள அனைத்து கண்காணிப்பு கேமராக்களும் முறையாக செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்த கேமராக்களில் பதிவாகும் காட்சிகளை 18 மாதங்களுக்கு சேமித்து வைக்கப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும் என அவர் கோரினார்.

இந்த மனு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி, நீதிபதி பி. வேல்முருகன் அமர்வு முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

இந்த மனு தொடர்பாக மத்திய, மாநில வனத் துறையின் முதன்மைச் செயலர்கள், தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஆகியோர் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு விசாரணை வருகிற 26–ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

மதுரை நீதிமன்றத்திலிருந்து தப்பிய தண்டனைக் கைதி திண்டுக்கல்லில் கைது

மதுரை, நவ. 12: மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்திலிருந்து வியாழக்கிழமை தப்பியோடிய தண்டனைக் கைதி திண்டுக்கல் அருகே கைது செய்யப்பட்டார்.

திண்டுக்கல் மது விலக்கு அமலாக்கப் பிரிவு போலீஸார் கடந்த 2024–ஆம் ஆண்டு, மே 20–ஆம் தேதி திருச்சி – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் அய்யலூர் வண்டி கருப்பண்ணசாமி கோயில் அருகே வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, திருச்சியிலிருந்து திண்டுக்கல் நோக்கி வந்த ஆட்டோவை நிறுத்தி சோதனை செய்த போது, அதில் 30 கிலோ கஞ்சா கடத்தி வந்தது தெரியவந்தது. இதையடுத்து, கஞ்சா கடத்தியதாக திண்டுக்கல் லைச் சேர்ந்த சுப்பிரமணி, மதன்குமார், மது பாலன், தாமரைக்கண்ணன், மாதவன், ராஜா ஆகிய 6 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இதுதொடர்பான வழக்கு விசாரணை மதுரை முதலாவது போதைப் பொருள் தடுப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.



ராஜா

வழக்கின் தீர்ப்பு நாளான வியாழக்கிழமை ராஜா உள்ளிட்ட 6 பேரையும் போலீஸார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி ஜி. சுதாகர், குற்றஞ்சாட்டப்பட்ட 6 பேருக்கும் தலா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், தலா ரூ. ஒரு லட்சம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். இதையடுத்து, நீதிமன்றத்திலிருந்து 6 பேரையும் சிறைக்கு அழைத்துச் செல்வதற்காக போலீஸார் தயாராகி வந்த நிலையில், கைதி ராஜா தப்பியோடினார். இதையடுத்து, அவரைக் கைது செய்ய காவல் துறையினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டனர்.

இந்த நிலையில், அவருடைய கைப்பேசி செயல்பாடுகளைக் கொண்டு, அவர் திண்டுக்கல் அருகே இருப்பதை அறிந்து, அந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் தனிப் படை போலீஸார் ராஜாவைக் கைது செய்தனர்.

குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து தேவைகளை உறுதிப்படுத்த அறிவுறுத்தல்

மதுரை, நவ. 12: ஊட்டச்சத்து குறைபாடு கொண்ட குழந்தைகளுக்குத் தேவையான சிகிச்சைகள், ஊட்டச்சத்துத் தேவைகளை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என மதுரை மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத் துறைச் செயலருமான கொ. வீரராகவராவ் அறிவுறுத்தினார்.

மதுரை மாவட்ட ஆட்சியரகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற அனைத்துத் துறை வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது:

சமூக நீதி விடுதிகளில் உள்ள அடிப்படை வசதிகள், உணவின் தரம், உணவு வழங்கப்படும் நேரம் ஆகியவற்றை அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும். எந்த விடுதியிலும் வெளிநபர்கள் தங்குவதை அனுமதிக்கக் கூடாது.

ஊரகப் பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சித் திட்டப் பணிகள் உரிய காலத்தில் நிறைவேற்றப்படுவதை அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும். தமிழக அரசின் பயிர்க் கடன் தள்ளுபடி திட்டத்தில் தகுதியான ஒரு விவசாயிகூட விடுபடாமல் பயன்பெறுவதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் உணவுப் பொருள்களின் தரம், இருப்பு குறித்து மாவட்ட அலுவலர்கள் தொடர் ஆய்வு செய்ய வேண்டும். ஊட்டச்சத்து குறைபாடு கொண்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் கிசிச்சைகள், ஊட்டச்சத்து தேவைகளை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

அங்கன்வாடி பணியாளர்கள், சுகாதாரத் துறை அலுவலர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் இணைந்து குழந்தைகளைக் கண்காணித்து, ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலை வகித்தார். இதில் மாநகராட்சி ஆணையர் கௌரவ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயப்பிரித்தா, உசிலம்பட்டி உதவி ஆட்சியர் உட்கர்ஷ்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) சித்தார்த் போகர்னா, முதன்மைக் கல்வி அலுவலர் தயாளன், வருவாய்க் கோட்டாட்சியர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

களஆய்வு...: முன்னதாக, மாநகராட்சி மண்டலம் 2–க்குள்பட்ட மாட்டுத்தாவணியில் ரூ. 10.30 கோடியில் கட்டப்பட்ட வெங்காய விற்பனை சந்தைக் கட்டடத்தையும், சின்ன சொக்கி குளம் பகுதியில் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம், பிற அரசுத் துறை அலுவலகக் கட்டங்கள் அமைக்கப்படவுள்ள இடத்தையும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கொ. வீரராகவராவ் ஆய்வு செய்தார்.

மோசமான நிர்வாகத்தால் குற்றச் செயல்கள் அதிகரிப்பு



சென்னை/ ஈரோடு, நவ. 12: தமிழகத்தில் மோசமான நிர்வாகத்தால் குற்றச் செயல்கள் தினமும் அதிகரித்து வருவதாக அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி குற்றஞ்சாட்டினார்.

சென்னை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

தமிழகத்தில் தவெக அரசின் மோசமான நிர்வாகத்தால் கொலை, கொள்ளை மற்றும் பாலியல் ரீதியிலான பிரச்னை என குற்றச் சம்பவங்கள் நாள்தோறும் அதிகரித்து வருகிறது. நாட்டிலேயே மிக மோசமான ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுவருகிறது என்ற நிலையே ஏற்பட்டுள்ளது. போதைப் பொருள்கள் விற்பனையும் அதிகரித்துள்ளன. தீபாவளிக்கு மக்கள் சொந்த ஊர்களுக்குச் சென்ற நிலையில், பல இடங்களில் திருட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. இதுகுறித்து எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டினாலும், அதை ஏற்று ஆளும் கட்சி சீர்படுத்த முன்வரவில்லை. ஆளும் கட்சியினர் மீது பல்வேறு புகார்கள் எழுந்துள்ளன.

தமிழகத்தில் போதைப் பொருள்கள் விற்பனை அதிகம் நடைபெறுகிறது. அதைத் தடுக்க நடவடிக்கை இல்லை. இடைத்தேர்தல் எப்போது வந்தாலும் அதை எதிர்கொள்வதற்கு அதிமுக தயார் நிலையில் உள்ளது. வரும் இடைத்தேர்தல்களில் அதிமுகவே வெற்றி பெறும் என்றார்.

நம்பிக்கை இல்லா தீர்மானமா..,?ஃ ஈரோடு வில்லரசம்பட்டியில் செய்தியாளர்களிடம் எடப்பாடி கே.பழனிசாமி கூறியதாவது: தவெக அரசு மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவர எதிர்க் கட்சிகளுக்கு எண்ணமில்லை என அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறியுள்ளார். எதை பொதுவெளியில் பேச வேண்டும் என்று உள்ளது. அவர் அவருடைய கருத்தை சொல்லியுள்ளார். அப்படியொரு சூழல் வரும்போது அனைத்து ஊடகத்தினரையும் அழைத்துச் சொல்வோம் என்றார் அவர்.

காலமானார்

ஜெ.சுதா



சென்னை, நவ. 12: சென்னை கொரட்டூரைச் சேர்ந்த ஜெ.சுதா (44) உடல்நலக் குறைவு காரணமாக வியாழக்கிழமை (நவ. 12) காலமானார்.

அவருக்கு, தினமணி தருமபுரி பதிப்பில் முதுநிலை பக்க வடிவமைப்பாளராகப் பணியாற்றும் கணவர் வி.ஜெயப்பிரகாஷ், மகன் ஜெ.ஆண்டனி வின் சென்ட் உள்ளனர்.

ஜெ.சுதாவின் இறுதிச் சடங்குகள் சென்னை பூந்தமல்லியில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் வெள்ளிக்கிழமை நண்பகலில் நடைபெறவுள்ளன. தொடர்புக்கு: 98408 73760.

சிவகங்கை மாவட்ட நூலகங்களிலிருந்து 1,557 புத்தகங்கள் அகற்றம்

சிவகங்கை, நவ. 12: சிவகங்கை மாவட்டத்தில் பொது நூலகங்களிலிருந்த போலி பதிப்பகங்களின் 1,557 புத்தகங்கள் வியாழக்கிழமை அகற்றப்பட்டன.

கோவை பெரியார் அறிவுலகத்துக்கான நூல்கள் கொள்முதலில் முறைகேடு நடைபெற்றதாக எழுத்தாளர் பெருமாள் முருகன் அண்மையில் குற்றஞ்சாட்டினார். இதையடுத்து, அகல்விளக்கு, பீனிக்ஸ் பதிப்பகங்களின் பெயரில், அடையாளம் தெரியாத, போலியான எழுத்தாளர்களின் பெயர்களில் உண்மைக்கு மாறான தகவல்களைக் கொண்ட புத்தகங்கள் மாநிலம் முழுவதுமுள்ள நூலகங்களில் பயன்பாட்டில் வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து, அகல்விளக்கு, பீனிக்ஸ் பதிப்பகங்களின் பெயரில் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த புத்தகங்களை அரசு நூலகங்களிலிருந்து அகற்ற, பொது நூலகத் துறை உத்தரவிட்டது.

இதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 122 அரசு நூலகங்களில் பொது பயன்பாட்டுக்கு வைக்கப்பட்டிருந்த அந்த இரு பதிப்பகங்களின் புத்தகங்கள் வியாழக்கிழமை அகற்றப்பட்டன. இதில் அகல்விளக்கு பதிப்பகத்தின் பெயரில் வெளியிடப்பட்டிருந்த 840 புத்தகங்கள், பீனிக்ஸ் பதிப்பகத்தின் பெயரில் வெளியாகியிருந்த 717 புத்தகங்கள் என மொத்தம் 1,557 புத்தகங்கள் அகற்றப்பட்டன.

புத்தக கொள்முதல் முறைகேடு குறித்து வெளிப்படையான விசாரணை தேவை

சிவகங்கை, நவ. 12: புத்தக கொள்முதல் முறைகேடு குறித்து வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு. வீரபாண்டியன் வலியுறுத்தினார்.

சிவகங்கையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் வியாழக்கிழமை கூறியதாவது:

தமிழகத்தில் சட்டம்– ஒழுங்கைப் பாதுகாக்க முதல்வர் ஜோசப் விஜய் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதிகாரிகளுக்கு முழு சுதந்திரம் வழங்குவதாக அவர் கூறியிருக்கிறார். இது தவறு. நேர்மையான அதிகாரிகளுக்கு மட்டுமே முழு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் சட்டம்– ஒழுங்கு திருப்திகரமாக இல்லை என்பது உண்மை. இதற்கு எந்த காரணமும் கூறக் கூடாது. வன்கொடுமை, பாலியல் சீண்டல் பிரச்னைகளில் எந்தவிதத்திலும் சமரசம் கூடாது. தமிழக அரசுக்கு நாங்கள் அளித்திருக்கும் ஆதரவு சமூக விரோதச் செயல்களுக்கு அல்ல. தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி வந்து விடக் கூடாது என்பதற்கான ஆதரவு.

தமிழகத்தில் சமீப காலமாக வன்முறைகளும், போதைப் பழக்கமும் அதிகரித்திருப்பது கவலை அளிக்கிறது. தமிழக அரசு கூடுதலாக கவனம் செலுத்தி சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குற்றச் செயல்களுக்கு போதைப் பொருள் பயன்பாடு மட்டுமே காரணம் அல்ல. வேலையில்லா திண்டாட்டமும் முக்கியக் காரணமாகும்.

தமிழக அரசு சிறு, குறு தொழில்களை ஊக்கப்படுத்தி தொழில்சாலைகளை அதிகரிக்க வேண்டும். வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்து, விளையாட்டுப் போட்டிகளிலும் இளைஞர்களை ஈடுபடுத்துவதன் மூலமும் குற்றச் செயல்களைக் குறைக்க இயலும்.

மேக்கேதாட்டு அணை பிரச்னையில் பிரதமர் மோடி பார்வையாளராக இருக்கக் கூடாது. தமிழகத்துக்கான நீரை கர்நாடகம் வழங்க அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக முதல்வரின் கோரிக்கையை ஏற்று உச்சநீதிமன்றக் கிளையை சென்னையில் அமைக்கவும் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



புத்தக கொள்முதல் முறைகேடு குறித்து வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும். பெண்கள் மீதான பாலியல் சீண்டல்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலும் பெண் மாவட்ட ஆட்சியருக்கு தவெக எம்.எல்.ஏ. கட்செவி அஞ்சலில் அனுப்பிய ஆட்சேபகரமான பதிவை வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தப் புகாரில் உண்மை எது என்பதை அரசு விளக்க வேண்டும்.

தவெக அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டால் எங்களது கட்சியின் மாநிலக் குழு கூட்டத்தை கூட்டி முடிவெடுப்போம்.

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தலை தள்ளிப் போடக் கூடாது. மத்திய அரசிடமோ, மாநில அரசிடமோ அதிகாரம் குவியக் கூடாது. எனவே, உள்ளாட்சித் தேர்தலை மாநில அரசு விரைந்து அறிவிக்க வேண்டும். இந்தத் தேர்தலை தள்ளிப் போடுவதன் மூலம் ஜனநாயகம் தோற்றுக் கொண்டிருக்கிறது என்றார் அவர்.

அரசு சட்டக் கல்லூரிகளில் 302 விரிவுரையாளர் காலிப் பணியிடங்கள்

உயர்நீதிமன்றத்தில் தகவல்

மதுரை, நவ. 12: தமிழகத்தில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் 302 விரிவுரையாளர் காலிப் பணியிடங்கள் உள்ளதாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் மாநில சட்டக் கல்வி இயக்ககம் வியாழக்கிழமை தெரிவித்தது.

மதுரையைச் சேர்ந்த வழக்குரைஞர் சகா சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

தமிழகத்தில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் நிரந்தர விரிவுரையாளர், கௌரவ விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்ப என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து மாநில சட்டக் கல்வி இயக்ககம் சார்பில் இரு வாரங்களுக்குள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

இன்றைய நிகழ்ச்சிகள்

பொது

புத்தகத் திருவிழாஃ தொடங்கி வைப்பவர்கள் – உயர் கல்வித் துறை அமைச்சர் பெ. விஸ்வநாதன், எரிசக்தி, சட்டத் துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார், தலைமை– மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா, மாநாட்டு மையம், தமுக்கம், மாலை 6.

கலை இலக்கியப் பெருவிழாஃ தலைமை – உலகத் திருக்குறள் பேரவைத் தலைவர் கா. கருப்பையா, சிறப்புரை – சண்முகத் திருக்குமரன், மணிமொழியனார் அரங்கம், நியூ காலேஜ் ஹவுஸ், மாலை 5.

ஆன்மிகம்

கந்தசஷ்டி விழா: ஆட்டுக்கிடா வாகன உலா, முருகன் கோயில், சோலைமலை மண்டபம், அழகர்கோவில், முற்பகல் 11.

ஆன்மிக இலக்கியச் சொற்பொழிவு: தலைப்பு – திருக்குறள், உரையாற்றுபவர் – தயாபரன், திருவள்ளுவர் கழகம், வடக்காடி வீதி, இரவு 7.

கள்ளக்குறிச்சி எம்எல்ஏ மீது நடவடிக்கை தேவை



சென்னை, நவ. 12: கள்ளக்குறிச்சி தவெக எம்எல்ஏ மீது முதல்வர் ஜோசப் விஜய் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தினார்.

இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் வியாழக்கிழமை வெளியிட்டப் பதிவு:

'தவறு செய்தால் விடமாட்டேன்' என முதல்வர் விஜய் தனது கட்சி எம்எல்ஏ-க்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்தார் என தவறான தகவலை ஊடகங்கள் மூலம் பரப்பியுள்ளனர். முதல்வரின் கண்டிப்பு உண்மையானால் என்ன செய்திருக்க வேண்டும்? பேரவைத் துணைத் தலைவர் பதவியின் மாண்பைக் குலைத்தவர் மீது வழக்குப் பதிவு செய்திருக்க வேண்டும். கள்ளக்குறிச்சி எம்எல்ஏ மீது உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் கண்டிப்பான அதிகாரியாக செயல்படுவேன் என சொன்னவர் செய்தது என்ன? குற்றஞ்சாட்டப்பட்ட இருவருக்கும் தீபாவளிப் பரிசு கொடுத்து வழியனுப்பி வைத்திருக்கிறார். இதுதான் அந்தக் கடும் நடவடிக்கையா? உறுதியான, நிலையான முடிவை எடுத்து, தன்னை முதல்வர் நிரூபித்துக் காட்ட வேண்டும். வாய் மட்டும் வேலை செய்து எந்தப் பயனும் இல்லை எனப் பதிவிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்: கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியருக்கு தகாத தகவல் அனுப்பிய குற்றச்சாட்டில் தவெக எம்எல்ஏ அருள் விக்னேஷை முதல்வர் இன்னமும் பாதுகாப்பது ஏன்? கோரிக்கை வைத்தவரை அடித்து துன்புறுத்திய பேரவைத் துணைத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? தவறு செய்யும் தன் கட்சிக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க முதல்வருக்கு துணிச்சல் இல்லை.

ஆனால், அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம், தவெக எம்எல்ஏ-க்களுடன் ஆலோசனைக் கூட்டம் என்று வேக வேகமாக திசைதிருப்பும் அரசியலில் முதல்வர் இறங்குகிறார். முதல்வருக்கு மனசாட்சி இருந்தால் தவறு செய்யும் தவெகவினரைத் தட்டிவைக்க வேண்டும். இல்லை மக்கள் சக்தி தட்டிவைக்கும்.

திமுக அமைப்பு செயலர் ஆர்.எஸ்.பாரதி: சென்னை அண்ணா அறிவாலயத்தில் அவர் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

பெண் மாவட்ட ஆட்சியருக்கு தொல்லை கொடுத்த விவகாரம் தொடர்பாக தவெக எம்எல்ஏ அருள் விக்னேஷ் மீது பாதிக்கப்பட்ட அந்த மாவட்ட ஆட்சியரின் கணவரே புகார் கொடுத்துள்ளார். இது தொடர்பாக ஏற்கெனவே, மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தும் பயனில்லை. எனவே, இதுகுறித்து தமிழக டிஜிபியிடம் புகார் அளித்துள்ளோம். கள்ளக்குறிச்சி எம்எல்ஏ மீது வழக்குப் பதிவு செய்து சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றார் அவர்.

வழக்கை இழுத்தடிக்கும் எந்த நடவடிக்கையையும் அனுமதிக்க முடியாது

சிறப்பு நீதிமன்றம் எச்சரிக்கை

சென்னை, நவ. 12: அரசுப் போக்குவரத்துத் துறையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி மோசடிசெய்த வழக்கை இழுத்தடிக்கும் எந்த நடவடிக்கையையும் அனுமதிக்க முடியாது என வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு சிறப்பு நீதிமன்றம் எச்சரிக்கை விடுத்தது.

கடந்த 2011-2015-ஆம் ஆண்டுகளில் நடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில், போக்குவரத்துத் துறையின் பணி நியமனங்களை பணம் பெற்றுக் கொண்டு நிரப்பியதாக மத்திய குற்றப் பிரிவு போலீஸார் கடந்த 2018-ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்திருந்தனர். இதில், முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது சகோதரர் அசோக்குமார் உள்ளிட்ட 2,200-க்கும் மேற்பட்டோருக்கு எதிராக 3 வழக்குகள் தனித்தனியாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் அனைத்தும் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள எம்.பி., எம்எல்ஏக்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி என்.லோகேஷ்வரன் முன் வியாழக்கிழமை குற்றச்சாட்டு பதிவுக்காக விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரி ஒவ்வொருவரும் தனித்தனியாக வழக்கு தாக்கல் செய்வதை ஏற்க முடியாது என்றும், குறிப்பிட்ட காலத்துக்குள் அனைவரும் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், எப்போது மனு தாக்கல் செய்யப்படும் என்ற தகவலை நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

மேலும், வழக்கைத் தேவையின்றி இழுத்தடிக்கும் எந்த நடவடிக்கையையும் அனுமதிக்க முடியாது. விருப்பம் போல், வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரி மனு தாக்கல் செய்வதாக இருந்தால், பிணை வழங்கி பிறப்பித்த உத்தரவை ரத்து செய்துவிடுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவருக்கும் நீதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

அப்போது நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த செந்தில்பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக்குமார் உள்ளிட்ட குற்றம்சாட்டப்பட்டவர்களிடம், வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரி மனு தாக்கல் செய்யும் எண்ணம் உள்ளதா? அவ்வாறு இருந்தால் எப்போது மனு தாக்கல் செய்யவுள்ளீர்கள்? என நீதிபதி கேள்வி எழுப்பினார்.

அதற்கு, விரைவில் வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரி மனு தாக்கல் செய்யவுள்ளதாக அவர்கள் தரப்பில் பதிலளிக்கப்பட்டது. இதையடுத்து வழக்கு விசாரணையை தள்ளிவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

முல்லைப் பெரியாறு அணை பலமாக உள்ளது

ஆய்வுக்குப் பிறகு துணை கண்காணிப்புக் குழு தகவல்

கம்பம், நவ. 12: முல்லைப் பெரியாறு அணையில் தற்போதைய நீர்மட்டத்துக்கு ஏற்ப நீர்க்கசிவு நிர்ணயிக்கப்பட்ட அளவு பதிவாகியுள்ளதால், அணை வலுவாக இருப்பதாக துணை கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைப் பெரியாறு அணையைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக, அந்த ஆணையத் தலைவர் அனில் ஜெயின் தலைமையில் மேற்பார்வைக் குழு செயல்பட்டு வருகிறது. இந்தக் குழுவுக்கு உதவியாக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தென் மண்டல இயக்குநர் ஆர். கிரிதரன் தலைமையில் துணை கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்தக் குழுவினர் வியாழக்கிழமை முல்லைப் பெரியாறு அணையில் ஆய்வு செய்தனர். அப்போது அணையின் நீர்மட்டம் 122.40 அடியாக இருந்தது. பருவமழைக் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், அணையின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து அவர்கள் ஆய்வு செய்தனர்.

முன்னதாக, தேக்கடி படகுத் துறையிலிருந்து தமிழக பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான படகு மூலம் அணைப் பகுதிக்குச் சென்ற குழுவினர், கேரள அதிகாரிகளுடன் இணைந்து பிரதான அணை, சிற்றணை (பேபி அணை), மண் அணை (எர்த் டேம்) உள்ளிட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர்.

அப்போது அணைக்கு வரும் நீரின் அளவு, அணையிலிருந்து வெளியேறும் கசிவு நீரின் அளவு, மதகுகளின் செயல்பாடு, நில அதிர்வைக் கண்காணிக்கும் கருவிகளின் செயல்பாடு, அணையின் உள் பகுதியில் உள்ள கேலரி ஆகியவற்றை ஆய்வு செய்தனர்.

ஆலோசனைக்கூட்டம்: இதைத் தொடர்ந்து, குமுளியில் உள்ள கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் அணைப் பகுதியில் மேற்கொள்ள வேண்டிய வழக்கமான பராமரிப்புப் பணிகள், சிற்றணையைப் பலப்படுத்தும் பணிகள், வல்லக்கடவிலிருந்து பெரியாறு அணை வரையிலான சாலையைச் சீரமைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து தமிழக அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

கூட்டத்துக்குப் பிறகு தமிழக அதிகாரிகள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முல்லைப்பெரியாறு அணையில் உள்ள 13 மதகுகளில் 2, 9, 12 ஆகிய மதகுகளின் இயக்கம் பரிசோதிக்கப்பட்டது. அவை அனைத்தும் சீராகச் செயல்படுவது உறுதி செய்யப்பட்டது. அணையிலிருந்து வெளியேறும் கசிவு நீரின் அளவு நிமிஷத்துக்கு 32.250 லிட்டராகப் பதிவாகியுள்ளது. தற்போதைய நீர்மட்டமான 122.40 அடிக்கு இந்தக் கசிவுநீர் அளவு நிர்ணயிக்கப்பட அளவில் இருப்பதால், அணை வலுவாக உள்ளது. இந்த ஆய்வின் விவரங்கள் அடங்கிய அறிக்கை மேற்பார்வைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்றனர்.

இந்த ஆய்வின் போது துணை கண்காணிப்புக் குழுவில் இடம் பெற்றுள்ள தமிழகப் பிரதிநிதிகளான மதுரை பெரியாறு வைகை வடிநிலக் கோட்ட கண்காணிப்புப் பொறியாளர் சாம் இர்வின், கம்பம் பெரியாறு அணை சிறப்பு கோட்ட செயற்பொறியாளர் செல்வம், கேரளப் பிரதிநிதிகளான எர்ணாகுளம் மத்திய வட்ட நீர்ப் பாசனப் பிரிவு கண்காணிப்புப் பொறியாளர் சுரேஷ் பாபு, கட்டப்பனை நீர்ப்பாசனத் துணைப் பிரிவு செயற்பொறியாளர் லெவின்ஸ் பாபு, பெரியாறு அணை உதவி செயற்பொறியாளர் ராஜகோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஜெம் வீரமணிக்கு எதிரான முதல் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல்: சிறப்பு புலனாய்வுக் குழு

சென்னை, நவ. 12: சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெம் கிரானைட்ஸ் உரிமையாளர் வீரமணிக்கு எதிரான முதல் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, சிறப்பு புலனாய்வுக் குழு தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக, ஜெம் வீரமணிக்கு எதிராக 9 போக்ஸோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்கை மூடி மறைத்ததில் காவல் துறை உயர் அதிகாரிகளின் தொடர்பு இருப்பதாலும், பணம் கைமாறி இருப்பதாலும், இந்த வழக்குகளின் விசாரணையை சிபிஐக்கு மாற்றக்கோரி உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

மேலும், வழக்கு தொடர்பான விடியோக்கள் ஊடகங்களில் வெளியானது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரி, துளிர் அமைப்பு சார்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த வழக்குகள் நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தன. அப்போது, சிறப்பு புலனாய்வுக் குழு தரப்பில் ஆஜரான தலைமை குற்றவியல் வழக்குரைஞர் ஜான் சத்யன், வீரமணிக்கு எதிரான முதல் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இரு வழக்குகளில் 10 நாள்களில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படும். குற்றம்சாட்டப்பட்டுள்ள முக்கிய நபரான பிரகாஷ் தலைமறைவாக உள்ளார். அவரது முன் பிணை கோரிய மனு நவ.16-ஆம் தேதி விசாரணைக்கு வருகிறது.

பணப் பரிமாற்றம் தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்த வேண்டியுள்ளது. இந்த வழக்கின் தீவிரத் தன்மை கருதி, சிறப்பு புலன் விசாரணைக்கு தரப்பில் ஆஜராக 3 சிறப்பு அரசு வழக்குரைஞர்களை நியமித்து கடந்த நவ. 6-ஆம் தேதி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, வழக்குகளின் விசாரணையை நவ. 30-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

7 காவல் துறை அதிகாரிகளின் பெயர்கள் சேர்ப்பு: சிறுமிகள் பாலியல் வன்கொடுமை தொடர்பான ஜெம் வீரமணிக்கு எதிரான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் ஏடிஜிபி அருண் உள்ளிட்ட 7 காவல் துறை அதிகாரிகளின் பெயர்கள் சேர்க்கப்பட்டதாகத் தகவல் வெளியானது.

சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணையில், சிறுமிகளை வீரமணி பாலியல் வன்கொடுமை செய்தது குறித்து கடந்த 2025 அக்டோபரில் சென்னை காவல் துறையில் விடியோ ஆதாரத்துடன் புகார் செய்யப்பட்டதும், ஆனால், வழக்குப் பதிவு செய்து விட்டு, விடியோவில் இருப்பவர்கள் யாரென்று தெரியவில்லை என்று காவல் துறை வழக்கை முடித்து வைக்க முயன்றதும் தெரியவந்தது.

அப்போது காவல் ஆணையராக இருந்த ஏடிஜிபி ஏ.அருண், சென்னை மத்திய குற்றப் பிரிவு கூடுதல் காவல் ஆணையராக இருந்த ஐஜி ராதிகா, உதவி ஆணையராக இருந்த யாஸ்மின் உள்ளிட்ட பலரிடம் விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசாரணையில் கிடைத்த தகவலின் அடிப்படையில், தற்போது வழக்கின் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் ஏடிஜிபி அருண் உள்ளிட்ட 7 காவல் துறை அதிகாரிகளின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியானது.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்கொள்ள தவெக அரசு தயார்



கோபி, நவ.12: தவெக சட்டப் பேரவை உறுப்பினர்களிடமிருந்து எந்தக் கடிதமும் பெறப்படவில்லை. அதே நேரத்தில், எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தால் அதை எதிர்கொள்ள தவெக அரசு தயாராக உள்ளது என அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறினார்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையத்தில் வியாழக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தவெக அரசு மீது எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரும் எண்ணத்தில் இல்லை. அவ்வாறு கொண்டுவந்தால் அதனைச் சந்திக்க தவெக அரசு தயாராக உள்ளது.

ஒவ்வொரு இயக்கங்களும் ஆட்சிக்கு வரும் போது, சட்டப்பேரவை உறுப்பினர்களை அழைத்து என்னென்ன திட்டங்களை நிறைவேற்றுவது என்பது குறித்து ஆலோசிப்பது வழக்கம். அதுபோல தான் முதல்வர் ஜோசப் விஜய் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டப்பேரவை உறுப்பினர்களிடமிருந்து எந்தக் கடிதமும் பெறப்படவில்லை என்றார் அவர்.

ஆவின் டி.டி.160 திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., எண்: 9, கிழக்கு கோவித்தாபுரம், திண்டுக்கல் - 624 001. மின்னஞ்சல் : aavindglpandi@gmail.com

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

டி.டி.160, திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து பெறப்படும் பாலை காலை மற்றும் மாலை இரு வேளைகளும் தொழிற் பால் குளிரியக்கும் வசதியுடைய பால் சேகரிப்பு மையங்களுக்கு பால் எடுத்து வரவேண்டி (07 வண்டிகள்), பால் கொள்முதல், திட்டமிடல் மற்றும் வாரியுடைய மேற்கொள்ள வாடகை வார (01) இணைதி வகை ஒப்பந்த காரத்தில் இயக்க இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1	ஒப்பந்தப் படிவம் பதிவிறக்கம் செய்ய கடைசி நாள்	08.12.2026 மாலை 3.00 மணி வரை
2	ஒப்பந்தப்புள்ளி முன் விளக்க கூட்ட நாள்	24.11.2026 காலை 11.00 மணி
3	பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும் இடம்	திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., எண்.9, கிழக்கு கோவித்தாபுரம், திண்டுக்கல்.
4	முழுதும் செய்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய நாள் (Upload) மற்றும் நேரம்	08.12.2026 மாலை 4.00 மணி வரை
5	ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப படிவம் திறக்கும் நாள் மற்றும் நேரம்	09.12.2026 காலை 11.00 மணி
6	ஒப்பந்தப்புள்ளி வணிகரீதியான படிவம் திறக்கும் நாள்	வணிகப்புள்ளிகள் திறக்கப்படும் விபரம் www.tntenders.gov.in என்ற இணையதளம் மூலமாக தெரிவிக்கப்படும்.
7	ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் அதன் தொடர்பான அனைத்து விபரங்களும் www.tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக மாற்றம் இருப்பின் மேற்காணும் இணையதளத்தில் மட்டும் பதிவேற்றம் செய்யப்படும்.	
8	எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்கவோ, மாற்றி அமைக்கவோ அல்லது நிராகரிக்கவோ பொது மேலாளர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.	

இடம் : திண்டுக்கல்
நாள் : 12.11.2026

பொது மேலாளர்
செ.ம.தொ.இ./3563/ஒப்பந்தப்புள்ளி/2026 திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,

உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com

TAMIL NADU ZARI LIMITED
(A Government of Tamil Nadu Undertaking)
INDUSTRIAL ESTATE, ORIKKAI, KANCHEEPURAM - 631 502

TENDER PUBLISHING NOTICE

E-tender has been published in Tamilnadu Government e-tender Portal "**https://tntenders.gov.in**" for Purchase of Gold Bar (999 Purity).

Approximate Quantity	:	**1.25 Kgs**
Conditions	:	As Stipulated in Tender Schedule available in the above web portal.
Bid Upload Starting Date & Time	:	**4.00 P.M** on **12.11.2026**
Last date & Time of Bid upload	:	Upto **2.00 P.M** on **25.11.2026**
Opening of Bids online	:	At **2.30 P.M** on **25.11.2026**

Managing Director
(Tender Inviting Authority)
Tamil Nadu Zari Ltd.,
Kancheepuram

Place : Kancheepuram
Date : 12.11.2026 DIPR/ 3559 /TENDER/2026

NATIONAL INSTITUTE OF TECHNOLOGY PUDUCHERRY
(An Institution of National Importance under Ministry of Education, Govt of India)
Thiruvettakudy, Karaikal – 609 609, Union Territory of Puducherry.

Date: 13.11.2026

NOTIFICATION FOR RECRUITMENT

National Institute of Technology Puducherry invites applications from Indian Nationals for various **Non-Teaching & Teaching Positions**, as per the advertisements below:

1. Deputation, including Short Term Contract - Advt. No. NITPY/01/2026/NT(DSTC)/1311/2026, Date: 13.11.2026
2. Direct Recruitment - Advt. No. NITPY/02/2026/NT/1311/2026, Date: 13.11.2026
3. Direct Recruitment - Advt. No. NITPY/03/2026/T/1311/2026, Date: 13.11.2026

The details required for **Non-Teaching & Teaching** posts can be downloaded from the Institute website http://www.nitpy.ac.in.

-SD-/ஃ. Director / Fitme

அறிவிப்பு

சுந்தரம் மியூச்சுவல்
சுந்தரம் பைனான்ஸ் குரூப்

வருமானப் பகிர்வு மற்றும் மூலதனம் திரும்பப் பெறுவதற்கான பதிவு தேதி (IDCW)

சுந்தரம் மியூச்சுவல் கம்பனியின் அறங்காவலரான சுந்தரம் டிரஸ்டீ கம்பெனி லிமிடெட், பின்வரும் திட்டங்களின் கீழ் ரூ. 10/- முகமதிப்பின் மீது வருமான விநியோகம் மற்றும் மூலதனத் திரும்பப் பெறுதல் (IDCW) ஆகியவற்றை அறிவித்துள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்:

திட்டத்தின் பெயர்	திட்டம்	விருப்பம்	பதிவு தேதி*	IDCW தொகை (ஒரு யூனிட்டுக்கு ரூ.)	ஒரு யூனிட்டுக்கு NAV நவம்பர் 11, 2026 (ரூ.) அன்று
சுந்தரம் அக்ரசிவ் ஹைபிரிட் ஃபண்ட்	வழக்கமான திட்டம்	மாதாந்திர IDCW	நவம்பர் 17, 2026	0.210	24.3473
	நேரடி திட்டம்	மாதாந்திர IDCW		0.330	38.3391
சுந்தரம் டைனமிக் அசெட் அலோகேஷன் ஃபண்ட் (முன்பு சுந்தரம் பேலன்ஸ்டு அட்வான்டேஜ் ஃபண்ட் என்று அழைக்கப்பட்டது)	வழக்கமான திட்டம்	மாதாந்திர IDCW		0.115	14.0520
	நேரடி திட்டம்	மாதாந்திர IDCW		0.140	17.5368

அல்லது குறிப்பிட்ட தேதி வணிகம் அல்லாத நாளாக இருந்தால் அதற்கு அடுத்த வணிக நாள்.

* பொருந்தக்கூடிய வகையில், மூலத்தில் பிடித்தம் செய்யப்படும் வரியைக் கழித்த பிறகு வருமானப் பகிர்வு மேற்கொள்ளப்படும் / IDCW (வருமானப் பகிர்வுத் தொகை) வழங்கப்படும்.

IDCW (வருமான விநியோகத் தொகை) வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அத்திட்டத்தின் நிகர சொத்து மதிப்பு (NAV) அத்தொகை மற்றும் பொருந்தக்கூடிய சட்ட்ரீதியான வரிகளின் அளவிற்கு ஏற்ப குறையும். IDCW வழங்கலானது, மேலே குறிப்பிடப்பட்ட ஒரு யூனிட்டிற்கான IDCW தொகை அல்லது 'பதிவுத் தேதியில்' (Record Date) கிடைக்கக்கூடிய விநியோகிக்கத்தக்க உபரித் தொகை - இவற்றில் எது குறைவோ, அந்த அளவிற்கு அமையும். கடந்த காலச் செயல்பாடு எதிர்காலத்திலும் தொடரும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்களின் IDCW விருப்பத் தேர்வின் கீழ் உள்ள யூனிட் உரிமையாளர்களில், அந்தந்த 'பதிவுத் தேதியில்' யூனிட் உரிமையாளர் பதிவேட்டில் பெயர்கள் இடம்பெற்றுள்ள அனைவரும் IDCW-ஐப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்லையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: நவம்பர் 13, 2026

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஹாரிஸ் சாலை, எழும்பூர், சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுமேஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

பொது அறிவிப்பு

ஆட்டோ லைனர்ஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடெட்
(CIN:U34103TN1960PTC004184)
பதிவு அலுவலகம் : சூப்பர் A14-15, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி 044.42888111 மின்னஞ்சல்: autolinersprivatelimited@gmail.com

என்ற விடியத்தில்

பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் இணையதளத்தில் உள்ள நிறுவனத்தின் பொறுப்புப் பட்டியலிலிருந்து, முழுமையாகத் தீர்க்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்கள் நீக்கப்படுவது தொடர்பாக, பொதுமக்களுக்கும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஓர் அறிவிப்பு.

மேற்கண்ட, பொருள் தொடர்பாக, எங்கள் நிறுவனமான ஆட்டோ லைனர்ஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடெட் (CIN: U34103TN1960PTC004184), டிசம்பர் 31, 2004 தேதியிட்ட பங்குதாரர்கள் ஒப்பந்தத்தின்படி M/s. RR இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (ஹோல்டிங் கம்பெனி) நிறுவனத்தை கையகப்படுத்தப்பட்டது மற்றும் பங்குகள் மாற்றப்பட்ட பிறகு இயக்குநர்கள் குழு மறுசீரமைக்கப்பட்டது. பணமது நிர்வாகத்திலிருந்து நிறுவனம் கையகப்படுத்தப்பட்ட தேதியில், 31.12.2004 அன்று நிறுவனத்தின் இருமுறிகை குறிப்பில் வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடம் நிலுவையில் உள்ள கடன்கள் எதுவும் இல்லை. பணமது நிர்வாகம், பிணவும் பொறுப்பு அடையாளங்களில் (Charge IDs) குறிப்பிடப்பட்டுள்ளபடி, வங்கிகளுடனான அனைத்து கடன்களையும் செலுத்திவிட்டது. இருப்பினும், பின்வரும் பொறுப்புகள் நிறுவனத்தின் பொறுப்புகளின் குறியீட்டில் (Index of Charges) இன்னும் பிரதிபலிக்கின்றன. மேலே விரிவாகப் பட்டியலிடப்பட்டுள்ள பொறுப்பு அடையாளங்களை குறியீட்டிலிருந்து நீக்குவதற்கு தடையில்லாச் சான்றிதழ் (NOC) பெறுவதற்காக வங்கியாளர்களுடன் பலமுறை முயற்சி செய்தும், தொடர்பு கொண்டும், வங்கிகளிடமிருந்து (நிறுவுப்புதாரர்) எந்தப் பதிலும் வரவில்லை.

வ.எண்	பொறுப்பு ஐடி	பொறுப்பு வைத்திருப்பவரின் பெயர்	உருவாக்கம்/மாற்றம் செய்யப்பட்ட தேதி	பொறுப்புத் தொகை (ரூ)
1	90301456	இந்தியன் வங்கி. சேத்துபட்டு கிளை	06.04.1979, Creation	3,00,000/-
2	90299140	இந்தியன் வங்கி. சேத்துபட்டு கிளை	13.05.1988, Modified	3,00,000/-
3	90302390	இந்தியன் வங்கி. சேத்துபட்டு கிளை	23.03.1980, Creation	72,000/-
4	90299223	Tamilnadu Investment Corp. Ltd	08.09.1980, Creation	1,15,000/-
5	90299287	இந்தியன் வங்கி. சேத்துபட்டு கிளை	11.06.1981, Creation 13.05.1988, Modified	3,00,000/-
6	90300059	இந்தியன் வங்கி. சேத்துபட்டு கிளை	25.02.1991, Creation	13,00,000/-
7	90300528	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி. அண்ணாசாலை	22.07.1995, Creation 07.08.1996, Modified	65,00,000/-
8	90300553	Apple Credit Corp Ltd	10.10.1995, Creation	4,00,000/-

அதன்படி, MCA போர்டலில் பராமரிக்கப்படும் பொறுப்புகளின் அட்டவணையிலிருந்து மேற்கூறிய பொறுப்பு அடையான எண்களை நீக்குவதற்காக/அகற்றுவதற்காக நிறுவனம் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் நிறுவனப் பதிவாளரிடம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மேற்கூறிய பொறுப்பு உரிமைகளை முன்மொழியப்பட்ட நீக்கம் / அகற்றுதல் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை அல்லது உரிமைக்கோரல் உள்ள எந்தவொரு நபரும், அதனை தனை ஆவணங்களுடன் எழுத்துப்பூர்வமாக, நிறுவனங்களின் பதிவாளர், பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகம், பிளாக் எண் 6, B பிரிவு, 2வது தளம், சாஸ்திரி பவன், தேஜோடோஸ் சாலை, சென்னை 600 034 மற்றும் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் அலுவலகத்திற்கு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து **14 நாட்களுக்குள்** சமர்ப்பிக்கலாம். நிறுவனம் பொருந்தக்கூடிய சட்டத்திற்கு உட்பட்டு தேவையான சட்டப்பூர்வ நடைமுறைகளை மேற்கொள்ளும்.

ஆட்டோ லைனர்ஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்காக
ஒப்பம்/-
ரவி ராமன்
இயக்குனர்
DIN 00120410

இடம்: சென்னை
தேதி: 11.11.2026

ஆவடி மாநகராட்சி

குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.

தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

வெள்ளிக்கிழமை 13-11-2026
பராபவ ஐப்பசி 27 ஹிஜ்ரி 1448 ஜமாத்துல் ஆகிர் 2

தவித்த வாய்க்குத் தண்ணீர்!

தமிழ்நாட்டில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் விநியோகத்துக்காக 2026-27 நிதிநிலை அறிக்கையின்போது ரூ. 29,800 கோடி ஒதுக்கப்படுவதாக தவெக அரசு அறிவித்தது. இதில் தமிழ்நாடு குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் வாரியத்துக்கு ரூ.340 கோடி ஒதுக்கி, குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிக்காக வழங்கியது.

உள்ளாட்சிகளில் அமலாகும் குடிநீர்த் திட்டங்கள் பலவும் உலக வங்கி அல்லது ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியில்தான் நடைபெறுகின்றன. இந்த நிதியைப் பெறும் உள்ளாட்சிகள் எவ்வாறு?, எத்தனை ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்?, அதற்கான குடிநீர்க் கட்டணத்தை எவ்வாறு தீர்மானிக்க வேண்டும்? என்று கடன் கொடுக்கும் நிறுவனங்களே ஆலோசனை சொல்கின்றன.

குடிநீர்க் கட்டணத்தை உயர்த்த வேண்டும், ஒவ்வொரு குடிநீர் இணைப்புக்கும் மீட்டர் பொருத்தி, பயன்படுத்தப்படும் நீரின் அளவைக் கணக்கிட வேண்டும் ஆகியவை உள்பட பல ஆலோசனைகள் (நிபந்தனைகள்?) வழங்கப்படுகின்றன. இந்த ஆலோசனைகளை அமல்படுத்த முற்பட்டால் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பிவிடுகிறது. அரசுக்கு எதிரான மனநிலையை உருவாக்க எதிர்க்கட்சிகள் அதைப் பயன்படுத்துகின்றன. இதில் எந்தக் கட்சியும் விதிவிலக்கல்ல.

குடிநீர்க் கட்டணத்தை ஆண்டுக்கு ரூ.100 உயர்த்தலாம் என நகர் மன்றக் கூட்டத்தில் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டால் அதற்கு எல்லா கவுன்சிலர்களும் கடும் எதிர்ப்புதெரிவிக்கிறார்கள். குடிநீர் கட்டண உயர்வுக்கு இந்த அளவுக்கு எதிர்ப்பு காணப்படும் தமிழ்நாட்டில், பாட்டில் குடிநீர் விற்பனை ஆண்டுக்கு ரூ 3,000 கோடியாக இருக்கிறது என்பதுதான் வேடிக்கை.

சென்னையில் மட்டும் 2 கோடி லிட்டர் பாட்டில் குடிநீர் தினமும் விற்பனையாகிறது. சென்னை மக்கள் 20 லிட்டர் குடிநீர் கேன் வாங்குவதற்காக ஒரு நாளைக்கு ரூ. 4 கோடி வரை செலவிடுகிறார்கள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. குடிநீர் இணைப்பு பெற்றுள்ள ஒரு குடும்பம், மாதந்தோறும் சராசரியாக ரூ. 553 குடிநீருக்கு செலவிடுகிறது என்று ஐஐடி நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதற்கு, உள்ளாட்சிகள் விநியோகம் செய்யும் குடிநீர் தரமானதாக, சுத்திகரிக்கப்பட்ட குடிநீராக இல்லை என்பது முக்கியக் காரணம். தரமாக இல்லை என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. பல ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட புதை குழாய்கள் உடைந்து அவற்றில் மழை நீர் கலப்பதும், சில வேளைகளில் சாக்கடை நீரும் சேர்ந்துவிடுவதும் வழக்கமாகவே மாறியிருக்கிறது.

குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கழுவப்படுவதாக கணக்கு காட்டுவது மட்டுமே நடக்கிறது; உண்மையில் எதுவும் நடப்பதில்லை. உள்ளாட்சி விநியோகம் செய்யும் நீரை குளிக்க, துணி துவைக்க, செடிக்கு தண்ணீர் ஊற்றப் பயன்படுத்திக் கொண்டு, குடிக்கவும் சமையலுக்கும் தனியாரிடம் கேன்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வாங்குவது நகர வாழ்க்கையாக மாறிவிட்டது.

அடுக்குமாடி குடியிருப்புகளில் ஆர்ஓ வாட்டர் வசதியை உருவாக்கி, நிலத்தடி நீரைச் சுத்திகரித்து குடிநீராக வீடுகளுக்கு விநியோகம் செய்கிறார்கள். பல வீடுகளில் ஆர்ஓ கருவிகள் பொருத்தி, சமையலுக்கும் குடிக்கவும் அந்த நீரைப் பயன்படுத்துகிறார்கள்.

அப்படியானால், குடிநீர் விநியோகத்துக்காக ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீட்டுக்கான அவசியம் என்ன? குடிநீர் விநியோகமா அல்லது பொதுப்பயன்பாட்டுக்கான தண்ணீர் விநியோகமா என்கிற கேள்வியும் எழுகிறது.

பொதுப்பணித் துறையை இரண்டாகப் பிரித்து, கட்டுமானங்களுக்கு ஒரு பிரிவும் நீர்வளத் துறையை தனியாகவும் பிரிக்க வேண்டிய சூழ்நிலை உருவானதுபோல, இப்போது பொதுப் பயன்பாட்டுக்கு தண்ணீர் விநியோகம், சமையல் மற்றும் குடிநீருக்காக தனியாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் எனத் தனியாக இரு பிரிவுகள் ஏற்படுத்துவதுதான் இதற்குத் தீர்வாக இருக்கும்.

சிங்கப்பூர் போன்ற சில நகரங்களில் இத்தகைய இரு வகை குழாய்கள் நடைமுறையில் உள்ளன. ஒரு குழாயில் வரும் நீர் குடிநீராகவும், மற்றொரு குழாயில் வரும் நீர் பிற தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. அத்தகைய மாற்றங்களை தமிழ்நாட்டில் கொண்டுவருவது இப்போதைக்கு சாத்தியமில்லை என்றாலும், குடிநீர் விநியோகத்தை ஏதாவது ஒரு வகையில் முறைப்படுத்தியாக வேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் உறுப்பினர் எண்ணிக்கைக்கு ஏற்ப, குறிப்பிட்ட அளவுக்கான தண்ணீரை உள்ளாட்சி அமைப்புகள் லாரிகளில் இலவசமாக வழங்குவது இப்போதைக்கு மிக எளிய மாற்றாக அமையும். அவ்வாறு செய்தால் நடுத்தர மக்கள் குடிநீருக்காக ஒரு தொகையை மாதந்தோறும் செலவிடும் அவலம் நேராது.

எந்தவித தரக்கட்டுப்பாடும் இல்லாமல், குடிநீர் கேன் என்ற பெயரில் தனியார் நிறுவனங்கள் மக்களைச் சுரண்டிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், தமிழக அரசு தனது குடிநீர் விநியோக முறையை மாற்றிக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம். ஜெயலலிதா ஆட்சியில் குறைந்த விலையில் சுத்திகரிக்கப்பட்ட 'அம்மா' குடிநீர் பாட்டில்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது நினைவுக்கு வருகிறது.

பெண்களுக்கு அனைத்து அரசுப் பேருந்துகளிலும் இலவசப் பயணம்; மாதந்தோறும் உரிமைத் தொகையாக ரூ. 1,000 அரசு வழங்கும் நிலையில் பொதுமக்கள் அடிப்படைத் தேவையான குடிநீரை விலை கொடுத்து வாங்குவது என்ன நியாயம்?

தண்ணீர் வேறு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வேறு. குடிநீருக்காக நடுத்தர வருவாய்க் குடும்பம் செலவு செய்வது, மக்கள் நல அரசின் நல்ல நிர்வாகத்துக்கு அழகு அல்ல.

நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.
எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.
திருக்குறள் (எண் 20) அதிகாரம்: வான் சிறப்பு

கல்வியே வாழ்க்கை அல்ல!

எங்கள் பள்ளியில் படித்து முடித்து கல்லூரி சென்ற மாணவிகள் பிளஸ் 2 வகுப்பு அசல் மதிப்பெண் சான்றிதழ் வாங்க வந்திருந்தார்கள். அவர்களிடம் கல்லூரிப் படிப்பு எப்படி இருக்கிறது? எனக் கேட்டதும் திறந்த வாய் மூடாமல் பேசினார்கள். பள்ளியில் ஆசிரியர்களே தட்டெடுத்து வைத்து உணவு பரிமாறி பிசைந்து வாயில் ஊட்டியதுபோல இருந்தது, கல்லூரியிலோ எங்கே உணவு இருக்கிறது எனத் தேடி எடுத்து சாப்பிடுங்கள் என்பதுபோல சொல்லி விட்டார்கள்.

கல்லூரியில் எல்லா நேரங்களிலும் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருக்கிறது. பள்ளிக் காலத்திலேயே இன்னும் கொஞ்சம் நன்றாகப் படித்திருக்கலாமோ, இன்னும் கொஞ்சம் வெளி உலகம் குறித்து அறிந்து வைத்திருந்திருக்கலாமோ, இன்னும் நடைமுறைத் திறன்களை கை வரப்பெற்றிருக்கலாமோ, இன்னும் நாட்டு நடப்பு குறித்து அதிகமாக சிந்தித்திருக்கலாமோ என்று இப்போது அறிவில் உரைக்கிறது என்று புலம்பினார்கள்.

'பள்ளிப் படிப்பு முடிந்த பிறகுதான் உண்மையான வாழ்க்கை என்றால் என்ன வென்று நீங்கள் கற்கத் தொடங்குவீர்கள். அப்போது ஏகப்பட்ட மெனக்கெடல்கள் தேவைப்படும்; அதுதான் உண்மையான சவால். அந்த சவாலை எதிர்கொள்ள இந்த அடிப்படை பாடப்புத்தக அறிவு மிக அவசியம்' என்று நம் பள்ளி ஆசிரியர்கள் அன்று சொன்ன அறிவுரை, இப்போதுதான் 200% உள்ளுக்குள் சென்று சேர்கிறது என முடித்தார்கள்.

அத்தனை பக்குவத்துடன் அவர்கள் பேசுவதைப் பார்க்க ஒருபுறம் வியப்பாகவும், மற்றொருபுறம் வேடிக்கையாகவும் இருந்தது. பாடப் புத்தகங்களைத் தாண்டிய மற்றொரு பாதை அவர்களுக்கு புலப்படத் தொடங்கியிருப்பதை அறிந்து மகிழ்ந்தேன்.

என் உறவினர் மகள் வகுப்பில் முதல் மூன்று மதிப்பெண்களுள் எடுப்பவள் தான். ஆனாலும், பக்கத்தில் இருக்கும் மளிகைக் கடைக்குச் சென்று பொருள் கேட்டு வாங்கத் தெரியாது எனும் நிலையில்தான் இருக்கிறாள். ஏன் என்று கேட்டால் பள்ளி முடிந்ததும் சிறப்பு வகுப்பு, அதை விட்டால் வீடு என்று அதற்கே அவளுக்கு நேரம் சரியாக இருந்ததால், எந்த இடத்துக்கும் அவளை அனுப்பி பழக்கவில்லை. அதனால், வெளி உலகத்தை எதிர்கொள்ளவே இப்போது அவளுக்குப் பதற்றமாக இருக்கிறது.

மேலும், அவள் பக்கத்து வீடுகளில் இருக்கும் பிள்ளைகளுடன் கலந்து பேசி விளையாடியது இல்லை. படிப்பது ஒன்றே முக்கியம் என்று அவளை அப்போது நாங்கள் வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. இப்போது ஒரு சின்னத் தோல்வியைக்கூட அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எந்த ஒரு விளையாட்டிலும் அவள் வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிறாளே தவிர, சின்னத் தோல்வி வந்தால் அழுது ஆர்ப்பாட்டம் செய்கிறாள். வெற்றி-தோல்வியை சமமாக எடுத்துக் கொள்ளும் பக்குவம் அவளுக்கு வரவில்லை. அதைக் காலம் கடந்து உணர்ந்து வருத்தப்படுகிறோம் என்றார் உறவினர்.



முனைவர் பவித்ரா நந்தகுமார்

சென்னையில் வசிக்கும் மற்றொரு தோழியின் பதின்பருவ மகள் காய்கறிகளெல்லாம் எந்த மரத்திலிருந்து காய்க்கிறது என தன் தாயிடம் அப்பாவியாக கேட்டிருக்கிறாள். நகரத்து குழந்தைகளின் வாழ்வியல் சூழல் கிராமத்து குழந்தைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. இதில் ஆறுதல்பட வேண்டிய ஒரே விஷயம் இவர்கள் எல்லோரையும் இணைத்து சமன்படுத்தும் கருவியாக கல்வி அமைகிறது என்பதுதான். கல்வி சார்ந்த பாடப் புத்தகம் மட்டுமே இவர்களை சமன்படுத்திவிடுமா?, பாடப்புத்தகம் என்பது வாழ்க்கையின் வரைபடம்தான், வாழ்க்கை அல்ல; வரைபடத்தை வைத்துக்கொண்டு நாம் பயணம் செய்யலாம்; ஆனால், வரைபடத்தையே பயணம் என்று நம்பி விட்டால் நாம் எங்கும் செல்ல முடியாது.

வெவ்வேறு பின்னணி குணம் கொண்ட மனிதர்களுடன் பழகும்போதுதான் சகிப்புத்தன்மையும் குழுவாக வாழும் குணமும் வளர்கிறது. மதிப்பெண்களைத் தாண்டி நமக்காக நிற்கும் நல்ல நண்பர்களையும் வழிகாட்டிகளையும் கண்டறிவது வாழ்க்கைப் பயணத்தை எளிதாக்கும்.

மதிப்பெண்களைத் தாண்டி மனிதர்களை உருவாக்கும் கல்வி எப்போது சாத்தியமாகும்?, ஒரு மாணவரிடம் இந்தக் கணக்கை எப்படி போடுவது?, இந்த சூத்திரத்தை யார் கண்டுபிடித்தார்? என்று கேட்டால் பாடப் புத்தகத்தில் படித்த விடையை, பெயரை சொல்லக்கூடும். ஆனால், தோல்வியடைந்த நண்பனை எப்படி தேற்றுவாய்?, பொது இடத்தில் ஒருவர் தவறு செய்தால் எப்படி செயல்படுவாய்?, உன்னிடம் இருக்கும் பணத்தை எப்படி பாதுகாப்பாக சேமிப்பாய்?, ஆரோக்கியமாக எப்படி சமைப்பாய்? என்று கேட்டால் அவனுடைய பதில்கள் தடுமாறக்கூடும்.

இந்தத் தடுமாற்றத்துக்குக் காரணம் வாழ்க்கையை எதிர்கொள்வதற்கான அனுபவங்களை கல்வியின் ஒரு பகுதியாக நாம் இன்னும் முழுமையாகச் செயல்படுத்தாதது தான். தேர்வறையில் விடையைக் கண்டறியும் ஒரு மாணவன், வாழ்க்கையின் சிக்கல்களில் தீர்வைக் கண்டறியவும் கற்றுக்கொள்ள வேண்டும். அதனால்தான் வகுப்புத் தலைவர்களைக்கூட சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும் என பள்ளிகளில் நெறிமுறை வகுத்திருக்கிறார்கள். எல்லா அனுபவங்களும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் அதன் சாராம்சம்.

பாடப் புத்தகத்துக்கு வெளியேயான கற்றலின் அவசியத்தை இந்திய கல்விக் கொள்கையும் அங்கீகரித்துள்ளது. 'தேசிய கல்விக் கொள்கை-2020' மனப்பாடக் கல்வியைக் கடந்து விமர்சனச் சிந்தனை, படைப்பாற்றல், சிக்கல் தீர்க்கும் திறன், ஒத்துழைப்பு போன்ற திறன்களை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. 'கற்றது கைமண்ணளவு- கல்லாதது உலகளவு' என்றார் ஔவை. நாம் கையில் வைத்திருக்கும் புத்தகம் கைம்மண்; வெளியே காத்திருக்கும் உலகமோ கடல்.

காமராஜர் பிறந்த நாளையொட்டி, பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ள மாணவிகள் தங்கள் பெயரை பதிவு செய்யலாம் எனக் கேட்டு வந்தபோது ஒரு வகுப்பில், ஒரு மாணவி கூட பெயர் கொடுக்க முன்வரவில்லை. என்று கேட்கப்பட்டது. அதில் 90 சதவீதத்துக்கும் அதிகமானோர் என்ன சொன்னார்கள் தெரியுமா? 'நாங்கள் ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ விரும்புகிறோம்' என்று பதில் கூறினர்.

அதன்பிறகு 30 ஆண்டுகள் கழித்து அதே பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்த மாணவர்களிடம் அதே கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு இந்த மாணவர்கள் 'நாங்கள் ஒரு வசதியான வாழ்க்கையை வாழ விரும்புகிறோம்' என்று பதில் சொன்னார்கள். மாணவர்களின் மனதில் எப்படி இப்படி ஒரு மாற்றம் என்று அவர்கள் மீண்டும் ஆய்வு செய்த போது, இவர்களைப் போல நாம் உருவாக வேண்டும் என்று நினைக்கக்கூடிய நல்ஆளுமைகள் குறைந்து போனதுதான் இந்த மனமாற்றத்துக்குக் காரணம் என்று கண்டறிந்தனர்.

வெவ்வேறு பின்னணி குணம்கொண்ட மனிதர்களுடன் பழகும்போதுதான் சகிப்புத்தன்மையும் குழுவாக வாழும் குணமும் வளர்கிறது. மதிப்பெண்களைத் தாண்டி நமக்காக நிற்கும் நல்ல நண்பர்களையும் வழிகாட்டிகளையும் கண்டறிவது வாழ்க்கைப் பயணத்தை எளிதாக்கும்.

மாணவர்களுக்கு பிடித்த பொழுது போக்குகள் என்ன என்பதை அவர்களே கண்டறிய இயலும். கலை, விளையாட்டு மற்றும் பயணங்கள் மூலமாக நம்மைப் பற்றி நாமே முழுமையாக புரிந்துகொள்ள முடியும். பாடப் புத்தகத்தில் தஞ்சை பெரிய கோயிலைப் பற்றி படிக்கும்போது இருக்கும் உணர்வைக் காட்டிலும், அந்தக் கோயிலுக்குச் சென்று அந்த மண்ணை மிதிக்கும்போது இருக்கும் உணர்வு ஆயிரம் மடங்கு அதிகம்.

அந்த நிஜ அனுபவம் அந்த பிரம்மாண்டத்தை நமக்குள் அப்படியே கடத்தும். அப்படி நாம் செல்லும்போது, நாம் ஏற்கெனவே பாடப்புத்தகத்தில் படித்ததை தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும். அப்படி செய்வதன்மூலம் நமக்கு பரந்துபட்ட அறிவு கிடைக்கும். நம் உலகப் பார்வையும் விரிவடையும். புத்தகப் புழுவாக மற்றும் அறிதிறன்பேசியிடம் சரணடைந்து கிடக்காமல் வெளியுலகைப் பார்ப்பதும், இயற்கையை ரசிப்பதும் மனதுக்கு பேரமைதியைத் தரும்.

கல்வி என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி மட்டுமே; அதுவே முழு வாழ்க்கையும் அல்ல. பாடப் புத்தகங்கள் எதிர்காலத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு பணியைத் தரலாம். ஆனால், ஒரு சிறந்த மனிதனாக வாழ்வதற்கான வழியை இந்த உலகமும் அதன்மூலம் கிடைத்த அனுபவங்களுமே கற்றுக்கொடுக்க முடியும்.

பாடப்புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் பாடம் முடிந்து விடுகிறது. ஆனால், வாழ்க்கையின் முதல் பக்கம் அப்போதுதான் திறக்கிறது.

கட்டுரையாளர்:
எழுத்தாளர்.

தொழில்நுட்பம் மட்டும் போதாது!

இல. பிரபு

காலத்துக்கேற்ப உன்னைப் புதுப்பித்துக்கொள்; இல்லையெனில், நீ புறக்கணிக்கப்படுவாய் என்ற பொன்மொழி அனைவருக்கும் பொருந்தும். ஆனால், அசையா சொத்தின் உரிமை மாற்றத்தை பொருத்தவரை, தமிழக அரசு சில நடைமுறைகளை புதுப்பித்துக்கொள்ளும் போது, வருங்கால தலைமுறைகளுக்கு எந்தவித மான சட்டச் சிக்கல்களும் ஏற்படாதவகையில் புதிய நடைமுறைகளை அமலுக்கு கொண்டு வர வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

அந்த வகையில், தமிழ்நாடு பத்திரப் பதிவு துறையில், தற்போது நடைமுறைக்கு வந்துள்ள வருகையில்லா பத்திரப் பதிவு நடைமுறை குறித்தும், முந்தைய பத்திரப் பதிவு நடைமுறை குறித்தும் நாம் கூராய்வு செய்ய வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம்.

முன்பு ஒரு காலகட்டத்தில், பதிவு செய்யப்பட்ட சுத்த விற்கிரைய ஆவணங்களைப் படித்துப் பார்க்கும் போது, ஒரு குறிப்பிட்ட அசையா சொத்தை ஒருவர் மற்றொருவரிடம் ஒரு குறிப்பிட்ட தேதியில் எழுதி வாங்கி, ஒரு குறிப்பிட்ட தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற வாசகம் எழுதப்பட்டிருக்கும். அதாவது, ஓர் அசையா சொத்தின் உரிமையாளரிடம் எந்த இடத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், வெற்றுப் பத்திரத்தில் கையொப்பம் பெறப்பட்டு, அந்தப் பத்திரத்தில் என்ன வேண்டுமானாலும் எழுதி நிறைவுசெய்து பத்திரப் பதிவு செய்யலாம் என்ற சூழ்நிலை நிலவிய காலம் அது.

ஓர் அசையா சொத்தின் உரிமையாளரால் உண்மையாகவே முழு சம்மதத்துடன்தான் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை ஊர்ஜிதம் செய்ய இயலாத சூழ்நிலைகள் பிற்காலங்களில் ஏற்பட்டதால், எழுதிக்கொடுப் பவர் புகைப்படம் பதிவுப் பத்திரத்தில் ஒட்டப்பட்டு நேரடியாக சார்பதிவகம் வந்து கையொப்பமிட வேண்டும் எனவும், பின்பு எழுதிக்கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவர் இருவரின் புகைப்படங்களும் பதிவுப் பத்திரத்தில் ஒட்டப்பட்டு, இருவரும் சார்பதிவகத்துக்கு நேரடியாக வந்து கையொப்பமிட வேண்டும் எனவும் நடைமுறை அமலுக்கு வந்தது.

அதைத் தொடர்ந்து ஆள்மாறாட்ட மோசடிகள் நடைபெற வாய்ப்பு இருப்பதால், சாட்சிகள் உள்பட பத்திரப்பதிவு சம்பந்தமான அனைவரும் சார்பதிவகத்தில் நேரடியாக வந்து இணையவழியில் புகைப்படம் எடுக்கப்பட்டு விரல்ரேகை மற்றும் கையொப்பம் பெறப்பட்டு பத்திரப்பதிவு செய்யப்பட்டது.

மேலும், ஆள்மாறாட்ட முறைகேடுகளைத் தவிர்க்கும் பொருட்டு பத்திரப்பதிவு நிகழ்வுகள் விடியோ பதிவு செய்யப்பட்டு, பதிவு பத்திரத்துடன் குறுந்தகடு (சிடி) வழங்கப்பட்டு வந்தது.

தற்போது தமிழகத்தில் மனை மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் முதல் விற்பனை பதிவு அதாவது, சார்பதிவகத்தில் இதுவரை பதிவு செய்யப்படாமல் முதல்முறையாக பத்திரப்பதிவு செய்யப்படும் அசையா சொத்துகளை இணைய வழி வாயிலாக எழுதிக்கொடுப்பவர், எழுதிவாங்குபவர் மற்றும் சாட்சிகள் என அனைவரும் சார்பதிவகத்துக்கு நேரடி வருகையில்லா பத்திரப் பதிவு நடைமுறை குறித்து, கடந்த ஆண்டு ஜூலை 7-ஆம் தேதி தமிழக அரசு அரசாணை பிறப்பித்து, அதன் தொடர்ச்சியாக கடந்த ஆகஸ்ட் 17-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

இப்புதிய நடைமுறையில் ஒரு குறிப்பிட்ட அசையா சொத்து, சொத்துகளை ஒருவர் மற்றொருவருக்கு உரிமை மாற்றம், கிரையம் செய்து கொடுக்க முற்படும்போது, பத்திரப்பதிவு துறையின் ஆன்லைன் போர்டலில், சொத்துகளைப் பதிவு செய்வதற்கு தேவையான மூல ஆதரவு ஆவணங்கள் மற்றும் பதிவுக்கு தேவையான அனைத்து விவரங்களையும் உள்ளீடு செய்து எழுதிக்கொடுப்பவர், எழுதிவாங்குபவர் மற்றும் சாட்சிகள் என அனைவரது மின்னணு கையொப்பத்தை உள்ளீடு செய்து சம்பந்தப்பட்ட சார்பதிவாளருக்கு இணையவழியில் சமர்ப்பிக்கப்படுகிறது.

இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை சார்பதிவாளர் சரிபார்த்து அவற்றை சார்பதிவகத்திலிருந்து பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்ட மின்னணு பதிவு ஆவணத்தை மின்னஞ்சல் வாயிலாக சம்மந்தப்பட்ட நபருக்கு அனுப்பி வைப்பார். அதைப் பதிவிறக்கம் செய்து, அசையா சொத்தின் உரிமை மாற்றப்பட்ட சொத்தின் உரிமையாளர் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணமாக உரிமை மாற்றப்பட்ட ஆவணமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பத்திரப்பதிவு சார்ந்த மின்னணு வாயிலாக பெறப்பட்ட அனைத்துத் தகவல்களின் உண்மைத் தன்மையை, சார்பதிவ கோப்புகள், சார்பதிவக மின்னணு கோப்புகளுடன் ஒத்திசைவு செய்து சார்பதிவாளர் சரிபார்க்க இயலுமே தவிர, சொத்தின் உரிமையாளர் சுயநினைவுடன் அல்லது ஏதாவது கட்டாயத்தின் பேரில் உள்ளீடு செய்தாரா என்பதை ஊர்ஜிதம் செய்ய இயலாது.

சுயநினைவுடன் அல்லது எந்தவிதமான கட்டாயத்தின் பேரிலும் உள்ளீடு செய்யவில்லை என்றாலும், எப்போதாவது ஒரே ஒரு முறை அசையா சொத்து வாங்கும்போது அல்லது விற்பனை செய்யும்போது இணையவழி சார்ந்த உள்ளீட்டு சாதனங்கள் அனைத்தையும் சாமானிய மக்களால் அதிக விலைக்கு வாங்கி பயன்படுத்த இயலாது.

மேலும், தனியார் மூலமாக பத்திரப் பதிவு சேவை மையங்களை அரசு ஏற்படுத்திக் கொடுத்தாலும் இடைத்தரகர்களின் ஆதிக்கம் அதிகரிக்கத்தான் செய்யும்.

ஓர் சாதாரண சார்பதிவகத்தில், சார்பதிவாளர் முதல் கடைநிலைப் பணியாளர் வரை 5 அல்லது 7 அரசு நிரந்தரப் பணியாளர்கள் பணிபுரிந்த முந்தைய நிலைமாறி தற்போது, ஒன்று அல்லது இரண்டு அரசு நிரந்தர பணியாளர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர்.

பத்திரப் பதிவில் குளறுபடிகள் ஏதும் நிகழாத வகையில் முறையாக பதிவுகள் நடைபெற அனைத்து சார்பதிவகங்களுக்கும் நிரந்தரப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். முன்பு நிகழ்ந்த மோசடிகள் இணையவழியிலும் ஏற்படாமல் தடுக்க வேண்டியது தமிழக அரசின் கடமை.

அன்புள்ள ஆசிரியருக்கு...

edit.dinamani@gmail.com

காரணம் என்ன?

ஒரு சம்பவம் நடந்த பிறகு குழு அமைப்பதும், அறிக்கையைப் பெறுவதும், சட்டப்பேரவையில் விவாதப் பொருள் ஆவதும், அடுத்து ஏதாவது ஒரு சம்பவம் நடந்ததும் பழைய அறிக்கை மறக்கப்படுவதும் காலம் காலமாக அரசியல் வரலாற்றில் நடப்பதுதான் ('குழு அமைத்தால் ஆயிற்றா?'- ஆசிரியர் உரை, 05.11.26). 200 பேரை அடைக்க வேண்டிய தேனி சிறையில் கூடுதலாக நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகளை அடைத்ததும், பல ஏக்கர் பரப்பளவு கொண்ட சிறைகளில் உயர் கோபுரங்கள் இருந்தும் காவலர்கள் பற்றாக்குறையால் அது செயல்படவில்லை என்பதும் சிறை நிர்வாகம் செம்மையாகச் செயல்படவில்லை என்பதைக் காட்டுகின்றன. கைதிகள் தப்பி ஓடியதற்குக் காரணம் சிறைக்கொடுமைகளா? அல்லது வேறு நோக்கம் ஏதும் உள்ளதா? என்பதையும் ஆராய வேண்டும்.

உ. இராசமாணிக்கம், கடலூர்.

அரசியல் தலையீடில்லாமல்...

அரசுப் பணிகளில் நேரடி நியமனம் வயது வரம்பு உயர்த்தி வெளியிட்டது வரவேற்கதக்கது ('பக்கவிளைவு ஆபத்து!'- ஆசிரியர் உரை, 06.11.26). அதே சமயம் இன்றைய அதிநவீன தொழில்நுட்ப தாக்கத்தால் இளைஞர்களின் செயல்பாடுகளில் சற்று பின்னடைவு ஏற்படும் என்பதையும் மறுப்பதற்கில்லை. இதற்கு நிரந்தரத் தீர்வு, தேர்வாணையத்தின் செயல்பாடுகளில் அரசியல் தலையீடில்லாமல் இருப்பதும், தேர்வுகளின் முடிவுகளை உடனுக்குடன் வெளியிடுவதும், நீதிமன்ற வழக்குகள் இருந்தால் உடனடியாகத் தீர்வு கண்டு தேர்ச்சி முடிவுகளை உடனுக்குடன் வெளியிட வேண்டும். அதனால், ஒரு தேர்வில் தேர்ச்சி பெற முடியாவிட்டாலும் அடுத்த முயற்சி மற்றும் தேர்வில் வெற்றி பெறுவார்கள். முக்கியமாக தேர்வாணைய செயல்பாடுகளில் முழு சுதந்திரம் தேவை.

ச. சிவசண்முகம், குளத்துப்பாளையம்.

நல்ல முன்னெடுப்பு

தமிழக அரசுப் பணிகளில் நேரடி நியமனத்துக்கான தேர்வர்களுக்கு வயது வரம்பை 5 ஆண்டுகள் உயர்த்தியது நல்ல முன்னெடுப்பு ('பக்கவிளைவு ஆபத்து!'- ஆசிரியர் உரை, 06.11.26). தற்போது இந்த ஐந்தாண்டுகள் சலுகை நிச்சயம் பலருக்கு மீண்டும் அரசுப் பணி தேர்வுகள் எழுத வாய்ப்பு கிடைக்கும் என்ற வகையில் மகிழ்ச்சிதான். அதே நேரத்தில், அரசுத் துறைகளில் ஒவ்வோர் ஆண்டும் உருவாகும் காலிப் பணியிடங்களை அரசு தவறாது கணக்கெடுத்து, அவற்றை நிரப்ப போட்டித் தேர்வுகள் நடத்த வேண்டும். தேர்வுக்கான அட்டவணையை முன்கூட்டியே அறிவித்து குளறுபடிகள் இல்லாமல் தேர்வை நடத்தினால், இதுபோன்ற சலுகைகள் அறிவிக்க வேண்டியிருக்காது. சிறந்த நிர்வாகம் நடைபெற போதிய அளவில் பணியாளர்கள் இருப்பது அவசியம்.

அ.குணசேகரன், புவனகிரி.

பெருமைமிகு இந்தியா

ரஷியாவின் ஸ்புட்னிக்கில் தொடங்கி அமெரிக்கா, ஐரோப்பா, சீனா ஆகிய நாடுகளின் சாதனைகள் வழியாகப் பயணித்து, இந்தியா செலுத்திய நேவிக் அமைப்பு குறித்து முழுமையாகத் தெரிந்துகொள்ள முடிந்தது ('வழிகாட்டும் செயற்கைக் கோள்கள்!'-கட்டுரை, முனைவர் இளங்கோ கட்டிமுத்து, 06.11.26). ஜிபிஎஸ், கூகுள் மேப் என இரண்டுக்குமான வேறுபாடுகளைச் சிறப்பாகக் கட்டுரையாளர் விளக்கியுள்ளார். வழிகாட்டிச் செயற்கைக் கோள்கள் பொருளாதாரம், நாட்டின் பாதுகாப்பு, பேரிடர் மீட்பு என பல துறைகளுக்குத் தேவைப்படுகின்றன. விரைவில் நேவிக் உலக முழுமைக்குமான தாகும் என்கிற அரசின் அறிவிப்பு வர வேற்புக்குரியது. மேலும், பல சாதனைகளைப் படைக்க இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துகள்.

என்.ஆர்.ஸத்யமூர்த்தி, கடலூர்.

கொச்சைப்படுத்த வேண்டாம்

படிவம் 6-இல் செய்த திருத்தங்கள்தான் சுமார்13 கோடி வாக்காளர்களின் பெயர் நீக்குவதற்குக் காரணம் ('இளைஞர் சக்தியை வீணடிக்கும் கரப்பான்கள்!'- கட்டுரை, வானதி சீனிவாசன், 05.11.26). அரசியல் சாசனம் தராத ஒரு அதிகாரத்தை தேர்தல் ஆணையம் எப்படி தன் கையில் எடுத்தது என்று நேர்மையாக கேள்வி எழுப்பும் இளைஞர்களை வீணான வர்கள் என்று குற்றம் சாட்டுவதா? பல கேள்விகளுக்கு உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், பிரதமர் நரேந்திர மோடியும் கூறும் பதில்கள் சட்டத்துக்கு உள்பட்டதாகவும், நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும்படியும் இல்லை. உச்சநீதிமன்றமே ஆடிப் போகும் அளவுக்கு நீதிபதிகளை நோக்கி கேள்விக் கணைக

நாட்டில் திறமைக்குப் பஞ்சமில்லை: சரியான வழிகாட்டுதல் அவசியம்

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு

புது தில்லி, நவ. 12: 'நாட்டில் திறமைக்கு எந்தப் பஞ்சமும் இல்லை; மாணவர்களுக்கு சரியான வாய்ப்புகளும், முறையான வழிகாட்டுதல்களும் அவசியம்' என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வியாழக்கிழமை தெரிவித்தார்.

நாட்டின் தொலைவிடப் பகுதிகளில் வாழும் பழங்குடியின மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கும் ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகளைச் சேர்ந்த சிறந்த மாணவர்கள் குழுவினர், தில்லியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் வியாழக்கிழமை சந்தித்தனர். மாணவர்களுடனான கலந்துரையாடலின்போது முர்மு பேசியதாவது:

கல்வி என்பது வெறும் வாழ்வாதாரத்துக்கான வழிமுறை மட்டுமல்லாமல், அறிவின் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான இலக்காகவும் இருக்க வேண்டும். மாணவர்கள் உயர்ந்த இலக்குகளுடன் அர்ப்பணிப்பு, ஒழுக்கம் மற்றும் தன்னம்பிக்கையுடன் தங்களின் கனவுகளை நனவாக்க பாடுபட வேண்டும்.

வேலைவாய்ப்புகளை உருவாக்குபவர்களாக இளைஞர்கள் உருவெடுக்கும்போது, அனைவரையும் உள்ளடக்கிய நாட்டின் வளர்ச்சிப் பயணம் மேலும் உத்வேகம் பெறும்.

பழங்குடியின மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதுடன், பன்முகத் திறன்களில் அவர்கள் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்புகளையும் ஏகலைவா மாதிரி உறைவிட பள்ளிகள் வழங்குகின்றன.

திறமைக்குப் பஞ்சமில்லாத நாடு: நாட்டில் திறமைக்கு எந்தப் பஞ்சமும் இல்லை. மாணவர்களுக்கு சரியான வாய்ப்புகளும், முறையான வழிகாட்டுதலும், ஆக்கபூர்வமான சூழ்நிலையும் அவசியம்.

ஏகலைவா பள்ளிகளில் மாணவர்கள்-மாணவிகள் விகிதம் சமமாக இருப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. அனைவரையும் உள்ளடக்கிய நாட்டின் வளர்ச்சிக்கு இதுவே சாட்சியாகும்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாகும் இலக்குடன் தேசம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. எனவே, நாட்டின் ஒவ்வொரு பிராந்தியம், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவின் முன்னேற்றமும் முக்கியமானது.

தேசத்திலும் உலகிலும் நடப்பு நிகழ்வுகள் மற்றும் மாற்றங்கள் குறித்து மாணவர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். இது, தர்க்க ரீதியிலான சிந்தனை மற்றும் பகுப்பாய்வு திறன்களுக்கு உதவும்.

நடப்பு நிகழ்வுகள் குறித்த அறிவு: நடப்பு நிகழ்வுகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்கள் குறித்து தாங்கள் அறிந்த விவரங்களை குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், அண்டை வீட்டார் மற்றும் கிராம மக்களுடன் மாணவர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய முயற்சிகள், குடும்பம் மற்றும் சமூகத்துக்குப் பலனளிக்கும். மாணவர்கள் கற்ற கல்விக்கு மிகப் பெரிய அர்த்தமும், பலனும் கிடைக்கும் என்றார் திரௌபதி முர்மு.

மறைந்த சுதந்திரப் போராட்ட வீரரும், பழங்குடியினத் தலைவருமான பிர்சா முண்டாவின் பிறந்த தினம் வரும் நவ.15-ஆம் தேதி கொண்டாடப்படவுள்ளது. இதன் ஒரு பகுதியாக, மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சக ஏற்பாட்டில் ஏகலைவா பள்ளி மாணவர்கள் குழு குடியரசுத் தலைவரைச் சந்தித்துள்ளது.

பிர்சா முண்டாவின் பிறந்த தினத்தை பழங்குடியினர் கௌரவ தினமாக மத்திய அரசு கடந்த 2021-இல் அறிவித்தது. இதையொட்டி, ஒவ்வோர் ஆண்டும் நவ.1 முதல் நவ.15 வரை பழங்குடியினர் கௌரவ காலகட்டமாக கடைப்பிடிக்கப்படுகிறது.



குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்ட ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகளைச் சேர்ந்த சிறந்த மாணவர்கள் குழுவினர்.

சென்னையில் 12 சிறு வட்ட அலுவலகங்கள்

முதல்வர் விஜய் உத்தரவு

சென்னை, நவ. 12: சென்னையில் 8 வட்டங்களில் ரூ.2.14 கோடியில் 12 சிறு வட்ட அலுவலகங்கள் அமைக்க முதல்வர் ஜோசப் விஜய் உத்தரவிட்டார்.



இது தொடர்பாக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அரசு சேவைகளை முழுமையாக எண்ம (டிஜிட்டல்) மயமாக்கி, பொது மக்களுக்கு எளிதான, விரைவான, வெளிப்படையான மற்றும் நம்பகமான சேவையை வழங்குவது தமிழ்நாடு அரசின் நோக்கமாகும். அதன்படி, தமிழ்நாடு அரசு இணையவழி சான்றிதழ் வழங்கும் முறையை விரிவுபடுத்தி வருகிறது.

மேலும், வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, வகுப்புச் சான்று, முதல் பட்டதாரி சான்று, வாரிசு சான்று, பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் உள்ளிட்ட 26 சேவைகளை இணையவழி மூலம் எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் விண்ணப்பித்துப் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் அதிக மக்கள்தொகை உள்ளதால், வருவாய்த் துறை சார்ந்த இணையவழி சேவைகள் மற்றும் இதர நிலம் தொடர்பான சேவைகளைப் பொதுமக்கள் சிரமமின்றி விரைந்து பெறுவதற்கு ஏதுவாக சிறுவட்ட அலுவலகங்கள் உருவாக்க வேண்டியது அவசியமாகிறது.

ஆகையால், பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் இருப்பிடங்களுக்கு அருகிலேயே தங்களுக்கான சேவைகளைப் பெறும் வகையில் சென்னையில் 12 சிறுவட்ட அலுவலகங்கள் அமைக்கப்படும் என ஏற்கெனவே பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதைச் செயல்படுத்தும் வகையில், ரூ. 2.14 கோடியில் துணை வட்டாட்சியர் தலைமையில் 12 சிறு வட்ட அலுவலகங்கள் அமைக்க முதல்வர் ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, சென்னை மாவட்டத்திலுள்ள பெரம்பூர் வட்டத்துக்குள்பட்ட கொடுங்கையூர் மற்றும் எருக்கஞ்சேரி, மதுரவாயல் வட்டத்துக்குள்பட்ட போரூர், அம்பத்தூர் வட்டத்துக்குள்பட்ட முகப்பேர் மற்றும் கொரட்டூர், மாம்பலம் வட்டத்துக்குள்பட்ட சாலிகிராமம், சோழிங்கநல்லூர் வட்டத்துக்குள்பட்ட நீலாங்கரை, பள்ளிக்கரணை மற்றும் சோழிங்கநல்லூர், வேளச்சேரி வட்டத்துக்குள்பட்ட திருவான்மியூர் - பெசன்ட் நகர், மயிலாப்பூர் வட்டத்துக்குள்பட்ட திருவல்லிக்கேணி மற்றும் ஆலந்தூர் வட்டத்துக்குள்பட்ட மணப்பாக்கம் ஆகிய 12 சிறுவட்ட அலுவலகங்கள் அமைக்கப்படும்.

விவசாயக் கடன் தள்ளுபடி: பயனாளிகள் விவரம் அனுப்ப உத்தரவு

சென்னை, நவ. 12: விவசாயக் கடன் தள்ளுபடி தொடர்பாக பயனாளிகளின் விவரங்களை நவ. 20-ஆம் தேதிக்குள் அனுப்ப கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் விவசாயக் கடன் தள்ளுபடியை செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை அனைத்து மண்டல இணைப் பதிவாளர்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை இயக்குநர்களுக்கு கடிதம் அனுப்பி உள்ளார்.

அதில், பயிர்க் கடன் விவரங்களைச் சரிபார்த்து, தகுதியான பயனாளிகளின் பட்டியலைத் தயாரித்து, வரும் நவ. 20-ஆம் தேதிக்குள் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும். மேலும், பயனாளிகளின் பட்டியல் கூட்டுறவுத் துறையின் இணையதளமான www.kooturavu.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டு, அது குறித்த ஆட்சேபணைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சியருக்கு குறுஞ்செய்தி: சம்பவம் நடைபெறவில்லை

சென்னை, நவ. 12: கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியருக்கு தவெக எம்எல்ஏ அவதூறு குறுஞ்செய்தி அனுப்பியதாக திமுக எம்.பி. கனிமொழி கூறுவது போன்ற சம்பவம் நடைபெறவில்லை என்று சட்டத் துறை அமைச்சர் நிர்மல் குமார் கூறினார்.

இதுதொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை அவர் கூறியதாவது: கள்ளக்குறிச்சி சட்டப்பேரவை உறுப்பினர் தொடர்பான விவகாரத்தில் கனிமொழி சமூக ஊடகங்களில் பார்த்த தகவல்களின் அடிப்படையில் பதிவிட்டுள்ளார். சம்பந்தப்பட்ட நபரைத் தொடர்புகொண்டு என்ன நடந்தது என்று விசாரிக்க அனைவருக்கும் உரிமை உள்ளது. கனிமொழி கூறியதைப் போன்ற எந்தச் சம்பவமும் நடைபெறவில்லை.

பேரவை துணைத் தலைவர் ரவிசங்கர் தொடர்பான விவகாரத்தில் பல்வேறு தரப்பினரும் மாறி மாறி கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர். இந்த விவகாரத்தில் உண்மையில் என்ன நடந்தது என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

தமிழக சட்டம்-ஒழுங்கு விவகாரத்தில் திமுக பொய்ப் பிரசாரம் செய்கிறது. தீபாவளி தினத்தன்று தமிழகத்தில் 8 கொலைச் சம்பவங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளன. சட்டம்-ஒழுங்கு விவகாரம் தொடர்பாக முதல்வர் விஜய் தொடர்ந்து 3 நாள்களாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தி வருகிறார்.

தவெக ஆட்சியில் இதுவரை



19,000 சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். போக்ஸோ சட்டத்தின் கீழ் 6,700 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், 3,229 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களில் 152 பேரைத் தவிர மற்ற அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல் துறையினர் மீது தாக்குதல் நடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த 2 ஆண்டுகளாக காவல் துறையில் ஒருவர்கூட புதிதாகப் பணியமர்த்தப்படவில்லை. தற்போது 10,000 பேரைக் காவல் துறையில் பணியமர்த்துவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கூடுதல் நிதியுதவி வழங்கியுள்ள முதல்வர், நிலுவையில் உள்ள வழக்குகளை ஆய்வு செய்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்துள்ளார் என்றார் அமைச்சர் நிர்மல் குமார்.

தமிழக மாலுமி விவகாரம்: திண்டுக்கல் மாலுமி நவீன் குமார் கடந்த மே 9-ஆம் தேதி ஈரானின் ஹோர்முஸ் நீரிணை பகுதியில் காணாமல் போன விவகாரம் குறித்த கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் நிர்மல் குமார், 'இந்த விவகாரம் குறித்து வெளியுறவு அமைச்சகத்துடன் உயர்நிலை அளவில் பேசி வருகிறோம். தற்போது வரை இடத்தைக் கண்டறிய முடியவில்லை. தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என்றார் அவர்.

தவெக எம்எல்ஏ மீது திமுக, அதிமுக புகார்

ஆட்சியருக்கு குறுஞ்செய்தி அனுப்பியதாகக் கூறப்படும் விவகாரத்தில் கள்ளக்குறிச்சி தொகுதி தவெக எம்எல்ஏ அருள் விக்னேஷ் மீது திமுக, அதிமுக சார்பில் தமிழக காவல் துறை தலைமை இயக்குநரிடம் புகார் அளிக்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக திமுக அமைப்பு செயலர் ஆர்.எஸ்.பாரதி சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

பெண் மாவட்ட ஆட்சியருக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்ட விவகாரம் தொடர்பாக தவெக எம்எல்ஏ அருள் விக்னேஷ் மீது பாதிக்கப்பட்ட அந்த மாவட்ட ஆட்சியரின் கணவரே புகார் கொடுத்துள்ளார். இதுதொடர்பாக ஏற்கெனவே, மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தும் பயனில்லை. எனவே, இதுகுறித்து தமிழக டிஜிபியிடம் புகார் அளித்துள்ளோம். கள்ளக்குறிச்சி எம்எல்ஏ மீது வழக்குப் பதிவு செய்து சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றார் அவர்.

அதிமுக புகார்: இதனிடையே, தவெக எம்எல்ஏ அருள் விக்னேஷ் மீது அதிமுக சார்பில் அந்தக் கட்சியின் தென் சென்னை மாவட்ட வழக்குரைஞர் பிரிவு துணைச் செயலர் ஆர்.திரிசூலி, தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், தமிழக காவல் துறை தலைமை இயக்குநர் ஆகியோருக்கு புகார் மனு அனுப்பினார்.

அதில் இந்த விவகாரம் குறித்து சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

தகுதிநீக்கக் கோரும் விவகாரம்: விசாரணையை நிறைவு செய்தார் பேரவைத் தலைவர்

சென்னை, நவ. 12: அதிமுக விலிருந்து விலகி தவெகவில் இணைந்த 4 எம்எல்ஏ-க்களை தகுதிநீக்கக் கோரும் மனு மீதான விசாரணையை பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் வியாழக்கிழமை நிறைவு செய்தார்.

அதிமுகவில் இருந்து விலகி தவெக-வில் இணைந்த மரகதம் குமரவேல், சத்தியபாமா, ஜெயக்குமார், இசக்கி சுப்பையா ஆகிய 4 எம்எல்ஏக்களையும் தகுதிநீக்கம் செய்யக் கோரி அதிமுக சார்பில் மனு அளிக்கப்பட்டது. இந்த விவகாரத்தில் 2 மாதங்களுக்குள் முடிவு எடுக்க பேரவைத் தலைவருக்கு உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியது. இதையடுத்து, பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் வியாழக்கிழமை 2-ஆவது நாளாக இறுதிக்கட்ட விசாரணையை நடத்தினார். இதில் முன்னாள் எம்எல்ஏக்கள் இசக்கி சுப்பையா, ஜெயக்குமார், தவெக சார்பில் இடைத்தேர்தலில் வெற்றிபெற்று எம்எல்ஏக்களாக உள்ள சத்தியபாமா, மரகதம் குமரவேல் ஆகியோர் சார்பில் அவர்களது வழக்குரைஞர்கள் ஆஜராகி வாதங்களை முன்வைத்தனர்.

அதிமுக தரப்பில் முன்னாள் அமைச்சர்கள் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, தளவாய் சுந்தரம், மாநிலங்களவை உறுப்பினர் இன்பதுரை ஆகியோர் பங்கேற்று தங்கள் தரப்பு வாதங்களை எடுத்து



ரைத்தனர்.

பிறகு செய்தியாளர்களிடம் பேசிய தவெக வழக்குரைஞர் சூரிய பிரகாசம், 'சம்பந்தப்பட்ட 4 பேருக்கும் முறையாக கொறடா உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. அதற்கான ஆதாரமும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை எடுத்துரைத்தோம். புகார் அளித்த எடப்பாடி பழனிசாமியும் பேரவைத் தலைவர் முன் ஆஜராகவில்லை. எனவே, இந்தப் புகாரைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டோம்' என்றார்.

அதிமுக எம்எல்ஏ அக்ரி கிருஷ்ணமூர்த்தி, தளவாய் சுந்தரம், இன்பதுரை ஆகியோர் கூட்டாகச் செய்தியாளர்களிடம் கூறுகையில், ' எடப்பாடி பழனிசாமி நேரில் ஆஜராக வேண்டிய அவசியம் இல்லை. அவரது சார்பில் கட்சிக் கொறடா தேவையான அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளார். பேரவைத் தலைவர் உரிய முடிவை எடுப்பார் என நம்புகிறோம்.

சட்டப்பேரவை கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பாக அதிமுக அனைத்து எம்எல்ஏக்களும் ஒன்றுகூடி எடப்பாடி பழனிசாமியை சட்டப்பேரவைக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அதன் அடிப்படையில்தான் அவர் கொறடாவை நியமித்துள்ளார். இதற்கான ஆவணங்களையும் பேரவைத் தலைவரிடம் சமர்ப்பித்துள்ளோம்' என்றனர்.

இருதரப்பு வாதங்களும் நிறைவடைந்துள்ளதால் பேரவைத் தலைவர் விரைவில் இறுதி முடிவு எடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எஸ்.பி.வேலுமணிக்கு எதிரான ஒப்பந்தப்புள்ளி முறைகேடு வழக்கு: இரு ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடுக்க அனுமதி

மத்திய அரசு தகவல்

சென்னை, நவ. 12: அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணிக்கு எதிரான ஒப்பந்தப்புள்ளி முறைகேடு வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள இரு ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தது.

2016-2021-ஆம் ஆண்டு வரையிலான அதிமுக ஆட்சிக் காலத்தில், உள்ளாட்சித் துறை அமைச்சராக எஸ்.பி.வேலுமணி இருந்தபோது சென்னை, கோவை உள்ளிட்ட மாநகராட்சிகளில் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. இதில், ரூ.98.25 கோடி முறைகேடு நடந்துள்ளதாக அறப்போர் இயக்கம் குற்றம்சாட்டியது. இதையடுத்து, எஸ்.பி.வேலுமணி மற்றும் ஒப்பந்த நிறுவனங்கள் மீது ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கை விரைவாக விசாரித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சென்னை உயர்நீதின்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை அமல்படுத்தவில்லை எனக்கூறி, அறப்போர் இயக்கம் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்தது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஐஏஎஸ் அதிகாரிகளான கந்தசாமி மற்றும் விஜய கார்த்திகேயன் ஆகிய இருவருக்கு எதிராக வழக்குத் தொடர அனுமதி வழங்குவது தொடர்பான நடைமுறையை 2 மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என கடந்த செப்டம்பர் மாதம் மத்திய அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித்துறை இணைச் செயலர் சார்பில் மனு தாக்கல் செய்த மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், ஐஏஎஸ் அதிகாரிகளான கந்தசாமி மற்றும் விஜய கார்த்திகேயன் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அதற்கு தமிழக அரசு மற்றும் ஊழல் தடுப்புத் துறை தரப்பில், ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடர அனுமதியளித்து மத்திய அரசு பிறப்பித்த உத்தரவு கிடைக்கப்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, மத்திய அரசின் அனுமதி உத்தரவைப் பெற்ற பின்னர், ஊழல் தடுப்புத் துறை இரு ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு எதிராக சிறப்பு நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் நடைமுறையை மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டார்.

மேலும், இந்த வழக்கில் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டிருந்த மத்திய அரசை நீக்க உத்தரவிட்ட நீதிபதி, குற்ற வழக்குகள் எப்படி நடத்தப்படுகிறது, என்பதற்கு இந்த வழக்கு மிகப்பெரிய உதாரணம். ஏழைகளுக்கு எதிரான வழக்குகளில் வேகமாக சூழலும் அரசு இயந்திரத்தின் சக்கரத்தை, செல்வாக்கு மிக்கவர்களுக்கு எதிரான வழக்குகளில் பிடித்துத் தள்ள வேண்டி இருப்பதாக வேதனை தெரிவித்தார்.

பின்னர், இந்த வழக்கின் முன்னேற்றங்களை நீதிமன்றம் கண்காணிக்கும் என உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை டிச. 4-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

அன்பில் மகேஸ் பிணை மனு: காவல் துறை பதிலளிக்க உத்தரவு

சென்னை, நவ. 12: திமுக முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ், பிணை கோரி தாக்கல் செய்த மனுவுக்கு மத்திய குற்றப் பிரிவு போலீஸார் நவ. 17-ஆம் தேதிக்குள் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

அங்கீகாரம், அனுமதிகள் பெற்றுத் தருவதாகக் கூறி தனியார் பள்ளிகளிடம் ரூ.100 கோடிக்கு மேல் வசூலித்து மோசடியில் ஈடுபட்டதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸை, சென்னை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் கடந்த அக். 26-ஆம் தேதி கைது செய்தனர். இந்த வழக்கில், அவர் நவ. 18-ஆம் தேதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க சென்னை ஊழல் தடுப்பு வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், அன்பில் மகேஸ் மீதான குற்றச்சாட்டுகளுக்கு ஆரம்பகட்ட முகாந்திரம் இருப்பதாகக் கூறி, சிறப்பு நீதிமன்றம் அவரது பிணை கோரிய மனுவை தள்ளுபடி செய்து செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை ரத்து செய்து, பிணை வழங்கக் கோரி அன்பில் மகேஸ் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி வி.லட்சுமிநாராயணன் முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தபோது, அன்பில் மகேஸ் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர்கள் நீரஜ் கிஷன் கௌல், பி.வில்சன் ஆகியோர், மனுதாரருக்கு முன்பிணை கோரி மனு தாக்கல் செய்தபோது, இருந்த சூழல் தற்போது இல்லை. நோயால் பாதிக்கப்பட்டுள்ள மனுதாரருக்கு பிணை வழங்க வேண்டும் என வாதிட்டனர்.

அப்போது, மத்திய குற்றப் பிரிவு போலீஸார் தரப்பில் ஆஜரான, அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் ஜான் சத்யன், இந்த வழக்கில் தலைமறைவாக இருந்த முத்துகுமார் சரணடைந்திருக்கிறார்.



அவரைக் காவலில் எடுத்து விசாரிக்க உள்ளோம். அதேபோல், வழக்கில் மற்றொரு குற்றம்சாட்டப்பட்டவரான சரவணனும் சரணடைந்திருக்கிறார். அவரிடமும் விசாரிக்க வேண்டியுள்ளது.

எனவே, இந்தப் பிணை கோரிய மனுவுக்கு பதிலளிக்க அவகாசம் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து, வழக்கை விசாரித்த நீதிபதி, அன்பில் மகேஸ் பிணை கோரிய மனுவுக்கு மத்திய குற்றப் பிரிவு போலீஸார் நவ. 17-ஆம் தேதிக்குள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை அன்றைய தினத்துக்கே ஒத்திவைத்தார்.

முத்துக்குமாரை 4 நாள்கள் காவலில் எடுத்து விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அனுமதி

தனியார் பள்ளிகளுக்கு அனுமதி பெற்றுத் தருவதாகக் கூறி, ரூ.100 கோடி லஞ்சம் பெற்றதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் சரணடைந்த திமுக பிரமுகர் முத்துக்குமாரை 4 நாள்கள் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதியளித்து சென்னை சிறப்பு நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

இந்த மோசடி தொடர்பாக முத்துக்குமார் சென்னை ஊழல் தடுப்பு வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் சரணடைந்தார். அவரை நவ.12 வரை நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்க சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில், முத்துக்குமாரை 5 நாள்கள் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கோரி மத்திய குற்றப் பிரிவு போலீஸார் சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த வழக்கு வாதங்கள் முடிவடைந்து தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இவ்வழக்கில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி எல்.எஸ்.சத்தியமூர்த்தி வியாழக்கிழமை பிறப்பித்த தீர்ப்பில், முத்துக்குமாரை வரும் நவ.12-ஆம் தேதி பகல் 1 மணி முதல் நவ.16 காலை 10.30 மணி வரை, 4 நாள்கள் காவலில் எடுத்து விசாரிக்க மத்திய குற்றப் பிரிவு போலீஸாருக்கு அனுமதியளித்து உத்தரவிட்டார்.

விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும்போதும், காவலில் எடுத்து விசாரிக்கும்போதும், முத்துக்குமாரை துன்புறுத்தக் கூடாது. விசாரணை முடிந்து முத்துக்குமார் நவ.16-ஆம் தேதி காலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார். மேலும், முத்துக்குமாரின் நீதிமன்றக் காவல் வியாழக்கிழமையுடன் முடிவடைந்ததை அடுத்து, அவரது நீதிமன்ற காவலை நவ.26 வரை நீட்டித்தும் நீதிபதி உத்தரவிட்டார்.

இந்தியாவின் வெற்றிகளை உலகுக்கு பறைசாற்றுங்கள்

ஊடகங்களுக்கு பிரதமர் மோடி வேண்டுகோள்



தில்லியில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில் பத்திரிகையாளர்களுக்காக வியாழக்கிழமை நடத்தப்பட்ட தீபாவளி கொண்டாட்ட நிகழ்ச்சிக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்ற அந்தக் கட்சியின் தேசியத் தலைவர் நிதின் நபின். உடன் மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், அமித் ஷா.

புது தில்லி, நவ. 12: உலகத்துடன் பகிர இந்தியாவிடம் வியக்கத் தக்க பல சாதனைகள் உள்ளன; 'இந்தியாவின் வெற்றிச் சரிதம்' என்ற பெயரில் இந்த வெற்றிகள் அனைத்தையும் உலகுக்கு இந்திய ஊடகங்கள் பறைசாற்ற வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்தார்.

தில்லியில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில் பத்திரிகையாளர்களுக்காக வியாழக்கிழமை நடத்தப்பட்ட தீபாவளி கொண்டாட்ட நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்றார். அப்போது, அவர் பேசியதாவது:

செய்தி உலகில் 'காலக்கெடு' என்ற விஷயம் மிக முக்கியமானதாகும். ஒரு பத்திரிகையாளரின் முழு வாழ்வும் காலக்கெடுவை சுற்றியே சுழல்கிறது. பத்திரிகை அச்சிடப்படும் நேரமாக இருந்தாலும், செய்தி ஒளிபரப்பப்படும் நேரமாக இருந்தாலும் ஒவ்வொன்றுக்கும் காலக்கெடு நிர்ணயிக்கப்படுகிறது.

இன்று நமது தேசமும் ஒரு காலக்கெடுவை நோக்கி பணியாற்றுகிறது. அந்த காலக்கெடு 2047-ஆம் ஆண்டாகும். இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற கனவு, சுதந்திர கால கட்டத்தில் இருந்தே நம்மிடமுள்ளது. அந்தக் கனவை நனவாக்கும் காலக்கெடுதான் 2047. அதாவது, சுதந்திரத்தின் நூற்றாண்டை நிறைவு செய்யும் முன்பு இந்தியாவை வளர்ந்த நாடாக்க ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

வெற்றிச் சரிதங்களுக்கு குறைவில்லை: இளைஞர் சக்தி, செயல்திறன், தொழில்நுட்பம், குறைந்த விலையிலான இணையச்சேவைகள் உள்ளிட்டவை இந்தியாவின் பலங்களாகும். மிக முக்கியமாக, உலகத்துடன் பகிர்ந்து கொள்ள வியக்கத்தக்க பல சாதனைகள் நம்மிடமுள்ளன. 'வெற்றிச் சரிதங்களுக்கு' எந்தக் குறையும் இல்லை.

ஆனால், நமது செய்திகள், உண்மையிலேயே நாட்டைப் பிரதிபலிக்கிறதா? நமது சாதனைகள், திறமைகள் மற்றும் நேர்மறையான மாற்றங்களுக்கு போதிய இடமளிக்கப்படுகிறதா என்பதை சீர்தூக்கி பார்க்க வேண்டும்.

கடந்த 12 ஆண்டுகளில் 50 கோடி பேர் வறுமைக் கோட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர். நாட்டில் வறுமையை ஒழிக்க தேசிய ஜனநாயக கூட்டணி அரசால் முடிந்திருக்கிறது. தேசத்தின் இன்றைய சாதனைகளைக் கருத்தில் கொண்டால், வளர்ந்த நாடாகும் இலக்கை எட்டுவது சாத்தியமற்ற விஷமயல்ல.

என்னென்ன சாதனைகள்?: சமீப ஆண்டுகளில் நாட்டின் சாதனைகளை எண்ணிப் பாருங்கள். நிலவின் தென் துருவத்தில் கால் பதித்து, இந்தியா புதிய வரலாறு படைக்கும் என்றோ, உலகின் இரண்டாவது பெரிய கைப்பேசி உற்பத்தியாளராக இந்தியா உருவெடுக்கும் என்றோ, சென்னாப் நதியின் குறுக்கே உலகின் மிக உயரமான பாலத்தை இந்தியா கட்டமைக்கும் என்றோ, நாட்டில் 12 ஆண்டுகளில் சூரிய மின் உற்பத்தி 50 மடங்கு அதிகரிக்கும் என்றோ, புத்தாக்க நிறுவனங்களின் எண்ணிக்கையில் உலகின் மூன்றாவது நாடாக இந்தியா உருவெடுக்கும் என்றோ யாரும் நினைத்தார்களா?

சுதந்திரத்துக்காக நாடு போராடியபோது முதலில் சிறு சிறு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு எட்டப்பட்டன. சுதந்திரம் கிடைத்தே தீரும் என மக்கள் உறுதியாக நம்பினர். அதே நம்பிக்கையுடன், வளர்ந்த இந்தியா இலக்கை நோக்கி நாட்டை இட்டுச் செல்ல வேண்டும்.

நாட்டுக்கான உன்னத சேவை: பல்வேறு சிறிய, பெரிய இலக்குகளை எட்டுவதன் மூலம் தொடர்ந்து முன்னோக்கி பயணிக்க வேண்டும். அதன் மூலம் வளர்ந்த இந்தியா இலக்கு நனவாகும்.

நாடு மற்றும் நாட்டு மக்களின் சாதனைகளை எடுத்துரைக்கும் தளமாக எனது 'மனதின் குரல்' வானொலி நிகழ்ச்சி உள்ளது. அதேபோல், நாட்டின் வெற்றிச் சரிதங்களை வெளியிட்டு, உலக அளவில் அதிக மக்களைச் சென்றடைய பணியாற்றும்படி ஊடகங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். இது, நாட்டுக்கு ஆற்றும் மிக உன்னதமான சேவையாகும்.

பத்திரிகையாளர்களுடன் எனக்கு நீண்ட நெடிய நட்புறவு உள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளுக்கு நாற்காலிகள் ஏற்பாடு செய்துவந்த காலத்தில் இருந்தே நட்புறவு நீடிக்கிறது.

செய்தி உலகில் சாத்தியமற்ற விஷயம் என எதுவுமில்லை. எனவே, போதைப் பொருளுக்கு எதிராக மக்கள் மத்தியில் விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற மற்றொரு வேண்டுகோளையும் முன்வைக்கிறேன் என்றார் அவர்.

பிரதமர் மோடி அடுத்த வாரம் பிலிப்பின்ஸுக்கு பயணம்

இந்தியா-ஆசியான் மாநாட்டில் பங்கேற்கிறார்

புது தில்லி, நவ.12: பிலிப்பின்ஸ் தலைநகர் மணிலாவில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள இந்தியா-ஆசியான் வருடாந்திர மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கவுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வியாழக்கிழமை தெரிவித்தது.

11 உறுப்பினர்களைக் கொண்ட ஆசியான் கூட்டமைப்புக்கு நிகழாண்டு பிலிப்பின்ஸ் தலைமை வகிக்கும் நிலையில், மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக அந்நாட்டுக்கு நவ.16-ஆம் தேதி செல்லும் பிரதமர் மோடி வருடாந்திர கிழக்காசியா மாநாட்டிலும் பங்கேற்கவுள்ளார்.

மேலும், மணிலாவில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை உறுப்பினராகக் கொண்ட 'க்வாட்' கூட்டமைப்பின் வருடாந்திர மாநாடும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், இதுகுறித்து அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை.

இதுதொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சக செயலர் (கிழக்கு) ருத்ரேந்திர டாண்டன் கூறியதாவது: மணிலாவில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள 23-ஆவது ஆசியான்-இந்தியா வருடாந்திர மாநாடு மற்றும் ஆசியான் தலைமையிலான கிழக்காசிய மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கவுள்ளார்.

பிலிப்பின்ஸுக்கு நவ.16 முதல் நவ.18 வரை அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளும் அவர், நவ.17-ஆம் தேதி இந்த இரு மாநாடுகளிலும் பங்கேற்கிறார்.

பயணத்தின் ஒரு பகுதியாக, பல்வேறு துறைகளில் இந்தியா-பிலிப்பின்ஸ் இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து பிலிப்பின்ஸ் அதிபர் ஃபெர்டினண்ட் மார்கோஸுடன் ஆலோசனை நடத்தவுள்ளார் என்றார்.

தில்லி குருத்வாராவில் சோனியாவின் புத்தகம் எரிப்பு

புது தில்லி, நவ.12: 1984-ஆம் ஆண்டு சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும், தில்லி சீக்கிய குருத்வாரா மேலாண்மைக் குழுவின் (டிஎஸ்ஜிஎம்சி) உறுப்பினர்களும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் புத்தகத்தின் நகலை தில்லியில் உள்ள ரகாப் கஞ்ச் குருத்வாராவில் வியாழக்கிழமை எரித்து தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட பிறகு தில்லியில் ஏற்பட்ட கலவரத்தில் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் குறித்து சோனியா காந்தி விவரித்த விதம், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான 'பிலாங்கிங்: எ ஜர்னி ஆஃப் லவ்' என்ற புத்தகத்தில், 1984-ஆம் ஆண்டு சீக்கியர்களுக்கு எதிரான கலவரத்தை, நாட்டின் வரலாற்றில் ஒரு துயரமான மற்றும் அவமானகரமான அத்தியாயம் என்று சோனியா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அவரது கணவரும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தியின் இதயத்தில் எந்தவிதமான மதவெறியோ அல்லது வெறுப்புணர்வோ இருந்ததில்லை என்றும், நிர்வாகம் முழுமையாகச் செயலிழந்து காட்டுமிராண்டித்தனம் தலைதூக்கிய சூழலுக்குள் அவர் தள்ளப்பட்டார் என்றும் அந்தப் புத்தகத்தில் சோனியா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, சீக்கிய கலவரம் குறித்த உண்மைகள் அந்தப் புத்தகத்தில் மறைக்கப்பட்டிருப்பதாக தில்லி சுற்றுச்சூழல் அமைச்சர் மஞ்சிந்தர் சிங் சிர்சா குற்றஞ்சாட்டியிருந்தார்.

மத்திய அமைச்சர்களுடன் பிரதமர் மோடி நவ.18-இல் ஆலோசனை

புது தில்லி, நவ.12: மத்திய அமைச்சர்களுடன் நவ.18-ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை மேற்கொள்ளவுள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து அதிகாரபூர்வ வட்டாரங்கள் பிடிஐ செய்தி நிறுவனத்திடம் கூறுகையில், 'பிலிப்பின்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெறவுள்ள வருடாந்திர ஆசியான்-இந்தியா உச்சி மாநாட்டில் பங்கேற்றுவிட்டு நாடு திரும்பும் பிரதமர் மோடி அனைத்து மத்திய அமைச்சர்களையும் வரும் நவ.18-ஆம் தேதி சந்திக்கவுள்ளார்.

அப்போது நிர்வாகம், சீர்திருத்தம், பெண்கள், இளைஞர்கள் மற்றும் பல்வேறு தரப்பினருக்கான அரசு நலத் திட்டங்களின் செயல்பாடு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து அவர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

முன்னதாக கடந்த செப்டம்பர் மாதம் பிரதமர் தலைமையில் அமைச்சர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அரசின் திட்டங்கள் மக்களிடம் 100 சதவீதம் சென்றடைவதை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. 2 நாள்கள் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் 8 குழுக்களாக பிரிக்கப்பட்டனர். அவர்களிடம் பிரதமர் மோடி தனித்தனியே ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், நவ.18-இல் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய அரசு சார்பில் செயல்படுத்தப்படும் சுமார் 40 முதல் 45 நலத் திட்டங்களை மக்களிடம் 100 சதவீதம் கொண்டுசேர்ப்பது மட்டுமின்றி பல்வேறு துறைகள், அமைச்சகங்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது' எனத் தெரிவித்தன.

வாரிய குடியிருப்பு நிலுவைத் தொகை பயனாளிகளுக்கு வட்டித் தள்ளுபடி

தமிழக அரசு உத்தரவு

சென்னை, நவ. 12: தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கான தவணை செலுத்துவோர் நிலுவைத் தொகை செலுத்துத் தவறிய நிலையில், அதற்கான வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு வியாழக்கிழமை அரசாணை வெளியிடப்பட்டது.

இதுகுறித்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் தவணை முறை திட்டத்தில் மனை, வீடு மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்கள் தவணைக்காலம் முடிந்த பிறகும் 6,496 பேர் விற்பனைப் பத்திரம் பெறாமல் உள்ளனர். அவர்கள் முழுத் தொகையையும் செலுத்தாமல் இருப்பதால் விற்பனைப் பத்திரம் பெறமுடியவில்லை.

தற்போது முதல்வர் சி.ஜோசப் விஜய் அறிவுறுத்தல்படி, வாரிய குடியிருப்புகள் ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைக் குறைக்கும் வகையில் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே இதுகுறித்து மாநிலக் கோரிக்கை மீதான விவாதத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி வீட்டு வசதி வாரியத்தில் தவணைக் கொள்முதல் திட்டங்களில் மனை, வீடு மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்கள் கடந்த மார்ச் 31-ஆம் தேதிக்குள் தவணைக் காலம் முடிவுற்ற திட்டங்களில், நிலுவைத் தொகை செலுத்தத் தவறிய நிலையில், அவர்களுக்கான முழுத் தொகையை ஒரே தவணையில் செலுத்துபவர்களுக்கான அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படுகிறது.

அத்துடன், வட்டி முதலாக் கத்தின் மீதான வட்டித் தள்ளுபடியும் மற்றும் நிலத்தின் இறுதி நிலை வித்தியாசத்தில் வசூலிக்கப்படும் தொகைக்கான வட்டியில் ஒவ்வொரு ஆண்டுக்கும் 5 மாதங்களுக்கான வட்டித் தள்ளுபடி செய்து விற்பனைப் பத்திரம் வழங்கப்படும். இந்தத் திட்டம் ஓராண்டு காலத்துக்கு சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தால் வாரியத்துக்கு சுமார் ரூ.92.39 கோடி வருவாய் இழப்பு ஏற்படுவதுடன், சிறப்பு வட்டிச் சலுகையால் ஒதுக்கீட்டாளர்களுக்கு ரூ.18.45 கோடி தள்ளுபடி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பள்ளிக் கல்வி இயக்குநராக பூ.ஆ.நரேஷ் நியமனம்



சென்னை, நவ. 12: பள்ளிக் கல்வித் துறை இயக்குநராக பூ.ஆ.நரேஷ் நியமனம் செய்யப்பட்டார்.

தமிழகத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் உள்பட இயக்குநர் நிலையில் பணியாற்றும் 6 அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து துறை செயலர் ஜெ.இன்னசென்ட் திவ்யா வியாழக்கிழமை உத்தரவிட்டார். அதன் விவரம் (பழைய பணியிடம் அடைப்புக் குறிக்குள்):

பூ.ஆ.நரேஷ்- பள்ளிக் கல்வி இயக்குநர் (தொடக்கக் கல்வி இயக்குநர்); கே.சசிகலா- தொடக்கக் கல்வி இயக்குநர் (அரசுத் தேர்வுகள் இயக்குநர்); மு.பழனிச்சாமி- தனியார் பள்ளிகள் இயக்குநர் (ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர்); வி.சி.ராமேஸ்வர முருகன்- கூடுதல் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (ஆசிரியர் தேர்வு வாரிய செயலர்); ச.சுகன்யா- ஆசிரியர் தேர்வு வாரிய செயலர் (தனியார் பள்ளிகள் இயக்குநர்); எஸ்.உமா- அரசுத் தேர்வுகள் இயக்குநர் (கூடுதல் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி).

மேலும் ஆசிரியர் தேர்வு வாரிய இணை இயக்குநராக பணியாற்றிய ஸ்ரீதேவிக்கு, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் உறுப்பினராக (இயக்குநர் நிலை) பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியிட மாற்றம், பதவி உயர்வு உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

தேனி சிறையிலிருந்து தப்பியோடி சரணடைந்த கைதிகள் 4 பேர் உடலில் காயங்கள்

சட்டப் பணிகள் ஆணைக் குழு அறிக்கை தாக்கல்

சென்னை, நவ. 12: தேனி சிறையிலிருந்து தப்பியோடி பின்னர் சரணடைந்த 4 கைதிகளின் உடல்களில் காயங்கள் உள்ளதாகவும், அவர்களை சிறை அதிகாரிகள் கொடுமைப்படுத்தி உள்ளதாகவும் சட்டப் பணிகள் ஆணைக் குழு சென்னை உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தது.

தேனி மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டிருந்த விசாரணை கைதிகள் 17 பேர் கடந்த அக்.26-ஆம் தேதி சிறையில் இருந்து தப்பியோடினர். இவர்களில் 13 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், மீனாட்சி சுந்தரம், திருப்பதி, சோலை முகிலேஸ்வரன் மற்றும் சபரிநாதன் ஆகிய 4 பேர் போலீஸாரிடம் சரண் அடைந்தனர்.

இந்த நிலையில், சிறையில் இருந்து தப்பிச் சென்ற தனது மகன்கள் மீனாட்சி சுந்தரம், திருப்பதி மற்றும் உடன் இருந்த சோலை முகிலேஸ்வரன், சபரிநாதன் ஆகியோர் தேனி சிறைக் காவலர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதாகக் கூறி, மீனாட்சி சுந்தரம், திருப்பதி ஆகியோரின் தாயார் ஆறுமுகத்தம்மாள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், சேலம், பாளையங்கோட்டை மத்திய சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தனது மகன்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்க உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், சேலம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனாட்சி சுந்தரம், சோலை முகிலேஸ்வரன் மற்றும் சபரிநாதன் ஆகியோரது உடல்நிலையை மருத்துவக் குழுவினருடன் சென்று ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யும்படி, சேலம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவுக்கும், பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டுள்ள திருப்பதியின் உடல்நிலையை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யும்படி திருநெல்வேலி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவுக்கும் உத்தரவிட்டிருந்தது.

மேலும் தேனி, கடலூர், மதுரை, சேலம், பாளையங்கோட்டை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள மற்ற கைதிகள் மீது சிறைக் காவலர்கள் தாக்குதல் நடத்தினார்களா என்பது குறித்து விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவுக்கு உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு நீதிபதிகள் ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா, பி.கார்த்திகேயன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது சேலம், திருநெல்வேலி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு தலைவர்கள் சார்பில் இடைக்கால அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. அதில், சேலம், திருநெல்வேலி மத்திய சிறைகளில் உள்ள 4 கைதிகளின் உடல்களில் காயங்கள் உள்ளன. அவர்களை சிறை அதிகாரிகள் அடித்து துன்புறுத்தி உள்ளதாகத் தெரிவித்திருந்தனர். இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், இந்த இடைக்கால அறிக்கையை மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் புகழேந்திக்கு வழங்க முடியாது.

அதேநேரம், தேனி சிறையில் இருந்து தப்பியோடி, பிடிபட்ட மற்றும் சரணடைந்த கைதிகள் தேனி, கடலூர், மதுரை, சேலம், திருநெல்வேலி உள்ளிட்ட சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களது உடல்நிலை குறித்து அந்தந்த மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு தலைவர்கள் மூலம் விசாரித்து அறிக்கைகள் பெற்று, ஒருங்கிணைந்த அறிக்கையை தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்கு உறுப்பினர் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை நவ.17-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

ரூ.149 கோடி கோயில் நிலங்கள் மீட்பு

சென்னை, நவ. 12: தமிழகத்தில் கடந்த 6 மாத தவெக ஆட்சியில் ரூ. 148.91 கோடி மதிப்புள்ள 163.40 ஏக்கர் கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத் துறை தெரிவித்தது.

இதுகுறித்து வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

அறநிலைய கொடைகள் சட்டப்பிரிவின் கீழ், இணை ஆணையர் சார்பில் நீதி மன்றங்களில், 23,815 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் அறிவுறுத்தலின்படி, கோயில்களுக்குச் சொந்தமான ரூ.148.91 கோடி மதிப்பிலான 163.40 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு கோயில்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துகளில் இருந்து ரூ. 213 கோடி நிலுவைத் தொகை வசூலிக்கப்பட்டு உள்ளது. 34.82 ஏக்கர் நிலங்கள் 15 கோயில்களின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கணினி சிட்டாவில் தவறுகளை திருத்தம் செய்து, 2,262 ஏக்கர் நிலங்கள், 226 கோயில்களின் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளன. வாடகை மற்றும் நிலுவை தொகை குறித்த விவரங்களை உடனுக்குடன் அறிய குறிப்பிட்ட கால இடைவெளியில் தகவல் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என அதில் தெரிவிக்கப்பட்டது.

மாணவர் சேர்க்கை குறைந்தாலும் ஓர் அரசுப் பள்ளிகூட மூடப்படாது

அமைச்சர் ராஜ் மோகன்



தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள், நலத் திட்ட உதவிகளை வழங்கிய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன். உடன், விஜடி வேந்தர் கோ.விசுவநாதன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம்.சுதாகர், எம்.எம்.வினோத்கண்ணன், தென்றல்குமார், சிந்து, எஸ்.எம். சுகுமார், த.வேலழகன், விஜடி துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன் மற்றும் ரமணி பாலசுந்தரம், வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பிரேமலதா உள்ளிட்டோர்.

வேலூர், நவ. 12: மாணவர் சேர்க்கை குறைவு என்ற காரணத்துக்காக தமிழகத்தில் ஓர் அரசுப் பள்ளிகூட மூடப்படாது என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

வேலூர் விஜடி பல்கலைக்கழகம் சார்பில் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய 4 மாவட்டங்களில் கடந்த 2023-24, 2024-25 மற்றும் 2025-26 ஆகிய கல்வியாண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்வுகளில் 100 சதவீதத் தேர்ச்சி பெற்ற 341 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்குப் பாராட்டு விழா மற்றும் ரூ.52 லட்சம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று தலைமை ஆசிரியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள், நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியது:

நாடு முழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் 94,000 பள்ளிகள் மூடப்பட்டுள்ளதாக விஜடி வேந்தர் குறிப்பிட்டார். தமிழகத்திலும் 200-க்கும் மேற்பட்ட பள்ளிகள் மூடப்பட்டுள்ளன என்பது உண்மை தான். ஆனால், தவெக அரசு பொறுப்பேற்ற கடந்த 6 மாதங்களில் ஒரு அரசுப் பள்ளி கூட மூடப்படவில்லை. இனியும் மாணவர் சேர்க்கை குறைவு என்ற காரணத்துக்காக அரசுப் பள்ளிகள் மூடப்படாது.

மலைச் சிகரங்கள் மற்றும் குக்கிராமங்களில் வசிக்கும் ஓர் ஏழைக் குழந்தை படிப்பதற்காகக்கூட ஓராசிரியர் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அந்த ஒரு மாணவனுக்காகவும் அரசுப் பள்ளிகள் தொடர்ந்து செயல்படும். மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும், கற்றலை இனிமையாக்கவும் பாடத்திட்டங்களில் புதிய அணுகுமுறைகள் புகுத்தப்பட்டு வருகின்றன. கதைகள் வழியாகக் கணிதம் கற்பிக்கப்படுகிறது.

நிகழாண்டில் பள்ளிக்கல்வித் துறைக்கு ரூ.44,557 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளி நிறைவுத் திட்டத்தின் கீழ் 3,734 அரசுப் பள்ளிகளை மேம்படுத்த ரூ.2,132 கோடியும், 10,000 அரசுப் பள்ளிகளில் தூய குடிநீர், கழிப்பறை பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் சூப்பர் கிளீன், சூப்பர் கேம்பஸ் திட்டத்துக்கு ரூ.139 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

விஜடி வேந்தர் கோ.விசுவநாதன் தலைமை வகித்து பேசியது: கடந்த 10 ஆண்டுகளில் நாடு முழுவதும் 94,000 அரசுப் பள்ளிகள் மூடப்பட்டுள்ள நிலையில், 51,000 தனியார் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. தமிழகத்திலும் மாணவர்கள் இல்லாததால் 246 பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. 1,204 பள்ளிகளில் மாணவர் சேர்க்கை இல்லை. எனவே, அரசுப் பள்ளிகளின் தரத்தைத் தனியார் பள்ளிகளுக்கு இணையாக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் அனைவரையும் தேர்ச்சி பெற வைப்பதால் கல்வியின் தரம் பாதிக்கப்படுகிறதா என்பதை ஆராய ஒரு குழு அமைக்க வேண்டும். சர்வதேச மாணவர் மதிப்பீட்டுத் தரவரிசையில் (ஓஇசிடி) இந்தியா மீண்டும் பங்கேற்கும் சூழலை உருவாக்க வேண்டும். சீனா, தென் கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், பின்லாந்து ஆகிய நாடுகளின் கல்வி முறையைக் குழு அனுப்பி ஆய்வு செய்ய வேண்டும். மத்திய அரசு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 6 சதவீதத்தைக் கல்விக்கு ஒதுக்க வேண்டும்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்கும் விஜடி-யின் 'ஸ்டார்ஸ்' திட்டம் அடுத்த ஆண்டு முதல் இந்தியா முழுவதும் விரிவுபடுத்தப்படவுள்ளது. அனைவருக்கும் உயர்கல்வி அறக்கட்டளை மூலம் ஒருங்கிணைந்த வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்குத் தொடர்ந்து கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது என்றார். முன்னதாக, விஜடி நிலையான கிராமப்புற மேம்பாடு மற்றும் ஆய்வு மைய இயக்குநர் சுந்தரராஜ் வரவேற்றார்.

இந்தியாவின் ரஷிய எரிபொருள் இறக்குமதி: அக்டோபரில் ரூ.67,000 கோடியாக அதிகரிப்பு

புது தில்லி, நவ.12: ரஷியாவிடமிருந்து அக்டோபர் மாதத்தில் இந்தியா இறக்குமதி செய்த புதைபடிம எரிபொருள் மதிப்பு ரூ. 67,000 கோடி என்ற சாதனை அளவை எட்டியது.

உக்ரைன் மீதான போர் காரணமாக, ரஷியா மீதும், ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய்யை கொள்முதல் செய்யும் நிறுவனங்கள் மற்றும் நாடுகள் மீது பல்வேறு தடைகளையும், கூடுதல் வரி விதிப்பு நடவடிக்கையையும் அமெரிக்கா மேற்கொண்டது. இதனால், இந்தியாவும் பாதிப்பைச் சந்தித்தது. ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் அளவை இந்தியா குறைத்தது. இந்த நிலையில், ரஷியாவுடன் அண்மையில் மேற்கொண்ட டீசல் கொள்முதல் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, ரஷியா மீதும், ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய்யை கொள்முதல் செய்யும் நாடுகள் மீதான கட்டுப்பாடுகளை அமெரிக்கா தளர்த்தியது.

அதைத் தொடர்ந்து, ரஷியா கச்சா எண்ணெய் கொள்முதலை இந்தியா மீண்டும் அதிகரித்துள்ளது. இது குறித்து எரிசக்தி மற்றும் தூய்மை வாயு மீதான ஆராய்ச்சி மையம் (சிஆர்இஏ) வியாழக்கிழமை வெளியிட்ட மாதாந்திர ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது:

ரஷியாவிடமிருந்து கடந்த அக்டோபர் மாதத்தில் ரூ. 67,000 கோடி (6.4 மில்லியன்) மதிப்பில் ஹைட்ரோ கார்பன்களை இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இது, கடந்த 2022-ஆம் ஆண்டு ஜனவரி முதல் பதிவான தரவுகளின்படி, மிக உயர்ந்த மாதாந்திர அளவாகும். இதில், ரூ. 60,000 கோடி மதிப்பில் கச்சா எண்ணெய்யையும், மீதமுள்ள தொகையில் நிலக்கரி மற்றும் பிற எண்ணெய் பொருள்களையும் இந்தியா இறக்குமதி செய்துள்ளது.

ரஷிய எரிபொருள்களை வாங்கும் நாடுகளில் சீனா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. ரஷியாவின் எரிபொருளை அதிக அளவில் இறக்குமதி செய்யும் முதல் ஐந்து நாடுகளின் பங்களிப்பில் சீனாவின் பங்கு 51 சதவீதமாக (ரூ.1.1 லட்சம் கோடி) உள்ளது. இந்தியா தொடர்ந்து இரண்டாம் இடத்தில் உள்ளது.

இந்தியாவின் அக்டோபர் மாத ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதி, முந்தைய மாதத்தைவிட 10 சதவீதம் கூடுதலாகியுள்ளது. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், நயாரா எனர்ஜி ஆகிய மூன்று மிகப் பெரிய இந்திய சுத்திகரிப்பு நிலையங்களின் ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதியும் அதிகரித்துள்ளது.

ரஷியாவின் புதைபடிம எரிபொருள்களை வாங்கும் நாடுகளின் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் மூன்றாவது இடத்தில் இருந்தது. இது ரஷியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதி வருவாயில் 11 சதவீதவீதமாகும்.

ரூ.11,000 கோடி மதிப்பிலான இறக்குமதியுடன் துருக்கி நான்காம் இடத்திலும், ரூ.5,000 கோடி மதிப்பிலான இறக்குமதியுடன் தென் கொரியா ஐந்தாம் இடத்திலும் உள்ளன.

இந்தியா–பாகிஸ்தான் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்

ஃபரூக் அப்துல்லா வலியுறுத்தல்

ஜம்மு, நவ. 12: இந்தியா–பாகிஸ்தான் இடையிலான அரசியல் சார்ந்த பிரச்னைகளுக்கு தோட்டாக்கள் தீர்வளிக்காது; இரு நாடுகளும் ஆக்கபூர்வ பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் ஃபரூக் அப்துல்லா வலியுறுத்தினார்.



ஜம்மு-காஷ்மீரில் கடந்த 2 நாள்களில் இரு பயங்கரவாதத் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ள நிலையில், ஃபரூக்கின் கருத்துகள் கவனம் பெற்றுள்ளன.

ஜம்மு-காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎஃப்) சோதனைச் சாவடி மீது பயங்கரவாதிகள் கடந்த புதன்கிழமை நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 3 வீரர்கள் காயமடைந்தனர்.

இதேபோல், கிஷ்த்வார் மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை மாயமான இரு சிறப்பு போலீஸ் அதிகாரிகளின் (எஸ்பிஓ) உடல்கள் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த நிலையில் வியாழக்கிழமை மீட்கப்பட்டன. இருவரையும் பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றது தெரியவந்துள்ளது. இந்நிலையில், ஜம்மு-காஷ்மீரில் ஆளும் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவரும், முன்னாள் முதல்வருமான ஃபரூக் அப்துல்லா, ஜம்முவில் செய்தியாளர்களுக்கு வியாழக்கிழமை பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

பயங்கரவாதத்தை நிறுத்துமாறு, பாகிஸ்தானிடம் எப்போதுமே கூறி வருகிறேன். பயங்கரவாதத்தால் எதையும் சாதிக்க முடியாது. பயங்கரவாதத்தைக் கைவிட்டு, இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் ஆக்கபூர்வ சூழலை உருவாக்க பாகிஸ்தான் பணியாற்ற வேண்டும். அரசியல் ரீதியிலான பிரச்னைகளுக்கு தீர்வு காண இரு நாடுகளுக்கும் இடையே ஆக்கபூர்வ பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும். பேச்சுவார்த்தையே முன்னோக்கிப் பயணிக்கும் பாதையாகும்.

துப்பாக்கிச் சப்தம் ஓயும் வரை காத்திருந்தால், மிகவும் கால தாமதம் ஏற்பட்டுவிடும்.

போர்களால் பேரழிவு: போர்களும், ராணுவ மோதல்களும் பேரழிவையே விளைவிக்கும். ஈரான், உக்ரைனில் அதுதான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பேச்சுவார்த்தை மற்றும் பரஸ்பர தொடர்புகளால் மட்டுமே நிரந்தர தீர்வுகள் பிறக்கும்.

முன்னாள் எதிரிகள், பொதுவான எதிர்காலத்தை நோக்கிப் பணியாற்ற முடியும் என்பதற்கு ஐரோப்பிய ஒன்றியமே சான்றாகும். காஷ்மீர், இந்தியாவின் ஒருங்கிணைந்த அங்கமாகவே இருந்துள்ளது; இனியும் அப்படியே நீடிக்கும்.

ஜம்மு-காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்துக்குப் பிறகு பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவதாக மத்திய அரசு கூறுவது கவலைக்குரியதாகும். பயங்கரவாத அச்சுறுத்தல் நீடிக்கிறது என்பதை சமீபத்திய தாக்குதல்கள் சுட்டிக் காட்டுகின்றன. அடுத்த தாக்குதல் எங்கு நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது. அதை முறியடிக்க உரிய நடவடிக்கைகள் தேவை என்றார் அவர்.

போருக்கு எப்போதும் விமானப் படை தயாராக இருக்க வேண்டும்

மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் அறிவுறுத்தல்

புது தில்லி, நவ. 12: போர் தயார் நிலையை எப்போதும் இந்திய விமானப் படை கடைப்பிடிக்க வேண்டும் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அறிவுறுத்தினார்.

தில்லியில் இந்திய விமானப் படையின் கமாண்டர்கள் மாநாடு வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டு பேசியதாவது:

உளவு மற்றும் கண்காணிப்புத் திறன்களை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும். சாத்தியமான அச்சுறுத்தல்கள் வெளிப்படும் முன்பே அவற்றைக் கண்டறிவதும் அவசியமாகும். வேகமாக மாறிவரும் பாதுகாப்புச் சூழல்கள், தொடர்ந்து புதியனவற்றை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் ராணுவ தயார் நிலையில் முன்னோக்கி கொண்டு செல்லும் அணுகுமுறையையும் வலியுறுத்துகின்றன. நமது எதிரிகள் பதிலடி கொடுக்கவோ அல்லது நமது தாக்குதலில் இருந்து மீண்டு வரவோ நேரம் கொடுக்காதவாறு நாம் செயல்படும் வகையில் திறன்களையும், வழிமுறைகளையும் பாதுகாப்புப் படைகள் மேம்படுத்துவது அவசியமாகும். அதேபோல், எதிரிகள் திடீரென எடுக்கும் நடவடிக்கையில் நாம் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதையும் பாதுகாப்புப் படை உறுதிப்படுத்த வேண்டும்.

சமகால போர்க்களங்கள் பாரம்பரிய போர்க்களங்களை தாண்டி, நேரடித் தொடர்பு இல்லாத பகுதிகளுக்கும் விரிவடைந்து வருகின்றன. திடீர் தாக்குதல்கள் மரபு சார்ந்த மற்றும் மின்னணு சார்ந்த என பல்வேறு வடிவங்களில் வெளிப்படும். நமது வீரர்கள் விழிப்புடனும், சுறுசுறுப்புடனும், எந்தவொரு தாக்குதலுக்கும் திறம்பட பதிலடி கொடுக்கும் வகையில் தயாராக இருப்பதை உறுதி செய்யும் வகையில், கண்காணிப்பு மற்றும் உளவு அமைப்புகள் மேலும் பலப்படுத்தப்படுவது அவசியமாகும்.

ரஷியா-உக்ரைன் போர், இஸ்ரேல்-ஹமாஸ் மோதல்கள் ஆகியவற்றில் ட்ரோன்களும், வான் பாதுகாப்பு அமைப்புகளும் நவீன போரின் முக்கிய அங்கங்களாக உருவெடுத்துள்ளன.

தற்கொலைத் தாக்குதல் நடத்தும் ட்ரோன்கள், கண்காணிப்பு மற்றும் ட்ரோன் எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு இந்திய விமானப் படை கமாண்டர்கள் தயாராக இருக்க வேண்டும். மின்னணு, எண்மம், விண்வெளி உள்ளிட்ட போர்க்களங்களுக்கு ஏற்ப பிரத்யேக கோட்பாடுகளையும், போர் கட்டமைப்புகளையும் இந்திய விமானப் படை உருவாக்க வேண்டும். எதிர்கால மோதல்களில் வெற்றி என்பது வெறும் விமானப் படை விமானங்களின் எண்ணிக்கையை மட்டும் சார்ந்திருக்காது. மாறாக, தொழில்நுட்ப நுணுக்கம், வேகமாக பதிலடி கொடுப்பது மற்றும் தயாரிப்புகளின் துல்லியம் ஆகியவற்றையும் சார்ந்திருக்கும் என்றார்.

நிகழ்ச்சியில் இந்திய விமானப் படையின் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மையம் உருவாக்கிய ஏஐ செயலிகளை ராஜ்நாத் சிங் வெளியிட்டார்.



தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற இந்திய விமானப் படை கமாண்டர்களின் மாநாட்டில் பங்கேற்ற மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், விமானப் படை தலைமைத் தளபதி ஆசுதோஷ் தீட்சித் உள்ளிட்டோர்.

19 இந்திய மாலுமிகளுடன் சென்ற எண்ணெய் கப்பல் மீது தாக்குதல்: அனைவரும் பத்திரமாக மீட்பு

புது தில்லி, நவ. 12: ஐக்கிய அரபு அமீரக (யுஏஇ) கடல் பகுதியில் 19 இந்திய மாலுமிகளுடன் சென்ற எண்ணெய் கப்பல் மீது வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் இந்திய மாலுமிகள் உள்பட கப்பலில் இருந்த 22 மாலுமிகளும் பத்திரமாக மீட்கப்பட்டதாக மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் வியாழக்கிழமை தெரிவித்தார்.

மேற்காசிய பிராந்தியத்தில் போர் விரிவடைந்துவரும் சூழலில், அங்குள்ள கடல் பகுதிகளில் சரக்கு கப்பல்கள் மீதான தாக்குதல் தொடர்கிறது. இதில் மாலுமிகள் உயிரிழக்க நேரிடுவதால், அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

இந்தச் சூழலில், ஐக்கிய அரபு அமீரகத்தின் மினா சக்கர் துறைமுக பகுதியில் 19 இந்தியர்கள் உள்பட 22 மாலுமிகளுடன் சென்ற எம்.டி.டொமினிகா பிராஸ்பரிட்டி எனும் லைபீரிய கொடி பொருத்திய எண்ணெய் கப்பல் கடந்த புதன்கிழமை வான்வழி தாக்குதலுக்கு இலக்கானது.

இதையடுத்து துரிதமாக செயல்பட்ட யுஏஇ கடலோர காவல் படையினர், அனைத்து மாலுமிகளையும் பத்திரமாக மீட்டனர்.

இந்திய மாலுமிகளுக்கு எந்தக் காயமும் ஏற்படவில்லை என்று மத்திய அமைச்சர் சர்வானந்த சோனோவால் வியாழக்கிழமை வெளியிட்ட எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

'இந்திய மாலுமிகளின் பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் பிற உதவிகளை உறுதி செய்ய கப்பல் நிறுவனத்துடன் இந்திய அதிகாரிகள் தொடர்ந்து தொடர்பில் உள்ளனர்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

முறையற்ற நடத்தை புகார்: தில்லி பல்கலை. பேராசிரியருக்கு கட்டாய விடுப்பு

புது தில்லி, நவ.12: தில்லி பல்கலைக்கழகத்தின் சத்யவதி கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர், மாணவி ஒருவரிடம் முறையற்ற வகையில் நடந்து கொண்டதாகக் கூறப்படும் புகாரைத் தொடர்ந்து, 'கட்டாய விடுப்பில்' அவர் அனுப்பப்பட்டதாக கல்லூரியின் ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இந்தப் புகார் கல்லூரியின் உள்ளக புகார்கள் குழுவிடம் அனுப்பப்பட்டுள்ளது. இதுகுறித்து பெயர் வெளியிட விரும்பாத ஆசிரியர் ஒருவர் கூறுகையில், 'நாங்கள் கேள்விப்பட்டவரை, அவர் கல்லூரியின் துணை முதல்வர் பதவிக்கு விண்ணப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டவர்களில் ஒருவர்.

புகார் உண்மையானதா என்பது குறித்து உள்ளக புகார்கள் குழு (ஐசிசி) உரிய காலத்தில் விசாரணை நடத்தும். அவர் அந்த மாணவிக்கு சாதத் ஹசன் மண்டோவின் படைப்புகளை அனுப்பியுள்ளார். இது ஒருவேளை வழக்கமான கல்வி நடவடிக்கையின் ஒரு பகுதியாக இருக்கலாம்' என்று அவர் தெரிவித்தார்.

சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் 2 நாள்களுக்குப் பிறகு, நவ.2-ஆம் தேதி அந்த மாணவி புகார் அளித்துள்ளார்.

இதற்குச் சில நாள்களுக்கு முன்புதான், தில்லி பல்கலைக்கழகத்தின் தெலுத் ராம் கல்லூரியைச் சேர்ந்த உதவிப் பேராசிரியர் ஒருவர் பாலியல் துன்புறுத்தல், அத்து மீறல் மற்றும் கல்வி ரீதியான பழிவாங்கல் மிரட்டல் தொடர்பான புகாரின் பேரில் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டார்.

அந்த வழக்கையும் உள்ளக புகார்கள் குழு (ஐசிசி) விசாரித்து வருகிறது.

இந்த விவகாரம் குறித்து சத்யவதி கல்லூரி முதல்வர் சுபாஷ் குமார் சிங்கிடமிருந்து உடனடி பதில் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

சமூக வலைதளங்களில் இந்தியா குறித்து அவதூறு பரப்பும் சீனர்கள்

வங்கதேசம் விசாரணை

டாக்கா, நவ. 12: வங்கதேசத்தில் இருந்து கொண்டு, சமூக வலைதளங்களில் இந்தியாவுக்கு எதிராக சீனர்கள் அவதூறு பரப்பி வருவது குறித்து இந்தியா புகார் தெரிவித்ததையடுத்து, வங்கதேசம் விசாரணையைத் தொடங்கியது.

வங்கதேசத் தலைநகர் டாக்காவின் டேக் பாரா, உத்தாரா பகுதிகளில் 150 சீனர்கள் வீடு எடுத்து தங்கியுள்ளனர்.

பின்னர் அங்குள்ள குறுகலான வீதிகள், ஏழைகள் வாழும் இடங்கள், வீடுகள் உள்ளிட்டவற்றை விடியோ எடுத்து அதை சமூக வலைதளங்களில் வெளியிட்டு, இந்திய தலைநகர் தில்லியில் மக்கள் நிலை மிகவும் மோசமாக இருப்பதாகப் பதிவிட்டு, சீனர்கள் அவதூறு பரப்பியுள்ளனர்.

இது பற்றி இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் கடந்த 10-ஆம் தேதி குற்றச்சாட்டு தெரிவித்தது. சமூக வலைதளங்களில் இந்தியாவுக்கு எதிராக அவதூறு பரப்பும் சீனர்களுக்கு எதிராக வங்கதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வலியுறுத்தியது.

இதையடுத்து, இந்த விவகாரத்தை வங்கதேச சட்ட அமலாக்கத் துறையினர் கையிலெடுத்தனர். சம்பந்தப்பட்ட சீனர்களை அணுகி, அவர்கள் வங்கதேசத்துக்கு சுற்றுலா விசாவில் வந்து, அதற்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதைச் சுட்டிக்காட்டினர். விசா காலம் முடிந்ததும் வங்கதேசத்தைவிட்டு வெளியேறும்படியும் அவர்கள் வலியுறுத்தினர்.

வங்கதேச சட்ட அமலாக்கத் துறையினர் தலையிட்டதை யடுத்து, சீனர்கள் சமூக வலைதளங்களில் அவதூறு பரப்புவது குறைந்துவிட்டதாக உத்தாரா மேற்கு காவல் நிலைய அதிகாரி முகம்மது காலித் மன்சூர் தெரிவித்துள்ளார்.

'குஜராத்தி நண்பர்' எனக் கூறிய பிட்ரோடாவுக்கு பிரதமர் வாழ்த்து

புது தில்லி, நவ. 12: தன்னை 'குஜராத்தி நண்பர்' என்று குறிப்பிட்ட காங்கிரஸ் மூத்த தலைவர் சாம் பிட்ரோடாவுக்கு பிரதமர் மோடி எக்ஸ் பதிவு வாயிலாக தீபாவளி மற்றும் குஜராத்தி புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

அரசியல் ரீதியில் பிரதமர் மோடி மற்றும் மத்திய பாஜக அரசை கடுமையாக விமர்சிப்பவரான பிட்ரோடாவுக்கு பிரதமர் வாழ்த்துத் தெரிவித்ததுடன், எக்ஸ் பயனர் ஒருவருடன் சுவாரஸ்யமாக உரையாடியதும் சமூக வலைதளத்தில் கவனம் பெற்றது.

காங்கிரஸ் அயலகப் பிரிவு தலைவர் சாம் பிட்ரோடா, செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பிரதமர் மோடி குறித்து மனம் திறந்துள்ளார்.

அதில், 'அரசியல் மற்றும் சித்தாந்த ரீதியில் பிரதமர் மோடியுடன் எனக்கு கருத்து வேறுபாடுகள் உள்ளன. அதேநேரம், குஜராத்தைச் சேர்ந்த தலைவர், நண்பர், நலம்விரும்பி என்ற முறையில் அவருடன் எனக்கு தனிப்பட்ட விரோதமோ, கசப்புணர்வோ கிடையாது.

குஜராத்தில் உள்ள அவரது இல்லத்துக்கு நானும் எனது மனைவியும் பலமுறை சென்றுள்ளோம். அப்போதெல்லாம் எங்களை அன்புடன் உபசரித்துள்ளார்' என்று பிட்ரோடா கூறினார்.

ராகுல் காந்திக்கு நெருக்கமானவராக கருதப்படும் பிட்ரோடாவின் பெற்றோர் குஜராத்தைச் சேர்ந்தவர்களாவர். அவரது பேட்டி வெளியானதைத் தொடர்ந்து, பிரதமர் மோடி வியாழக்கிழமை வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'சகோதரர் சாம் மற்றும் அவரது மனைவி அஞ்சனா பென்னுக்கு தீபாவளி, குஜராத்தி புத்தாண்டு வாழ்த்துகள். எதிர்வரும் ஆண்டு மகிழ்ச்சிகரமானதாகவும், ஆரோக்கியமானதாகவும் அமைய பிரார்த்திக்கிறேன். ஜெய் ஜெகந்நாத்' என்று கூறியுள்ளார்.

சுவாரஸ்ய உரையாடல்: பிரதமரின் இந்தப் பதிவின்கீழ் அழுவது போன்ற 'இமோஜி'யுடன் பதிவிட்ட மிஹிர் ஜா என்ற பயனர், 'சாம் பிட்ரோடாவுக்கு நீங்கள் தீபாவளி வாழ்த்து தெரிவிக்க முடியுமென்றால் தயவு செய்து எனக்கும் வாழ்த்து கூறுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்.

புன்னகைக்கும் 'இமோஜி'யுடன் அவருக்கு பதிலளித்த பிரதமர், 'சகோதரர் மிஹிருக்கும் தீபாவளி வாழ்த்துகள். இந்த பண்டிகை காலமும், எதிர்வரும் ஆண்டும் சிறப்பாக அமையட்டும்' என்று வாழ்த்தினார். இதையடுத்து, பிரதமருக்கு மிஹிர் ஷா நன்றி தெரிவித்து பதிவிட்டார்.

சீனாவிடம் சரணடையும் நிலையில் உள்ளது மோடி அரசு

காங்கிரஸ் விமர்சனம்

புது தில்லி, நவ.12: சீனாவிடம் திட்டமிட்டு சரணடையும் நிலையில் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு இருப்பதாக காங்கிரஸ் கட்சி விமர்சித்தது.

காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில் இதுதொடர்பாக வியாழக்கிழமை பதிவில், அருணாசல பிரதேசம், கிழக்கு லடாக் எல்லை நிலவரம் குறித்து மூத்த ராணுவ அதிகாரிகள் பலர் தெரிவித்த கருத்துக்களை சுட்டிக்காட்டி, அங்குள்ள நிலவரம் குறித்து நாட்டு மக்கள் அறியும் கொள்கை உருவாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:

கடந்த 2025-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4-ஆம் தேதி துணை ராணுவ தளபதி ராகுல் சிங், இந்தியா எடுத்த ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாகிஸ்தானுக்கு ஆதரவாக சீனா செயல்பட்ட விதம் குறித்து வெளிப்படையாககுறிப்பிட்டிருந்தார். ஆனால் ஓராண்டு கழித்து கடந்த ஆகஸ்ட் மாதம் 25-ஆம் தேதி முன்னாள் முப்படை தலைமைத் தளபதி அனில் சௌஹான், ராகுல் சிங் கருத்துக்கு மாற்றாக கருத்து வெளியிட்டார்.

கடந்த அக்டோபர் மாதம் 22-ஆம் தேதியன்று இந்தோ திபெத் எல்லை பாதுகாப்புப் படை இயக்குநர் ஜெனரல் சத்ருஜித் சிங், அருணாசல பிரதேசத்தில் சீனாவின் ஊடுருவல் அதிகரித்திருப்பது குறித்து தெரிவித்தார். அதற்கடுத்த நாளில் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் அருணாசல பிரதேச முதல்வர் அதற்கு மறுப்பு தெரிவித்தனர். நேற்று (புதன்கிழமை) ஓய்வுபெற்ற லெப்டினென்ட் ஜெனரலும், லேயை தளமாக கொண்டு செயல்படும் ராணுவ 14-ஆவது படைப்பிரிவு முன்னாள் கமாண்டருமான ராகேஷ் சர்மா, இந்தியா- சீனா எல்லையில் தொடரும் சம்பவங்கள் குறித்து மக்களிடம் தெரியப்படுத்த தகவல் கொள்கை தேவை என்று கூறியுள்ளார். அவர் தெரிவித்திருப்பது மிகவும் சரி.

ஆனால், லடாக்கில் 2020-ஆம் ஆண்டு ஜூன் 19-ஆம் தேதி இந்திய வீரர்கள் 20 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தில் சீனாவுக்கு பிரதமர் மோடி நற்சான்று கொடுத்துள்ளார். இதன் மூலம் சீனாவிடம் திட்டமிட்டு சரணடையும் நிலையில் மோடி அரசு உள்ளது.

2025-26-ஆம் நிதியாண்டில் சீனாவுடனான வர்த்தக பற்றாக்குறை சாதனை அளவாக ரூ.10.53 லட்சம் கோடியாக (112 பில்லியன் டாலர்) அதிகரித்துள்ளது. இது நமது நாட்டில் உள்ள சிறுகுறு தொழில்துறைகளை அழித்து விட்டது.

சீனா விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமான விவாதம் நடத்துவதற்கு கூட அனுமதிக்கப்படவில்லை. வெளியுறவுக் கொள்கை மற்றும் பொருளாதார கொள்கை சார்ந்த இந்த மிகப்பெரிய சவாலை எதிர்கொள்வதற்கு, ஒருங்கிணைந்த, நிலையான மற்றும் அனைவரின் ஒப்புதலுடன் கூடிய வியூகத்தை வகுக்க வேண்டியது அவசியமாகும் என ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இந்தியா-கனடா வர்த்தக ஒப்பந்தப் பேச்சு டிசம்பரில் நிறைவடைய வாய்ப்பு

கனடா அமைச்சர்

விசாகப்பட்டினம், நவ. 12: 'இந்தியா - கனடா இடையேயான வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் அடுத்த மாதம் பிரதமர் நரேந்திர மோடி கனடா வரும்போது நிறைவடைய வாய்ப்புள்ளது' என்று கனடாவின் சர்வதேச வர்த்தக அமைச்சர் மனீந்தர் சித்து தெரிவித்தார்.

இந்தியாவும் கனடாவும் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை (சிஇபிஏ) மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தையை மேற்கொண்டு வருகின்றன. இந்த ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான ஆறாம் கட்டப் பேச்சுவார்த்தை தில்லியில் தற்போது நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்ற அமைச்சர் மனீந்தர் சித்து தலைமையிலான குழு இந்தியா வந்துள்ளது.

இதனிடையே ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற இந்திய தொழிலக கூட்டமைப்பு (சிஐஐ) மாநாட்டில் பங்கேற்ற மனீந்தர் சித்து இதுகுறித்து கூறியதாவது:

இரு நாடுகளிடையேயான வர்த்தக ஒப்பந்தத்தை நிகழாண்டு இறுதிக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இரு நாடுகளும் பேச்சுவார்த்தையை விரைவுபடுத்தி வருகின்றன.

மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தலைமையிலான குழுவுடன் 6-ஆம் கட்டப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தற்போது இந்தியா வந்துள்ளோம். பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் கனடா வரும்போது, இந்தப் பேச்சுவார்த்தை இறுதி செய்யப்படும் என நம்புகிறோம்.



மனீந்தர் சிங்

வேகமாக வளர்ச்சி அடைந்து வரும் இந்தியாவுக்கு அதிக எரிசக்தி தேவைப்படும். வரும் 2035-ஆம் ஆண்டுக்குள் 75 சதவீத கூடுதல் எரிசக்தி இந்தியாவுக்குத் தேவைப்படும். இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு, எர்சக்தி துறையின் திறனை கனடா மேம்படுத்தி வருகிறது. நாடு முழுவதும் போதிய அளவில் திரவ இயற்கை எரிவாயு (எல்என்ஜி) உற்பத்தித் திட்டங்களையும் கனடா செயல்படுத்தி வருகிறது. இத் திட்டங்கள் நடைமுறைக்கு வரும்போது, அதற்கடுத்த 5 ஆண்டுகளில் உலகின் 5-ஆவது மிகப் பெரிய எல்என்ஜி ஏற்றுமதி நாடாக கனடா உருவெடுக்கும். இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் உதவ முடியும்.

அணுசக்தித் திட்டத்தில் தனியாரை அனுமதிக்கும் இந்தியாவின் 'சாந்தி' சட்டத்தின் நோக்கங்களை எட்டுவதற்கு உதவும் திறனையும் கனடா பெற்றுள்ளது. இந்தியாவுக்கு கடந்த மார்ச் மாதம் மேற்கொண்ட பயணத்தின்போது, இந்திய அணுசக்தித் துறைக்குத் தேவையான யுரேனியத்தை வழங்குவதற்கான ரூ. 23,485 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் இரு நாடுகளிடையே கையொப்பமானது.

முக்கியக் கனிமங்கள் தொடர்பான பேச்சுவார்த்தையும் இரு நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மின்சார வாகனங்களுக்கான மின் கலன்களைத் தயாரிப்பதற்குத் தேவையான அனைத்து மூலப்பொருள்களையும் கொண்ட ஒரே மேற்கத்திய நாடாக கனடா மட்டுமே உள்ளது.

எனவே, உணவுப் பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு, விநியோகச் சங்கிலியின் உறுதியான தன்மையையும் உறுதிப்படுத்தக் கூடிய திறனை கனடா கொண்டுள்ளது என்றார்.

காலிறுதியில் ஸ்ரீகாந்த், லக்ஷயா



டோக்கியோ, நவ. 12: கும‌மாட்டோ மாஸ்டர்ஸ் பாட்மின்டன் போட்டியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், ஹைலோ ஓபன் சாம்பியன் லக்ஷயா சென் ஆகியோர் காலிறுதிக்கு தகுதி பெற்றனர்.

ஜப்பானின் கும‌மாட்டோ நகரில் இந்த பிடிள்யுஎஃப் வேர்ல்ட் டூர் சூப்பர் 500 போட்டி நடைபெற்று வருகிறது. ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், உள்ளூர் வீரரும் 8-ஆம் நிலை வீரருமான கோடை நரோகாவும் மோதினர். ஏற்கெனவே இருவரும் மோதியதில் ஸ்ரீகாந்த் 4 முறை நரோகாவிடம் தோற்றுள்ளார். அதைக் கருத்தில் கொள்ளாமல் அதிரடியாக ஆடிய ஸ்ரீகாந்த் 21-15, 21-18 என்ற கேம்களில் வென்று அசத்தினார். இந்த ஆட்டம் 60 நிமிஷங்கள் நீடித்தது.

காலிறுதியில் ஸ்ரீகாந்த், ஜப்பான் வீரர் 15-ஆம் நிலையில் உள்ள கொகி வாட்டன்பேயை சந்திக்கிறார்.

மற்றொரு ஆட்டத்தில் 8-ஆம் நிலை வீரர் லக்ஷயா சென் அசத்தலாக ஆடி 21-8, 21-14 என்ற கேம் கணக்கில் சீனாவின் டாங் டியானை 35 நிமிஷங்களில் வென்றார்.

காலிறுதியில் ஜப்பானின் யுஷி டனாகாவை எதிர்கொள்கிறார் லக்ஷயா. இரட்டையர் பிரிவில் ஹரிஹரன்-எம்.ஆர். அர்ஜுன், டிரீஸா ஜாலி-காயத்ரி இணைகள் தோற்றன.

வெள்ளி வென்ற விவான், அங்குர்



தோஹா, நவ. 12: கத்தாரில் நடைபெறும் துப்பாக்கி சுடுதல் உலக சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் விவான் கபூர், அங்குர் கோயல் ஆகியோர் தங்கள் பிரிவில் வியாழக்கிழமை வெள்ளிப் பதக்கம் வென்றனர். இதில் விவான், 2028 லாஸ் ஏஞ்சலீஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கான இடத்தையும் உறுதி செய்தார்.

ஆடவர் டிராப் இறுதிச்சுற்றில், விவான் கபூர் 29 புள்ளிகள் பெற்றார். குவைத்தின் அப்துல்ரஹ்மான் அல்ஃபய்ஹானும் அதே புள்ளிகளைப் பெற, வெற்றியாளரை தீர்மானிக்க 'ஷூட் ஆஃப்' வாய்ப்பு கையாளப்பட்டது.

அதில் விவான் 2-3 என்ற கணக்கில் பின்தங்கி, வெள்ளியுடன் விடைபெற்றார். அப்துல்ரஹ்மான் தங்கத்தை தட்டிச் செல்ல, சீனாவின் கி யிங் 22 புள்ளிகளுடன் வெண்கலம் பெற்றார்.

களத்திலிருந்த மற்றொரு இந்தியரான உதய்வீர் சிங் ஜாய்ஜீ 11 புள்ளிகளுடன் 6-ஆம் இடம் பிடித்தார்.

உலக சாம்பியன்ஷிப்பில் டிராப் பிரிவில் பதக்கம் வென்ற 4-ஆவது இந்தியர் என்ற பெருமையை விவான் கபூர் பெற்றார். கர்னி சிங் (வெள்ளி), மானவ்ஜித் சிங் சாந்து (தங்கம்), ஜோராவர் சிங் சாந்து (வெண்கலம்) ஆகியோர் முதல் மூவர்.

விவான் கபூர் மூலமாக இந்தியாவுக்கு, 2028 ஒலிம்பிக் போட்டிகளில் துப்பாக்கி சுடுதலில் 3-ஆவது இடம் உறுதியாகியிருக்கிறது.

இதிலேயே மகளிர் பிரிவில் இந்தியாவின் பிரகதி துபே, மனீஷா கீர், நீரு ஆகியோர் இறுதிச்சுற்று வாய்ப்பை தவறவிட்டனர்.

வெள்ளி: 25 மீட்டர் சென்டர் ஃபயர் பிஸ்டல் ஆடவர் தனிநபர் பிரிவில், இந்தியாவின் அங்குர் கோயல் 583 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார். லாத்வியாவின் எர்னெஸ்ட்ஸ் எர்ப்ஸ் (588) தங்கமும், செக் குடியரசின் ஜிண்ட்ரிச் டுபோவி (582) வெண்கலமும் பெற்றனர்.

அதிலேயே அணிகள் பிரிவில், அங்குர் கோயல், அமன்பிரீத் சிங், ராஜ்கன்வர் சிங் ஆகியோர் அடங்கிய இந்திய அணி, 1,727 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கம் பெற்றது. இத்துடன், போட்டியின் பதக்கப் பட்டியலில் இந்தியா 2 தங்கம், 7 வெள்ளி, 4 வெண்கலம் என 13 பதக்கங்களுடன் 2-ஆம் இடத்தில் நிலைக்கிறது.

செய்திகள் சில வரிகளில்...

- இந்தியா – நியூஸிலாந்து மோதும் ஒருநாள் கிரிக்கெட் தொடரின் 4-ஆவது ஆட்டம், மௌன்ட் மௌன்கனுயில் வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்குத் தொடங்குகிறது.
- சர்வதேச நட்பு ரீதியிலான கால்பந்தாட்டத்தில் இந்திய ஆடவர் அணி, 0-5 கோல் கணக்கில் நியூஸிலாந்திடம் வியாழக்கிழமை தோல்வி கண்டது.
- சிங்கப்பூர் கிளாசிக் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் ஓம் செம்வால், ராதிகா சீலன், சான்யா வத்ஸ் ஆகியோர் 2-ஆவது சுற்றுக்கு வியாழக்கிழமை முன்னேறினர்.
- இந்தியாவின் சுமித் நாகல், மாயா ராஜேஸ்வரன் ரேவதி, தக்ஷிணேஸ்வர் சுரேஷ் உள்ளிட்டோர் பங்கேற்கும் உலக டென்னிஸ் லீக் போட்டியின் 5-ஆவது சீசன், டிசம்பர் 17 முதல் 20 வரை பெங்களூரில் நடைபெறவுள்ளது.
- மான்செஸ்டர் யுனைடெட் கால்பந்து அணி இதுவரை இல்லாத வகையில் மோசமாக, நடப்பு பிரீமியர் லீக் சீசனில் 10 ஆட்டங்களில் 4 தோல்வி, 5 டிராவை சந்தித்ததை அடுத்து, அதன் பயிற்சியாளர் மைக்கேல் கேரிக் நீக்கப்பட்டார்.

WTA FINALS

ஆண்ட்ரீவா அரையிறுதிக்குத் தகுதி

இண்டியன் வெல்ஸ், நவ. 12: டபிள்யூடிஏ ஃபைனல்ஸ் மகளிர் டென்னிஸ் போட்டியில், ரஷியாவின் இளம் வீராங்கனை மிரா ஆண்ட்ரீவா அரையிறுதிக்கு வியாழக்கிழமை தகுதிபெற்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவின் குரூப் '2'-இல், உலகின் 3-ஆம் நிலை வீராங்கனையாக இருக்கும் ஆண்ட்ரீவா 6-4, 6-0 என்ற நேர் செட்களில், 2-ஆம் நிலையில் இருக்கும் பெலாரஸின் அரினா சபலென்காவை வீழ்த்தினார்.

ஏற்கெனவே முதல் ஆட்டத்தில் உக்ரைனின் எலினா ஸ்விடோலினாவை வென்ற ஆண்ட்ரீவா, தற்போது தொடர்ந்து 2-ஆவது வெற்றியுடன் அரையிறுதிக்கு முன்னேறியிருக்கிறார். இப்போட்டியில் ஆண்ட்ரீவா இந்த ஆண்டு அறிமுகமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆண்ட்ரீவா – சபலென்கா மோதியது இது 7-ஆவது முறையாக இருக்க, ஆண்ட்ரீவா 3-ஆவது வெற்றியுடன் நேருக்கு நேர் கணக்கில் முன்னேறி வருகிறார்.

முன்னதாக இந்த ஆட்டத்தின் முதல் செட்டில் ஆண்ட்ரீவா 1-4 என பின்தங்கியிருந்த நிலையில் இருந்து அபாரமாக மீண்டு வந்து, 62 நிமிஷங்களில் நேர் செட்களில் ஆட்டத்தை முடித்தார்.

கடைசி 11 கேம்களை வென்ற ஆண்ட்ரீவா, மொத்தம் விளையாடப்பட்ட 55 புள்ளிகளில், 45-ஐ தாமே கைப்பற்றினார். அவர் தனது முதல் ஆட்டத்தையும் நேர் செட்களில் வென்றது குறிப்பிடத்தக்கது.

மறுபுறம், 4 முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான சபலென்கா, இந்த ஆட்டத்தில் தோல்வி கண்டாலும், அரையிறுதிக்கான பந்தயத்தில் நிலைக்கிறார்.

முதல் ஆட்டத்தில் வென்ற அவர், குரூப் சுற்றின் கடைசி ஆட்டத்தில் உக்ரைனின் எலினா ஸ்விடோலினாவை சந்திக்கிறார். அதில் வெல்லும் பட்சத்தில் அரையிறுதி வாய்ப்பு அவருக்கு உறுதியாகும்.

நம்பிக்கையில் ஸ்விடோலினா: இதனிடையே, குரூப் 2-இன் மற்றொரு ஆட்டத்தில், உலகின் 6-ஆம் நிலையில் இருக்கும் ஸ்விடோலினா 3-6, 6-2, 6-2 என்ற செட்களில், செக் குடியரசின் கரோலின் முசோவாவை வீழ்த்தினார்.

முதல் ஆட்டத்தில் தோல்வி கண்ட ஸ்விடோலினா, இந்த வெற்றியின் மூலமாக அரையிறுதிக்கு முன்னேறும் நம்பிக்கையைத் தக்க வைத்துக் கொண்டார்.

ஸ்விடோலினா – முசோவா மோதியது இது 5-ஆவது முறையாக இருக்க, ஸ்விடோலினா 4-1 என முன்னிலையை அதிகரித்துக் கொண்டுள்ளார்.

இரட்டையர்: இப்போட்டியின் இரட்டையர் பிரிவில், பிரேஸிலின் லூசியா ஸ்டெஃபானி/கனடாவின் கேப்ரியெலா டப்ரௌஸ்கி ஆகியோர் கூட்டணி 7-6 (7/5), 4-6, 10-5 என்ற செட்களில், பிரான்ஸின் கிறிஸ்டினா மடெனோவிச்/சீனாவின் குவோ ஹன்யு இணையை வென்றது.

தொடர்ந்து 2-ஆவது வெற்றியைப் பதிவு செய்த ஸ்டெஃபானி/டப்ரௌஸ்கி கூட்டணி, அரையிறுதிக்கு முன்னேறியது. முதல் ஆட்டத்தில் வென்று, இதில் தோற்ற மடெனோவிச்/குவோ ஹன்யு இணை, பின்னடைவைச் சந்தித்தது. அடுத்த ஆட்டத்தில் வென்றால் மட்டுமே இந்த இணைக்கு அரையிறுதி வாய்ப்பு கிடைக்கும்.

மற்றொரு ஆட்டத்தில், தைவானின் சியெ சு வெய்/லாத்வியாவின் ஜெலினா ஆஸ்டபென்கோ பார்ட்னர்ஷிப், 7-5, 6-3 என, பெல்ஜியத்தின் எலிஸ் மெர்டன்ஸ்/சீனாவின் ஜாங் ஷுவாய் ஜோடியை வென்றது.

முதல் ஆட்டத்தில் தோற்ற வெய்/ஆஸ்டபென்கோ பார்ட்னர்ஷிப், இந்த வெற்றியின் மூலமாக அரையிறுதி நம்பிக்கையைத் தக்கவைக்க, மெர்டன்ஸ்/ஷுவாய் ஜோடி, தொடர்ந்து 2 தோல்விகள் கண்டதால் அந்த வாய்ப்பை இழந்தது.

19

19 வயதான ஆண்ட்ரீவா, டபிள்யூடிஏ ஃபைனல்ஸில் கடந்த 17 ஆண்டுகளில் அரையிறுதிக்கு முன்னேறிய இளம் வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.

5

டபிள்யூடிஏ ஃபைனல்ஸில், 2003-இல் ரவுண்ட் ராபின் முறை அறிமுகமான பிறகு, அரையிறுதிக்கு முன்னேறிய 5-ஆவது பதின்பருவ வீராங்கனை ஆனார் ஆண்ட்ரீவா. ரஷியாவின் மரியா ஷரபோவா, அனா இவானோவிச், டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, அமெரிக்காவின் கோகோ கௌஃப் ஆகியோர் முதல் 4 பேர்.

1

முதல் ஆட்டத்தில் 6-4, 6-0 என ஸ்விடோலினாவை வென்ற ஆண்ட்ரீவா, 2-ஆவது ஆட்டத்திலும் 6-4, 6-0 என சபலென்காவை சாய்த்தார். இதன் மூலமாக, போட்டியின் வரலாற்றில் தனது முதல் இரு ஆட்டங்களில் ஒரு செட்டை 6-0 என்ற வகையில் கைப்பற்றிய முதல் வீராங்கனை என்ற சாதனையை ஆண்ட்ரீவா படைத்தார்.

சபலென்காவை சாய்த்து முன்னேறினார்











ராவல்பிண்டி டெஸ்ட்: இலங்கை 446 ரன்கள் சேர்ப்பு

ராவல்பிண்டி, நவ. 12: பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் இலங்கை முதல் இன்னிங்ஸில் 446 ரன்கள் சேர்த்து வியாழக்கிழமை ஆட்டமிழந்தது.

கடந்த திங்கள்கிழமை தொடங்கிய ஆட்டத்தில், முதலில் பேட் செய்த பாகிஸ்தான் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 434 ரன்கள் சேர்த்து 'டிக்ளேர்' செய்தது.

இதையடுத்து தனது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை, 3-ஆவது நாளான புதன்கிழமை ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 404 ரன்கள் எடுத்திருந்தது.

அந்த அணியின் இன்னிங்ஸை வியாழக்கிழமை தொடர்ந்த தனஞ்ஜெய டி சில்வா, குசல் மெண்டிஸ் கூடுதலாக ரன்கள் சேர்க்காமல் விடைபெற்றனர்.

இந்த ஜோடி 5-ஆவது விக்கெட்டுக்கு 249 ரன்கள் சேர்த்து, பிரிந்தது. தனஞ்ஜயா 20 பவுண்டரிகளுடன் 167, குசல் மெண்டிஸ் 10 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 119 ரன்களுக்கு ஆட்டமிழந்தனர். பின்னர் வந்தோரில் சோனல் தினுஷா 20, லஹிரு குமரா 0, அசிதா ஃபெர்னாண்டோ 4, மிலன் ரத்னாயகே 12 ரன்களுக்கு வீழ, இலங்கை இன்னிங்ஸ் 446 ரன்களுக்கு நிறைவடைந்தது. பாகிஸ்தான் தரப்பில், அறிமுக வீரர் சகிப் கான் 7 விக்கெட்டுகள் சாய்த்து அசத்த, முகமது அப்பாஸ் 2, ரஸாயுல்லா 1 விக்கெட் வீழ்த்தினர்.



பாகிஸ்தான் – 57/1: இதையடுத்து 2-ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான், 1 விக்கெட் இழப்புக்கு 57 ரன்கள் எடுத்திருந்த நிலையில், வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் முன்னதாகவே முடித்துக் கொள்ளப்பட்டது.

அஸான் அவைஸ் 22, முகமது தஹா 24 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருக்க, தயாப் ஆரிஃப் 11 ரன்களுக்கு வீழ்ந்தார். அசிதா ஃபெர்னாண்டோ அவர் விக்கெட்டை வீழ்த்தினார்.

தற்போது பாகிஸ்தான் 45 ரன்கள் முன்னிலையில் இருக்க, வெளிச்சமின்மை கடைசி நாள் என்பதால், ஆட்டம் டிராவை நோக்கி நகர்வதாகத் தெரிகிறது.

ஐடபிள்யுஎல் கால்பந்து: இன்று தொடக்கம்



கொல்கத்தா, நவ. 12: இந்திய மகளிர் கால்பந்து லீக் தொடர் (ஐடபிள்யுஎல்) மேற்கு வங்க மாநிலம் கல்யாணியில் வெள்ளிக்கிழமை (நவ.13) தொடங்கி நடைபெறவுள்ளது.

முதல் ஆட்டத்தில் நடப்புச் சாம்பியன் ஈஸ்ட் பெங்கால்-3 முறை சாம்பியன் கோகுலம் கேரளம் எஃப்சி மோதுகின்றன.

இப்போட்டியில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்று 56 ஆட்டங்களில் ஆட வுள்ளன. வியாழக்கிழமை நடைபெற்ற கோப்பை அறிமுக நிகழ்வில் ஈஸ்ட் பெங்கால் கேப்டன் சுலஞ்சனா, கோகுலம் கேரளா கேப்டன் பேபி லால் சந்தன்மி, சேது எஃப்சி கேப்டன் மாளவிகா பிரசாத், உள்பட பல்வேறு அணிகளின் பயிற்சியாளர்கள் பங்கேற்றனர்.

இதுதொடர்பாக கேப்ரி ஸ்போர்ட்ஸ் அமைப்பு லீக் தொடர் மேம்பாட்டுக்காக அகில இந்திய கால்பந்து கூட்டமைப்புடன் 15 ஆண்டுகள் ஒப்பந்தம் செய்துள்ளது. அனைத்து ஆட்டங்களும் யு டியுபில் நேரடியாக வெளியிடப்படும். ஈஸ்ட் பெங்கால், கோகுலம் கேரளம், கார்வால் யுனைடெட், ஹாப்ஸ் கால்பந்து கிளப், ஜுபா சங்கா எஃப்சி, கிக்ஸ்டார்ட் எஃப்சி, நிபா கால்பந்து அகாதெமி, சேது மதுரை அணிகள் பங்கேற்கின்றன.

Total Chess World Championship Tour

பிரக்ஞானந்தா, அர்ஜுன் 'டிரா'



புடாபெஸ்ட், நவ. 12: டோட்டல் செஸ் உலக சாம்பியன்ஷிப் டூர் பைலட் போட்டியில், முதல் இரு சுற்றுகளில் இந்தியாவின் ஆர். பிரக்ஞானந்தா, அர்ஜுன் எரிகைசி ஆகியோர் தங்கள் ஆட்டங்களை டிரா செய்தனர்.

ஹங்கேரியில் நடைபெறும் இந்தப் போட்டியில், இந்திய நேரப்படி 2-ஆவது நாளான புதன்கிழமை இரவு, குரூப் சுற்று ஆட்டங்கள் தொடங்கின. குரூப்புக்கு தலா 6 பேர் வீதம், 4 குரூப்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

பிரக்ஞானந்தா: இதில் குரூப் 'பி'-யில் இருக்கும் பிரக்ஞானந்தா, முதல் இரு சுற்றுகளில் ஜெர்மனியின் வின்சென்ட் கீமருடன் மோதினார்.

வெள்ளை நிற காய்களுடன் களம் கண்ட முதல் சுற்று 44-ஆவது நகர்த்தலிலும், கருப்பு நிற காய்களுடன் களமாடிய 2-ஆவது சுற்று 57-ஆவது நகர்த்தலிலும் டிரா ஆனது.

முதல் இரு சுற்றுகள் முடிவில் குரூப் 'பி'-யில் பிரக்ஞானந்தா 2 புள்ளிகளுடன் 2-ஆம் நிலையைப் பகிர்ந்துகொண்டுள்ளார்.

அடுத்த இரு சுற்றுகளில் அவர், அமெரிக்காவின் ஃபாபியானோ கரானாவை சந்திக்கிறார்.

அர்ஜுன்: குரூப் 'டி'-யில் இருக்கும் அர்ஜுன் எரிகைசி, தனது முதல் இரு சுற்றுகளில் அமெரிக்காவின் ஹன்ஸ் நீமனை சந்தித்தார். இரு சுற்றுகளுமே டிரா ஆன நிலையில், முதல் சுற்று 31-ஆவது நகர்த்தலிலும், 2-ஆவது சுற்று 51-ஆவது நகர்த்தலிலும் முடிவுக்கு வந்தது. அர்ஜுன் முதலில் கருப்பு, பின்னர் வெள்ளை நிற காய்களுடன் களமாடினார்.

2 சுற்றுகள் முடிவில் குரூப் 'டி'-யில் அர்ஜுன், 2 புள்ளிகளுடன் 2-ஆம் நிலையை 3 பேருடன் பகிர்ந்துகொண்டுள்ளார். 3 மற்றும் 4-ஆவது சுற்றுகளில், கஜகஸ்தானின் பிபிசரா அசௌபயேவாவை சந்திக்கிறார் அர்ஜுன்.

வைஷாலி: அர்ஜுனுடன் குரூப் 'டி'-யில் இணைந்திருக்கும், பிரக்ஞானந்தாவின் சகோதரி ஆர்.வைஷாலி, தனது முதல் இரு சுற்றுகளில் பிரான்ஸின் மேக்ஸிம் லாக்ரேவை எதிர்கொண்டார்.

இதில் வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய முதல் சுற்றில், 49 நகர்த்தல்களுக்குப் பிறகு வைஷாலி தோல்வி கண்டார். பின்னர் கருப்பு நிற காய்களுடன் களமிறங்கிய 2-ஆவது சுற்றை 65-ஆவது நகர்த்தலில் டிரா செய்தார்.

இரு சுற்றுகள் முடிவில் வைஷாலி, 1 புள்ளியுடன் 3-ஆம் நிலையில் இருக்கிறார். அடுத்த இரு சுற்றுகளில் அவர், அமெரிக்காவின் ஹன்ஸ் நீமனுடன் விளையாடுகிறார்.

இறுதிக்கு முன்னேறியது இந்தியா

பாகிஸ்தானுடன் நாளை பலப்பரீட்சை



அல் அமிரத், நவ. 12: பத்தொன்பது வயதுக்கு உள்பட்டோருக்கான (யு19) ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியின் 2-ஆவது அரையிறுதியில், இந்தியா 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை வியாழக்கிழமை வீழ்த்தியது.

இறுதி ஆட்டத்துக்கு முன்னேறிய இந்தியா, அதில் பாகிஸ்தானுடன் சனிக்கிழமை (நவ.14) பலப்பரீட்சை நடத்துகிறது.

முன்னதாக அரையிறுதியில், முதலில் ஆப்கானிஸ்தான் 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 227 ரன்கள் சேர்க்க, இந்தியா 36.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழந்து 230 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான், பேட்டிங்கை தேர்வு செய்தது. நோமன் சலார் ஸாய் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 51, ஷா ஃபைஸல் ரஹிமி 2 பவுண்டரிகளுடன் 51 ரன்கள் அடித்தனர்.

சுபான் ஜகைல் 31, அபிதுல்லா நதர்ஜான் 14, ஃபரிதுல்லா இசாஸ் 13, ஆமிர் ஹம்ஸா 0, தாஹிர் சர்வாரி 1, முகமது அலி பராக்ஸாய் 8 ரன்களுக்கு சாய்க்கப்பட்டனர்.

ஓவர்கள் முடிவில் கேப்டன் சோஹைல் கான் 36, நூர் அலி நியாஸாய் 8 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்திய பௌலர்களில் இஷான் சூட் 3, ஆர்யன் சவ்சனி 2, காவ்யா பரேஷ் படேல், யஷ்வர்தன் சௌஹான், அர்ஜுன் ராஜ்புத் ஆகியோர் தலா 1 விக்கெட் எடுத்தனர்.

பின்னர் 228 ரன்களை இலக்காகக் கொண்டு விளையாடிய இந்திய அணியில், கேப்டன் லக்ஷயா ராய் சந்தனி 13 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 93 ரன்கள் விளாசி, வெற்றிக்கு அடித்தளமிட்டு வெளியேறினார்.

ஆர்யவீர் சேவாக் 51 ரன்களுக்கு விடைபெற, வி.கே.வினீத் 57, யஷ்வர்தன் சௌஹான் 16 ரன்களுடன், ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிக்கு வழிநடத்தினர். ஆப்கானிஸ்தான் தரப்பில் நூர் அலி நியாஸாய், சோஹைல் கான் ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தினர்.

பாகிஸ்தான் வெற்றி: முதல் அரையிறுதி ஆட்டத்தில், பாகிஸ்தான் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வங்கதேசத்தை வென்றது.

வீட்டு வசதி பாதுகாப்புச் சட்டத்துக்கு ஸ்பெயின் நாடாளுமன்றம் ஒப்புதல்

பார்சிலோனா, நவ. 12: ஸ்பெயினில் நிலவும் கடும் வீட்டு வாடகை உயர்வுக்கு எதிராக நாடு தழுவிய பொது வேலைநிறுத்தம் நடைபெற்ற மறுநாளான வியாழக்கிழமை யன்று, வீட்டு வசதி பாதுகாப்புச் சட்டத்துக்கு அந்த நாட்டின் நாடாளுமன்ற இடைக்கால கிழவை ஒப்புதல் அளித்தது.

69 உறுப்பினர்களைக் கொண்ட இடைக்கால அவையில் 35-34 என்ற வாக்கு வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத்தின்படி, 2030 வரை நிதி மற்றும் சமூக ரீதியாகப் பின்தங்கிய குடியிருப்பாளர்களுக்கு மாற்று இடம் வழங்கப்படும் வரை, அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



மேலும், சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்கு விடப்படும் வீடுகளுக்கு 10 சதவீத வரி விதிக்கவும், நிர்ணயிக்கப்பட்ட வரம்பை மீறிய வாடகை உயர்வைத் தடுக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நேபாளத்தில் சிற்றுந்து கவிழ்ந்து விபத்து: 14 பேர் உயிரிழப்பு

காத்மாண்டு, நவ. 12: நேபாளத்தில் சத் பண்டிகையைக் கொண்டாடுவதற்காக சொந்த ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தவர்களின் சிற்றுந்து, மலைப்பாதையில் இருந்து சுமார் 300 மீட்டர் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஓட்டுநர் உள்பட 14 பேர் உயிரிழந்தனர்; 6 பேர் காயமடைந்தனர்.



தலைநகர் காத்மாண்டிலிருந்து சர்காஹி மாவட்டத்துக்கு சென்றுகொண்டிருந்தபோது, பாக்மதி மாகாணத்தில் உள்ள மலைப்பாதையில் வியாழக்கிழமை அதிகாலை நிகழ்ந்த விபத்தில் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் பள்ளத்தில் பாய்ந்தது. விபத்து குறித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

என்விடியா சிஇஓ ஜென்சன் ஹுவாங் ராஜிநாமா

கலிஃபோர்னியா, நவ. 12: சீன உளவாளியாகச் சந்தேகிக்கப்படும் பெண்ணுடனான தனிப்பட்ட உறவு தேச பாதுகாப்பு குறித்த கவலைகளை எழுப்பியதைத் தொடர்ந்து, அமெரிக்காவைச் சேர்ந்த உலகின் முன்னணி சிப் தயாரிப்பு நிறுவனமான என்விடியாவின் தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) ஜென்சன் ஹுவாங் வியாழக்கிழமை தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

இதையடுத்து, நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியான கோலெட் கிரெஸ் இடைக்கால சிஇஓ-ஆக நியமிக்கப்பட்டார். மேலும், நிறுவனத்தின் முதல் தலைவராக ஹார்வி சி.ஜோன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக இயக்குநர்கள் குழு அறிவித்துள்ளது. இத்தகவல் வெளியானதைத் தொடர்ந்து, சந்தைக்கு முந்தைய வர்த்தகத்தில் என்விடியா பங்குகளின் விலை 10 சதவீதம் சரிந்தது.

சிங்கப்பூரைத் தலைமையிடமாகக் கொண்ட 'மெகாஸ்பீட் இன்டர்நேஷனல்' நிறுவனத்தின் முன்னாள் உயர் அதிகாரியான ஆலிஸ் ஹுவாங்குடன் திருமணத்தை மீறிய உறவில் இருந்ததை ஜென்சன் ஹுவாங் அண்மையில் ஒப்புக்கொண்டார்.

மேலும், ஆலிஸ் ஹுவாங் சீன அரசுக்கு நேரடியாகத் தகவல்களை வழங்கியதாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவின்பேரில் அந்நாட்டு புலனாய்வு அமைப்பான எஃப்பிஐ இதுகுறித்து விசாரணை நடத்தி வருகிறது.

இதுதவிர, தனக்குக் கீழ் பணியாற்றும் என்விடியா நிறுவன அதிகாரி ஒருவருடனும் ஜென்சன் ஹுவாங்குக்கு உறவு இருந்ததாக ஊடகங்களில் வெளியான செய்திகளும், அவருக்குப் பதவி விலகும் அழுத்தத்தை அதிகரித்தன.



ஜென்சன் ஹுவாங்

இவ்விவகாரம் குறித்து என்விடியா நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'தேச பாதுகாப்போ அல்லது நிறுவனத்தின் ரகசியங்களோ கசிந்ததாக நம்புவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. இருப்பினும், இது தொடர்பான அனைத்துத் தகவல்களும் தீவிரமாக ஆராயப்படும்' என்று உறுதியளித்துள்ளது.

ஏற்கெனவே, நவீன என்விடியா சிப்களைச் சீனாவுக்கு சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்ததாக மெகாஸ்பீட் மீது குற்றச்சாட்டுகள் எழுந்து, சிங்கப்பூர் அரசு விசாரணை நடத்தி வருவது கூடுதல் சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

இந்நிலையில், சர்ச்சையில் சிக்கியுள்ள மெகாஸ்பீட் நிறுவனம் வியாழக்கிழமை வெளியிட்ட முதல் செய்திக்குறிப்பில், 'அமெரிக்காவின் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டங்களை மிகவும் தீவிரமாக மதிக்கிறோம். அமெரிக்க அரசுடன் வெளிப்படையாக இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கிறோம். எங்களிடம் உள்ள கணினி சிப்களின் இருப்பு மற்றும் ஏற்றுமதி விதிகளைச் சரிபார்க்க அமெரிக்க சட்ட நிறுவனம் ஒன்றையும் நியமித்துள்ளோம்' எனத் தெரிவித்துள்ளது.

காஸா மருத்துவமனையில் இஸ்ரேல் தாக்குதல்: 6 பேர் உயிரிழப்பு

கெய்ரோ, நவ. 12: தெற்கு காஸாவின் கான் யூனிஸ் நகரிலுள்ள நாசர் மருத்துவமனை மீது இஸ்ரேல் வியாழக்கிழமை அதிகாலை நடத்திய வான்வழித் தாக்குதலில் மருத்துவர் ஒருவர் உள்பட 6 பேர் உயிரிழந்தனர்; 12-க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர்.

காஸாவில்போரினால் பெரும்பாலான மருத்துவமனைகள் முடங்கியுள்ள சூழலில், எஞ்சியிருக்கும் மிக முக்கிய சிகிச்சை மையங்களில் ஒன்றாக நாசர் மருத்துவமனை விளங்குகிறது. மருத்துவமனையின் அறுவை சிகிச்சைப் பிரிவு மீது நடத்தப்பட்ட தாக்குதலில், கட்டடத்தின் 2-ஆவது தளம் பலத்த சேதமடைந்தது.



இதனிடையே, ஹமாஸ் அமைப்பின் முக்கிய நபர்களைக் குறிவைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. எனினும், அதற்கான ஆதாரங்களை வெளியிடவில்லை.

வாஷிங்டனில் துப்பாக்கிச்சூடு: 5 பேர் பலத்த காயம்

வாஷிங்டன், நவ. 12: அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் வெள்ளை மாளிகைக்கு அருகே வியாழக்கிழமை அதிகாலை நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் பலத்த காயமடைந்தனர்.

வெள்ளை மாளிகையிலிருந்து சுமார் 1.5 கி.மீ. தொலைவில் உள்ள லோகன் சர்க்கிள் பகுதியில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. மேலும் பல இடங்களில் தாக்குதல் நடந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கும் போலீஸார், தப்பியோடிய அடையாளம் தெரியாத நபரைத் தேடி வருகின்றனர்.



கடந்த 2025 ஆகஸ்ட் மாதத்தில் டிரம்ப் நிர்வாக மூத்த அதிகாரி, இதே லோகன் சர்க்கிள் பகுதியில் தாக்குதலுக்குள்ளானர். இதையடுத்து, தேசிய பாதுகாப்புப் படையினரும் இப்பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நிலையில், இந்தத் துப்பாக்கிச்சூடு சம்பவம் அரங்கேறியுள்ளது.

இந்தோனேசிய துணை அதிபர் ராஜிநாமா

ஜகார்த்தா, நவ. 12: கல்விச் சான்றிதழ்கள், பதவிக்கான தகுதி குறித்த சர்ச்சைகளைத் தொடர்ந்து, இந்தோனேசிய துணை அதிபர் கிப்ரான் ராகபுமிங் ராகா (39) **(படம்)** வியாழக்கிழமை தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

'முன்னாள் அதிபர் ஜோகோ விடோடோவின் மகனான கிப்ரான் ராகபுமிங் ராகா, வெளிநாட்டில் பெற்ற கல்விச் சான்றிதழ்கள் தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்டு இல்லை' என இந்தோனேசிய அரசியல் சாசன நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் கடந்த மாதம் தீர்ப்பளித்தன. இதையடுத்து, 8 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 120 எம்.பி.க்கள் புதன்கிழமை அளித்த மனுவின் அடிப்படையில், அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் தொடங்கின.

கல்வித் தகுதி சர்ச்சை

மேலும், கடந்த 2024 தேர்தலில் போட்டியிட தேவையான 40 வயது வரம்பில் நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட சலுகை, வாரிசு அரசியல் புகார்கள் ஆகியவை ஏற்கெனவே இவருக்கு எதிரான விமர்சனங்களுக்கு வழிவகுத்திருந்தன.



இந்நிலையில், நீடித்த அரசியல் சர்ச்சைகளைத் தவிர்க்கும் வகையில், அதிபர் பிரபோவோ சுபியாண்டோவை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பதவி விலக விருப்பம் தெரிவித்த கிப்ரான் ராகபுமிங் ராகா, புதன்கிழமை தனது கடிதத்தை நேரில் வழங்கினார். தொடர்ந்து, நாடாளுமன்றத் தலைவர்களிடமும் அவர் ராஜிநாமாவைச் சமர்ப்பித்தார்.

இதையொட்டி, நாட்டு மக்களுக்கு வியாழக்கிழமை பிற்பகல் உரையாற்றிய அதிபர் பிரபோவோ, கிப்ரான் ராகபுமிங் ராகாவின் ராஜிநாமாவை 'கனத்த' இதயத்துடன் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

நாட்டின் நலனுக்காகவும், மக்களுக்காகவும் துணிச்சலுடன் அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாகப் பாராட்டிய அதிபர், கடந்த 2 ஆண்டுகளில் 35 மாகாணங்களுக்குச் சென்று, 303 அரசுத் திட்டங்களை ஆய்வு செய்த ராகாவின் அர்ப்பணிப்பையும் நினைவு கூர்ந்தார்.

இந்தோனேசிய அரசமைப்புச் சட்டப்படி, துணை அதிபர் பதவி காலியானால் புதிய தேர்தல் நடத்தப்படாது. மாறாக, அதிபரால் பரிந்துரைக்கப்படும் இரு வேட்பாளர்களில் ஒருவரை அடுத்த 60 நாள்களுக்குள் நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கும்.

அதிபர் புதினுடன் அமெரிக்க பிரதிநிதிகள் சந்திப்பு

மாஸ்கோ, நவ. 12: ரஷிய தலைநகர் மாஸ்கோவில் அந்நாட்டு அதிபர் விளாதிமீர் புதினை, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் சிறப்புத் தூதர்கள் ஸ்டீவ் விட்காஃப், ஜாரெட் குஷ்னர் ஆகியோர் வியாழக்கிழமை சந்தித்துப் பேசினர்.

முன்னதாக, ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் அமெரிக்க மத்தியஸ்தத்தில் ரஷியா-உக்ரைன் பிரதிநிதிகளிடையே 9 மாதங்களுக்குப் பிறகு நேரடிப் பேச்சுவார்த்தை செவ்வாய், புதன் ஆகிய இரண்டு நாள்கள் நடைபெற்றது.

இதில் பரஸ்பரம் போர்க் கைதிகளைப் பரிமாறிக்கொள்வதைத் தவிர முக்கிய உடன்பாடுகள் ஏதும் எட்டப்படவில்லை. இந்நிலையில், சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற அதிபர் புதினுடனான சந்திப்பைத் தொடர்ந்து, அமெரிக்க பிரதிநிதிகள் அயர்லாந்து தலைநகர் டப்ளினுக்குச் சென்று உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கியைச் சந்திக்க வுள்ளனர். டப்ளினில் 40-க்கும் மேற்பட்ட ஐரோப்பிய நாடுகள் மற்றும் 'நேட்டோ' பொதுச் செயலர் மார்க் ரூட்டே பங்கேற்கும் கூட்டத்தில் அதிபர் ஸெலென்ஸ்கி கலந்து கொண்டுள்ளார்.



ரஷிய அதிபர் புதினை அவரின் கிரெம்ளின் மாளிகையில் வியாழக்கிழமை சந்தித்த அமெரிக்க பிரதிநிதிகள் ஸ்டீவ் விட்காஃப், ஜாரெட் குஷ்னர்.

ஐரோப்பாவின் ஒட்டுமொத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த இப்பேச்சுவார்த்தையில் ஐரோப்பிய பிரதிநிதிகளையும் இணைத்துக் கொள்ள அதிபர் புதினின் ஒப்புதலைப் பெறுவதே எங்களின் முக்கிய நோக்கம் என ஜாரெட் குஷ்னர் தெரிவித்தார். ஆனால், இதற்கு ரஷியா கடும் எதிர்ப்புத் தெரிவித்தது.

கரன்சி நிலவரம்	அமெரிக்கா	ஐரோப்பா	பிரிட்டன்	மலேசியா	சிங்கப்பூர்
(இந்திய ரூபாயில்)	டாலர் 94.04	யூரோ 104.06	பவுண்ட் 124.46	ரிங்கிட் 23.05	டாலர் 73.06

தங்கம் (24 கேரட்) 1 கிராம் ரூ.13,980
தங்கம் (22 கேரட்) 1 கிராம் ரூ.12,815

வெள்ளி 1 கிலோ....ரூ.2,00,000
வெள்ளி 1 கிராம்..... ரூ.200.00

சென்செக்ஸ் 81,911 ▲ 32
நிஃப்டி 25,299 ▲ 44

தைவானை முந்தியது இந்தியப் பங்குச் சந்தை

ரூ.508 லட்சம் கோடி மதிப்புடன் உலக அளவில் 5-ஆவது இடம்

மும்பை, நவ. 12: பங்குச் சந்தையில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள அதிரடி மீட்சியால், தைவானை பின்னுக்குத் தள்ளி உலகின் ஐந்தாவது பெரிய பங்குச் சந்தையாக இந்தியா மீண்டும் உருவெடுத்தது.

இந்தியாவில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களின் மொத்த சந்தை மூலதன மதிப்பு 5.42 லட்சம் கோடி டாலராக (இந்திய மதிப்பில் ரூ.508 லட்சம் கோடி) உயர்ந்துள்ள நிலையில், அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஹாங்காங் ஆகிய நாடுகள் முதல் 4 இடங்களில் உள்ளன.

கடந்த அக்டோபர் மாத இறுதியிலிருந்து இந்தியப் பங்குச் சந்தையின் மதிப்பு சுமார் 64,000 கோடி டாலர் (சுமார் ரூ.60 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது.

வியாழக்கிழமை வர்த்தக முடிவில் சென்செக்ஸ் குறியீடு 81,911.01 புள்ளிகளிலும், நிஃப்டி குறியீடு 25,299.35 புள்ளிகளிலும் நிலைபெற்றன. இதன்மூலம், நடப்பு நவம்பர் மாதத்தில் மட்டும் சென்செக்ஸ், நிஃப்டி சுமார் 8 சதவீதம் ஏற்றம் கண்டு, கடந்த 9 மாதங்களில் இல்லாத உச்சத்தை எட்டியுள்ளது.

சந்தையின் இந்த எழுச்சிக்கு அந்நிய நிதி முதலீட்டாளர்களின் (எஃப்பிஐ) முதலீடுகள் முக்கியக் காரணமாக அமைந்துள்ளது. கடந்த அக்டோபரில் ரூ.45,162 கோடி மதிப்பிலான பங்குகளை விற்ற அந்நிய முதலீட்டாளர்கள், நவம்பரில் கடந்த புதன்கிழமை வரை ரூ.65,735 கோடி மதிப்பிலான இந்தியப் பங்குகளை வாங்கிக் குவித்துள்ளனர். அதே நேரம், உள்நாட்டு நிதி நிறுவனங்கள் ரூ.40,504 கோடி மதிப்பிலான பங்குகளை விற்பனை செய்துள்ளன.

சர்வதேச அளவில் ஏ.ஐ. தொழில்நுட்பம் சார்ந்த பங்குகளில் ஏற்பட்டுள்ள சரிவு, தைவான் மற்றும் தென் கொரியா ஆகிய சந்தைகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்களின் லாபம் குறித்த கவலையால், கடந்த அக்டோபரில் தைவான் சந்தையிலிருந்து 3,068 கோடி டாலரையும், தென் கொரியாவிலிருந்து 1,459 கோடி டாலரையும் அந்நிய முதலீட்டாளர்கள் திரும்பப் பெற்றுள்ளனர்.

மேலும், இந்திய நிறுவனங்களின் ஜூலை-செப்டம்பர் காலாண்டு நிதிநிலை முடிவுகள் எதிர்பார்த்ததைவிட சிறப்பாக அமைந்து, 35 நிஃப்டி நிறுவனங்களின் லாபம் ஆண்டு அடிப்படையில் 22 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. இத்துடன், சர்வதேச சந்தையில் 'பிரென்ட்' கச்சா எண்ணெய் விலை அக். 30 நிலவரப்படி பீப்பாய்க்கு 113.43 டாலராக இருந்த நிலையில், நவம்பரில் 19 சதவீதம் சரிந்து, சுமார் 92 டாலராகக் குறைந்துள்ளதும் இந்தியப் பங்குச் சந்தைக்கு கூடுதல் பலம் சேர்த்துள்ளது.



அக்டோபர் மாத சில்லறை பணவீக்கம் 6.09%

ரிசர்வ் வங்கி வரம்பைக் கடந்தது

புது தில்லி, நவ. 12: வெங்காயம் உள்ளிட்ட உணவுப் பொருள்களின் விலையேற்றத்தால், கடந்த அக்டோபர் மாதத்தில் நாட்டின் சில்லறை பணவீக்கம் 6.09 சதவீதமாக அதிகரித்தது.

நுகர்வோர் விலைக் குறியீட்டு (சிபிஐ) அடிப்படையிலான சில்லறை பணவீக்கம் கடந்த செப்டம்பரில் 5.54 சதவீதமாக இருந்த நிலையில், உணவு மற்றும் பானங்கள் பிரிவில் ஏற்பட்ட தொடர் விலைவாசி உயர்வால் அக்டோபரில் 6.09 சதவீதமாக உயர்ந்தது.

கடந்த 2 ஆண்டுகளில் முதல்முறையாக ரிசர்வ் வங்கியின் உச்ச வரம்பான 6 சதவீதத்தைத் தாண்டி சில்லறை பணவீக்கம் பதிவாகியுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க அம்சமாக, நாட்டிலேயே அதிகபட்ச சில்லறை பணவீக்கம் தமிழகத்தில் (7.29 சதவீதம்) மீண்டும் பதிவாகியுள்ளது.

உணவுப் பொருள்களின் விலையேற்றம்: புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் செப்டம்பர் மாதத்தின் 7.74 சதவீதத்திலிருந்து, அக்டோபரில் 8.94 சதவீதமாக உயர்ந்து, ஒட்டுமொத்த பணவீக்க உயர்வுக்கு முக்கியக் காரணியாக அமைந்துள்ளது.

பொருள்களின் அடிப்படையில், வெங்காயம் (116.22 சதவீதம்), பூண்டு (60.74 சதவீதம்), வெள்ளை நகைகள் (52.39 சதவீதம்), இஞ்சி (48.32 சதவீதம்), எலுமிச்சை (47.30 சதவீதம்) ஆகியவற்றின் விலைவாசி உயர்வு மிக அதிகமாகப் பதிவாகியுள்ளது.

அதேநேரம், உருளைக்கிழங்கு (-14.24 சதவீதம்), காலிஃபிளவர் (-10.57 சதவீதம்), தேங்காய் (-5.60 சதவீதம்), கத்தரிக்காய் (-3.34 சதவீதம்), முட்டைக்கோஸ் (-1.92 சதவீதம்) ஆகியவற்றின் பணவீக்கம் எதிர்மறையாகப் பதிவாகி, விலை குறைந்த பொருள்களாக உள்ளன.



வரம்பைத் தாண்டி: சில்லறை பணவீக்கத்தை 2 முதல் 6 சதவீத அளவில் வைத்திருக்க வேண்டும் என்ற சட்டபூர்வ இலக்கை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது. எனினும், கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அக்டோபரில் பணவீக்கம் உச்ச வரம்பான 6 சதவீதத்தைத் தாண்டியுள்ளது.



அடுத்து என்ன?...: பணவீக்க அழுத்தங்கள், ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, கச்சா எண்ணெய் விலை உயர்வு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கடந்த அக்டோபரில் ரிசர்வ் வங்கி தனது 'ரெப்போ' வட்டி விகிதத்தை 0.25 சதவீதம் உயர்த்தி, 5.50 சதவீதமாக நிர்ணயித்தது. பணவீக்கம் உச்ச வரம்பைத் தாண்டியுள்ளதால், டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள 'எம்பிசி' கூட்டத்தில் ரிசர்வ் வங்கி மீண்டும் வட்டி விகிதத்தை உயர்த்த வாய்ப்புள்ளதாகப் பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர்.

பருவமழை குறைபாடு மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்துள்ளதால், குளிர்காலப் பருவ பயிர் சாகுபடி பாதிக்கப்படலாம் என்றும், இதனால் வரும் மாதங்களிலும் உணவுப் பணவீக்கம் தொடர்ந்து அதிகமாகவே இருக்கும் எனவும் சந்தை நிபுணர்கள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் அதிக பணவீக்கம்

அதிக பணவீக்கம் பதிவான முதல் 5 மாநிலங்களாக தமிழகம் (7.29 சதவீதம்), தெலங்கானா (7.26 சதவீதம்), ஆந்திரம் (7.25 சதவீதம்), மத்திய பிரதேசம் (7.19 சதவீதம்), ஒடிஸா (7.17 சதவீதம்) ஆகியவை உள்ளன. தமிழகத்தில் தொடர்ந்து 2-ஆவது மாதமாக அதிக பணவீக்கம் பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பரோடா வங்கியின் 'கோல்டன் கோல்' வைப்பு நிதிக்கு வட்டி விகிதம் உயர்வு

மும்பை, நவ. 12: பொதுத் துறையைச் சேர்ந்த பரோடா வங்கியில் 555 நாள்களில் முதிர்வடையும் 'பாப் கோல்டன் கோல்' வைப்பு நிதித் திட்டத்துக்கான வட்டி விகிதம் 10 அடிப்படைப் புள்ளிகள் உயர்த்தப்பட்டன.

ரூ.3 கோடிக்கும் குறைவான சில்லறை கால வைப்பு நிதிகளுக்கு வியாழக்கிழமை முதல் இப்புதிய வட்டி விகிதம் அமலுக்கு வந்துள்ளது. இதன்படி, சாதாரண வாடிக்கையாளர்களுக்கு 6.90 சதவீதமும், மூத்த குடிமக்களுக்கு 7.40 சதவீதமும், 80 வயதுக்கு மேற்பட்ட மிகவும் மூத்த குடிமக்களுக்கு அதிகபட்சமாக 7.50 சதவீதமும் வட்டி வழங்கப்படும்.

அதேநேரம், மற்ற கால அளவுக்கான வைப்பு நிதித் திட்டங்களின் வட்டி விகிதங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என வங்கி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



ஆந்திரத்தில் ரூ.18,808 கோடி முதலீட்டில் புதிய ஆலை: கியா இந்தியா அறிவிப்பு

புது தில்லி, நவ. 12: ஆந்திரத்தில் 200 கோடி டாலர் (சுமார் ரூ.18,808 கோடி) முதலீட்டில் புதிய கார் உற்பத்தி ஆலையை தென் கொரிய வாகனத் தயாரிப்பு நிறுவனமான கியா இந்தியா அமைக்கவுள்ளது.

சிஐஐ மாநாட்டில் வியாழக்கிழமை பங்கேற்றுப் பேசிய கியா இந்தியாவின் சிஇஓ குவாங்கு லீ இந்த அறிவிப்பை வெளியிட்டார். இதற்காக ஆந்திர மாநில அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையொப்பமாகியுள்ளது.

வரும் 2030-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ள இப்புதிய ஆலையின் மூலம், சுமார் 12,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆந்திரத்தின் அனந்தபூரில் ஆண்டுக்கு 4.30 லட்சம் வாகனங்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஆலையை கியா நிறுவனம் ஏற்கெனவே நடத்தி வருகிறது. புதிய ஆலை செயல்பாட்டுக்கு வரும்போது, நிறுவனத்தின் மொத்த ஆண்டு உற்பத்தித் திறன் 6.30 லட்சம் வாகனங்களாக உயரும் என்றும், இரு ஆலைகளையும் சேர்த்து மொத்த முதலீடு 500 கோடி டாலராக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பயணிகள் வாகனச் சந்தையில் தனது பங்கை விரிவுபடுத்தும் நோக்கில், மின்சாரம், பெட்ரோல், டீசல் மட்டுமின்றி ஹைப்ரிட் மற்றும் சிஎன்ஜி ரகங்களிலும் புதிய மாடல்களை அறிமுகப்படுத்த கியா நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

கடந்த 2025-26 நிதியாண்டில் 3.17 லட்சம் வாகனங்களை உற்பத்தி செய்துள்ள இந்நிறுவனம், இதுவரை இந்தியாவிலிருந்து சுமார் 100 நாடுகளுக்கு 4.1 லட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள், உதிரிபாகங்களை ஏற்றுமதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.



'ஸ்பின்னி' பண்டிகைக்கால கார் விற்பனை அமோகம்

புதுதில்லி, நவ. 12: பழைய கார்களை விற்பனை செய்யும் தளமான 'ஸ்பின்னி' நிறுவனம், நிகழ் ஆண்டு பண்டிகைக் காலத்தில் 9,377 கார்களை விற்பனை செய்துள்ளது.

கடந்த அக். 11-ஆம் தேதி நவராத்திரி முதல் நாள் தொடங்கி, நவ. 10-ஆம் தேதி வரையிலான காலத்தில், இந்த 9,377 கார்கள் வாடிக்கையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த 31 நாள்களில் தினசரிசராசரியாக 300-க்கும் மேற்பட்ட கார்களை ஸ்பின்னி நிறுவனம் விற்பனை செய்துள்ளது. கடந்த ஆண்டின் இதே பண்டிகைக் காலத்தோடு (செப். 22-அக். 22) ஒப்பிடுகையில் இது 39 சதவீத வளர்ச்சியாகும்.

ஒட்டுமொத்த விற்பனையை விட எஸ்யுவி (81 சதவீதம்), தானியங்கி (52 சதவீதம்) மற்றும் சிஎன்ஜி (48 சதவீதம்) மாடல் கார்களின் விற்பனை அதிக வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. வாடிக்கையாளர்களின் கார் தேர்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இந்த விற்பனை புள்ளிவிவரங்கள் பிரதிபலிக்கின்றன.





தினமணி

வெள்ளிமணி

வெள்ளிக்கிழமை, 13 நவம்பர் 2026

மருத்துவம்

மாரடைப்பு பைபாஸ் சர்ஜரி, ஆஞ்சியோ கிராம், ஆஞ்சியோ பிளாஸ்டி இவற்றை தவிர்க்க அணுகவும், இருதய மற்றும் நீரழிவு நோய் நிபுணர்

இருதயம்ஸ்

மருத்துவமனை (பி) லிட். இந்து கல்லூரி அருகில், நாகர்கோவில்-2. போன்: 04652-241561 செல்: 9842141561

சுபிட்சம் தரும் சுப்பிரமணியர்

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து வட திசையில் சுமார் 13 கி.மீ. தொலைவில் 'கோம்பாக்' மாவட்டத்தில் 'பத்து மலை முருகன்' கோயில் அமைந்துள்ளது. இங்குள்ள சுண்ணாம்புக் குன்றுகளுக்கு அருகில் பட்டு ஆறு ஓடுகிறது. அதிலிருந்துதான் பத்து மலை என்ற பெயர் வந்ததாகச் சொல்லப்படுகிறது. அக்காலத்தில் இந்த மலையை 'தெமுவான்' எனும் பழங்குடியினர் புனிதத் தலமாகப் பாவித்து வந்துள்ளனர்.

1860 -ஆம் ஆண்டுகளில் இந்தப் பகுதியில் சீனர்கள் காய்கறிகளைப் பயிரிட்டு வந்தனர். உரத்துக்காகக் குகைகளில் இருக்கும் வெளவால் கழிவுகளை தோண்டி எடுத்துப் பயன்படுத்தினர்.

சுண்ணாம்புக் குன்றுகளை ஆராய்ச்சி செய்த அமெரிக்கத் தாவரவியலாளர் வில்லியம் ஹோர்னடே என்பவர், 1878-ஆம் ஆண்டில் பத்து மலை பற்றி அறிமுகப்படுத்த, அதன் புகழ் ஓங்கியது.

18,19-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்திலிருந்து மலாயா (தற்போது மலேசியா) நாட்டுக்குக் குடியேறியவர்கள், மகா மாரியம்மன் கோயிலை 1873-ஆம் ஆண்டில் நிறுவினர். இந்தக் கோயிலை நிறுவிய தமிழ் நாட்டைச் சார்ந்த தம்புசாமிப் பிள்ளையை வேல் வடிவில் இருந்த பத்துமலை நுழைவு வாயில் மிகவும் கவர்ந்தது.



சூரபத்மனை அழிக்க அன்னை பார்வதி தேவியிடம் வேல் வாங்கிச் செல்லும் முருகனும், வேலாயுதமும் அவர் மனதில் ஆழமாகப் பதிந்தது. எனவே அங்கு சுப்பிரமணிய சுவாமியை பிரதிஷ்டை செய்தார்.1892-ஆம் ஆண்டு முதன் முதலில் தைப்பூசத் திருவிழா இங்கு சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

ஆரம்ப காலத்தில் ஒற்றையடிப் பாதை மூலம் கோயிலை அடைய முடியும் என்ற நிலை இருந்தது. பின்னர் கோயிலில் பக்தர்களின் வசதிக்காக மரக்கட்டைகளில் 272 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டன. படிகளைக் கடந்து சில படிக்கட்டுகள் கீழே இறங்கினால், பெரிய பரப்பளவு உள்ள சமதளம் உள்ளது. இடது புறம் உள்ள ஒரு சிறிய குகையில் சுப்பிரமணிய சுவாமியையும், அவர் முன்னே உள்ள வேலாயுதத்தையும் தரிசிக்கலாம்.

பூஜைகள் வேலாயுதத்துக்கு மட்டும்தான் நடைபெறும். மூலவர் இருக்கும் பகுதியில் இருந்து சுமார் 40 படிக்கட்டுகள் மேல் நோக்கி ஏறிச் சென்றால் முன் மண்டபம், கருவறை, விமானத்துடன் கூடிய சந்நிதியில் வள்ளி - தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமியை தரிசிக்கலாம். இச்சந்நிதியைச் சுற்றி வரும் அளவுக்கு விசாலமான இடவசதி உண்டு. இந்தச் சந்நிதியை 1991-ஆம் ஆண்டு நிறுவியுள்ளனர்.

நாளடைவில் 16 படிகளை அடுத்து ஒரு சமதளம் என 17 அடுக்குகள் கொண்ட 272 படிகளை மூன்று வரிசைகளாக அமைத்தனர். இடதுபுறம் மலை ஏறவும், வலது புறம் கீழே இறங்கவும், மத்தியில் இருக்கும் வரிசையில் காவடிகளை மேலே எடுத்துச் செல்லவும் பயன்படுத்துகின்றனர். பத்து மலை முருகனை வழிபட்டால் கடன் தொல்லை நீங்கும், குடும்பப் பிரச்னை தீரும், சுபிட்சம் மற்றும் மனநிம்மதி கிடைக்கும் என்பது நம்பிக்கை.

பத்து மலை முருகன் கோயிலில் கந்த சஷ்டி விழா ஆறு நாள்கள் யாக பூஜைகள், அலங்கார ஆராதனைகளுடன் விமரிசையாக நடைபெறுகிறது. வரும் நவம்பர் 15-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை சூரசம்ஹார நிகழ்ச்சி மலைமேல் உள்ள வளாகத்தில் நடைபெற இருக்கிறது. முருகனுக்கு அரோகரா முழக்கம் எழுப்பி, இதை ஏராளமான பக்தர்கள் கண்டு களிப்பது கண்கொள்ளாக் காட்சி.

மேலும் கிருத்திகை, சஷ்டி என முருகனுக்குரிய விழாக்கள் இங்கு சிறப்பாகக் கொண்டாடப்பட்டாலும், தைப்பூச வைபவம்தான் பெருந் திருவிழாவாகும்.

தைப்பூசத்தையொட்டி, 21 அடி உயரம் உள்ள வெள்ளித் தேர் திருவீதியுலா சிறப்புமிக்கதாகும். பக்தர்கள் மயில் காவடி, பால்குடங்களைச் சுமந்து வந்து வேலுக்கு அபிஷேகம் செய்து நேர்த்திக்கடன் செலுத்துதல் போன்றவை இங்கு விசேஷம்.

தைப்பூச காலங்களில் மூன்று நாள்கள் இடைவெளி இல்லாமல் இரவு, பகல் என அனைத்து நேரங்களிலும் தொடர்ந்து பால் அபிஷேகம் நடைபெறுவது இத்தலத்துக்கு மட்டுமே உரிய பெருமையாகும். இங்கு அபிஷேகம் செய்த பால் எங்கே செல்கிறது என்பதை யாராலும் கண்டறிய முடியவில்லை.

பத்து மலை அடிவாரத்தில் நிறுவப்பட்டுள்ள 141 அடி உயரமுள்ள முருகன் சிலை உலக அளவில் பெயர் பெற்றது. 15 சிற்பிகள் இணைந்து மூன்றாண்டுகளில் இந்தச் சிலையை உருவாக்கினர். 1550 கன மீட்டர் கான்கிரீட், 250 டன் எடையுள்ள எஃகு கம்பிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பிரத்யேகமாக தாய்லாந்து நாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட 300 லிட்டர் தங்கக் கலவை சிலையின் மீது பூசப்பட்டுள்ளது. இச்சிலையின் கட்டுமானச் செலவு 25 லட்சம் மலேசிய ரிங்கிட் ஆகும்.

2006-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற்ற திறப்பு விழாவின்போது, 15 லட்சம் ரிங்கிட் மதிப்பிலான ஒரு டன் எடையுள்ள சாமந்திப் பூ மாலை சூட்டப்பட்டது.

உலகிலேயே மிக உயரமான முருகன் சிலை என்பதோடு, மலேசியா என்றாலே இந்த முருகன் சிலையை அடையாளப்படுத்தும் வண்ணம் புகழ்பெற்று விட்டது. இந்தச் சிலையை உருவாக்கியவர் திருவாரூரைச் சேர்ந்த சிற்பி ஆர். தியாகராஜன்.

தரிசனத்துக்காக காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரையும், மாலை 3.30 மணி முதல் இரவு 8.30 மணி வரையும் பத்து மலை முருகன் கோயில் திறந்திருக்கும்.

-செந்தில் குமரன்

பக்தி நிகழ்வுகள்

தென்காசி மாவட்டம், ஆய்க்குடி அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி, அருள்மிகுமுத்துக்குமாரசுவாமிதிருக்கோயிலில்நடைபெற்றுவரும்கந்தசஷ்டிபெருந்திருவிழாவில்,நவம்பர் 15-ஆம்தேதி(ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணி முதல் ருத்ர ஏகாதசி, அபிஷேகம், அலங்கார தீபாராதனையும், மாலை 4 மணிக்கு மேல் சூரசம்ஹாரத்துக்கு வெள்ளிமலை வாகனத்தில் சுவாமி எழுந்தருளலும் நடைபெறும்.

செங்கல்பட்டு டவுன், பெரிய நத்தம் அருள்மிகு ஸ்ரீ ஓசூர் அம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம் நவம்பர் 22 -ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 6.30 முதல் 8 மணிக்குள்ளாக நடைபெற உள்ளது.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சிக்கரசம்பாளையம் கிராமம், தனவாசி அருள்மிகு செல்வ விநாயகர், தனவாசி தனக்குமாரன், வள்ளி, தெய்வானை உடனமர் திருக்குமரன், இடும்பன், கடம்பன், கன்னிமார்கள், தனவாசி அப்பர் கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நவம்பர் 22 -ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 முதல் 9.30 மணிக்குள்ளாக நடைபெற இருக்கிறது.

மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை

நூற்றெட்டு திவ்ய தேசங்களில் ஒன்று, ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் அமைந்துள்ள ஸ்ரீ யோக நரஸிம்ம பெருமாள் திருக்கோயில். இது திருக்கடிகை, கடிகாசலம் என்கிற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

'கடிகை' என்றால் 24 நிமிடங்கள் கொண்ட ஒரு நாழிகை நேரம்; 'அசலம்' என்றால் மலை. இத்தலத்தில் 24 நிமிடங்கள் தங்கி பெருமாளை மனதார வழிபட்டாலே மோட்ச நிலையை அடைவர் என்பதால் இத்தலத்துக்கு கடிகாசலம், திருக்கடிகை என்று பெயர் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

சோழ மன்னர்களில் ஒருவரான பராங்குச சோழனால் திருப்பணி செய்யப்பட்டு, 'சோழசிம்மபுரம்' என்று அழைக்கப்பட்டு வந்த இத்திருத்தலம், காலப்போக்கில் மருவி 'சோளிங்கர்' என்றானது.

இரண்யகசிபு வதத்துக்குப் பிறகு, பிரகலாதனுக்குக் காட்சியளித்த நரஸிம்ம மூர்த்தியின் தெய்விகக் கோலத்தைக் காண முனிவர்களும், தேவர்களும் பேராவல் கொண்டனர். அதற்காக சப்தரிஷிகளான வசிஷ்டர், விஸ்வாமித்திரர், வாமதேவர், அத்ரி, பரத்வாஜர், ஜமதக்னி, கௌதமர் ஆகியோர் இந்த மலையில் அமர்ந்து கடுமையான தவம் மேற்கொண்டு வந்தனர். சப்தரிஷிகளின் தவத்துக்கு இடையூறு விளைவித்த அசுரர்களை அழிக்க நரஸிம்ம மூர்த்தியிடம் வேண்டப்பட்டது. சப்தரிஷிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, அசுரர்களை அழிக்க பெருமாள் தனது சங்கு மற்றும் சக்rாயுதத்தை ஸ்ரீ ஆஞ்சநேயரிடம் வழங்கி அனுப்பினார். ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தியும் அசுரர்களை வதம் செய்து ரிஷிகளைக் காப்பாற்றினார்.



அசுரர்கள் அழிக்கப்பட்டதும், ரிஷிகளுக்கும் ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்திக்கும் ஒரு கடிகை நேரம் சாந்த சொரூபியாக ஸ்ரீ யோக நரசிம்மராக திருக்காட்சி தந்தருளினார் பெருமாள்.

1305 படிகளைக் கொண்ட பெரிய மலையில் மூலவராக ஸ்ரீ யோக நரஸிம்மர் யோக முத்திரையுடன் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். தாயார் ஸ்ரீ அமிர்தவல்லித் தாயார் தனிச் சந்நிதியில் இருந்து அருள்பாலிக்கிறார். இங்குள்ள விமானம் சிம்ஹ கோஷ்டாக்ருதி விமானம் என்று அழைக்கப்படுகிறது.

அதேபோன்று, பெரிய மலைக்கு அருகில் 406 படிகளைக் கொண்ட சிறிய மலையில் ஸ்ரீ யோக ஆஞ்சநேயர், சதுர் புஜங்களுடன் அதாவது சங்கு, சக்கரம் மற்றும் ஜெப மாலையுடன் நான்கு திருக்கரங்களுடன் யோக நிலையில் காட்சி தருவது மிகவும் அபூர்வமான ஒன்றாகும். பெருமாளே தனது சங்கு - சக்கரத்தை ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தியிடம் அளித்து, தன்னிடம் வரம்கேட்டு வரும் பக்தர்களுக்கு அவர்கள் கேட்ட வரத்தை அருள இக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார்.

வருடத்தின் 11 மாதங்கள் யோக நிலையில் (கண் மூடிய நிலையில்) இருக்கும் ஸ்ரீ யோக நரஸிம்மர் மற்றும் ஸ்ரீ யோக ஆஞ்சநேய ஸ்வாமி, கார்த்திகை மாதத்தில் மட்டும் தங்களது திருக்கண்களைத் திறந்து பக்தர்களுக்கு நேரடியாக அருள்பாலிப்பதாக ஐதிகம். இதனால் கார்த்திகை மாதத்தில், அதிலும் குறிப்பாக சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இத்தலத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வழிபாடு செய்வது வழக்கம்.

தவிர, நாம ஸங்கீர்த்தப் பிரியரான ஸ்ரீமன் நாராயணனை கார்த்திகை மாதத்தில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த நாம ஸங்கீர்த்தனக் குழுக்கள் தாள வாத்தியங்களுடன் கோஷ்டியாக பஜனைப் பாடல்களை பாடி, ஆடி ஆனந்தித்து தரிசனம் செய்வது இங்கு மட்டுமே காணக் கிடைக்கும் காட்சி.

சாதாரண குக்கிராமங்களில் இருக்கும் ஐயப்ப பக்தர்கள் குழு முதல் பஜனை குழுவை அறக்கட்டளையாக நிர்வகிக்கும் குழுக்கள் வரை கார்த்திகைமாதத்தின் 5 வாரங்களும் இங்கு ஒன்று கூடுவதை குடும்ப விழா போல, குடும்ப சங்கமம் போல வழக்கமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

பில்லி, சூனியம், மனக் கவலை, பயம் மற்றும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், பிள்ளைப் பேறு கிட்டாதவர்கள், அடிவாரத்தில் உள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி, ஸ்ரீ யோக நரஸிம்மரையும், ஸ்ரீ யோக ஆஞ்சநேயரையும் வழிபட்டால், அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

பேயாழ்வார் மற்றும் திருமங்கையாழ்வாரால் இத்தலம் மங்களாசாசனம் (பாசுரங்கள் பாடி) செய்யப்பட்டுள்ளது. இவற்றில் திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட பாசுரமான 'மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை' என்கிற பாசுரம் வைஷ்ணவர்கள் மத்தியில் பிரசித்தி பெற்ற பாசுரமாகும்.

கார்த்திகை மாதத்தில் ஸ்ரீ யோக நரஸிம்ம ஸ்வாமியையும், ஸ்ரீ யோக ஆஞ்சநேய ஸ்வாமியையும் வழிபட்டு கஷ்டங்களைப் போக்கிக்கொள்ளுங்கள். வேண்டிய வரங்களை வாங்கிக்கொள்ளுங்கள்.

தரிசனத்துக்காக காலை 7 முதல் மாலை 5 மணிவரை திறந்திருக்கும் ஸ்ரீ யோக நரஸிம்ம ஸ்வாமி, ஸ்ரீ யோக ஆஞ்சநேய ஸ்வாமி கோயில், ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

-பூ.சேஷாத்ரி

வரம் தரும் வாரம்



ஜோதிடர்
கே.சி.எஸ். ஐயர்

13.11.2026 முதல் 19.11.2026 வரை

மேஷம்

எடுத்த காரியங்கள் நினைத்த படியே நிறைவேறும். வீட்டிலும் வெளியிலும் உங்கள் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் எண்ணங்களைப் புரிந்து கொள்வீர்கள். வியாபாரிகள் பொருள் விற்பனையில் கவனமாக இருப்பீர்கள். விவசாயிகள் நீர் வரத்து அதிகரிப்பதால், பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். அரசியல்வாதிகள் சமூகத்தில் பிரபலம் அடைவீர்கள். கலைத்துறையினரை புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும். பெண்கள் குழப்பங்களைத் தவிர்க்க தியானம் போன்றவற்றில் ஈடுபடுவீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும்.

சந்திராஷ்டமம் - இல்லை.

துலாம்

இல்லத்துக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். உங்களின் சாதுர்யமான பேச்சினால் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு சக ஊழியர்கள் நேசக் கரம் நீட்டுவார்கள். வியாபாரிகள் கூட்டாளியுடன் இணக்கமாகப் பழகுவீர்கள். விவசாயிகள் கொள்முதலில் லாபத்தைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் மாற்றுக்கட்சியினரிடம் விட்டுக் கொடுத்து நடந்துகொள்வீர்கள். கலைத்துறையினர் புதிய ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவீர்கள். பெண்கள் கணவர் குடும்பத்தினரின் ஆதரவைப் பெறுவீர்கள். மாணவர்கள் பெற்றோரின் ஆலோசனை கேட்டு நடப்பீர்கள்.

சந்திராஷ்டமம் - இல்லை.

ரிஷபம்

புதிய உபகரணங்களை வாங்கி தொழிலில் லாபம் அடைவீர்கள். இழுபறியான செயல்களையும் வெற்றியுடன் முடித்து விடுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வைப் பெறுவீர்கள். வியாபாரிகள் வாடிக்கையாளர்களின் கவனத்தை ஈர்ப்பீர்கள். விவசாயிகள் புதிய கால்நடைகளை வாங்குவீர்கள். அரசியல்வாதிகள் கட்சிப் பணிகளை பொறுப்புடன் செய்து முடிப்பீர்கள். கலைத்துறையினர் புதிய நுட்பங்களைப் புகுத்தி பாராட்டு பெறுவீர்கள். பெண்கள் கணவரை அனுசரித்து நடந்துகொண்டு காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். மாணவர்களின் மதிப்பு பள்ளியில் உயரும்.

சந்திராஷ்டமம் - நவம்பர் 13, 14.

விருச்சிகம்

உடல் ஆரோக்கியமும் மனவளமும் மேம்படும். பொருளாதார வளம் திருப்திகரமாக அமையும். உத்தியோகஸ்தர்களின் அந்தஸ்து அலுவலகத்தில் உயரும். வியாபாரிகள் மிதமான லாபத்தையே காண்பீர்கள். விவசாயிகள் அமோக விளைச்சலைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் அனைத்துக் கட்சிப் பணிகளையும் நேர்த்தியாகச் செய்து முடிப்பீர்கள். கலைத்துறையினர் கையில் இருக்கும் ஒப்பந்தங்களை நேர்த்தியாகச் செய்து முடித்து புகழ் பெறுவீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வீர்கள்.

சந்திராஷ்டமம் - இல்லை.

மிதுனம்

சுபகாரியம் தொடர்பான எண்ணங்கள் கைகூடும். முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் நற்பெயர் எடுப்பீர்கள். வியாபாரிகள் கூட்டாளிகளின் அன்பு, ஆதரவைப் பெறுவீர்கள். விவசாயிகளுக்குத் தோட்டம், தோப்பு உள்ளிட்ட விவசாயங்கள் நல்லபடியாக முடியும். அரசியல்வாதிகள் தொண்டர்களின் முழு ஆதரவைப் பெறுவார்கள். கலைத்துறையினர் ரசிகர்களின் எண்ணங்களைப் புரிந்துகொண்டு செயலாற்றுவீர்கள். பெண்கள் ஆலயத் திருப்பணிகளில் கலந்துகொள்வீர்கள். மாணவர்கள் புதிய விளையாட்டுப் பயிற்சிகளில் கலந்துகொள்வீர்கள்.

சந்திராஷ்டமம் - நவம்பர் 15, 16, 17.

தனுசு

பொருளாதாரத்தில் ஏற்றம் உண்டாகும். எதிரிகளின் பலம் குறையும். குடும்பத்தில் சுபகாரியங்களை நடத்தி மகிழ்வீர்கள். உத்தியோகஸ்தர்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும். வியாபாரிகள் விற்பனைப் பிரதிநிதிகளை பல இடங்களுக்கு அனுப்பி, விற்பனையைப் பெருக்குவீர்கள். விவசாயிகளுக்கு கால்நடைகளால் பலன் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் மேலிடத்தின் பாராட்டைப் பெறுவீர்கள். கலைத்துறையினர் துறையில் உயர்ந்தவர்களின் நட்பைப் பெறுவீர்கள். பெண்கள் உடல்நலத்தில் கவனமாக இருப்பீர்கள். மாணவர்கள் விளையாட்டில் வெற்றி பெறுவீர்கள்.

சந்திராஷ்டமம் - இல்லை.

கடகம்

உடன்பிறந்தோருடன் மனம் விட்டுப் பேசி தெளிவுகளை உண்டாக்குவீர்கள். வாகனங்களுக்கு பராமரிப்புச் செலவு செய்ய நேரிடும். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களுக்கு வேலை நுணுக்கங்களைக் கற்றுக் கொடுப்பீர்கள். வியாபாரிகள் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவீர்கள். விவசாயிகள் எதிர்பார்த்த மகசூலைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் கட்சி ரீதியான பயணங்களை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். கலைத்துறையினர் ரசிகர் மன்றங்களுக்குச் செலவு செய்வீர்கள். பெண்கள் குழந்தைகளை ஆன்மிகத்தில் ஈடுபடுத்துவீர்கள். மாணவர்கள் புதிய பாடப்பிரிவுகளில் சேர்வீர்கள்.

சந்திராஷ்டமம் - நவம்பர் 18, 19.

மகரம்

மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் கூடும். வழக்குகளில் சாதகமான திருப்பங்களைக் காண்பீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள் மக்கள் விரும்பும் பொருள்களை வாங்கி விற்பனை செய்யத் தொடங்குவீர்கள். விவசாயிகள் ஊடுபயிர்களைப் பயிரிட்டு லாபமடைவீர்கள். அரசியல்வாதிகள் கட்சியில் ஏற்றுக் கொண்ட பதவிகளில் திறம்படச் செயலாற்றுவீர்கள். கலைத்துறையினருக்கு கடின முயற்சிகளுக்குப் பிறகு புதிய ஒப்பந்தங்கள் கைகூடும். பெண்கள் புதிய சேமிப்புகளில் ஈடுபடுவீர்கள். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள்.

சந்திராஷ்டமம் - இல்லை.

சிம்மம்

பண வரவு நன்றாக இருக்கும். அதே நேரம் சிலர் குழந்தைகளுக்காக செலவு செய்ய நேரிடும். பெற்றோருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் சுமை அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு கொடுக்கல், வாங்கலில் சிறு சிரமங்கள் உண்டாகும். விவசாயிகளுக்கு கொள் முதல் லாபம் சிறப்பாக இருக்கும். அரசியல் வாதிகளுக்கு மேலிடத்தின் ஆதரவு சுமாராகவே இருக்கும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த வாய்ப்புகள் கை நழுவிப் போகலாம். பெண்களுக்கு கணவருடனான ஒற்றுமை சுமாராகவே தொடரும். மாணவர்கள் படிப்பில் போதிய கவனம் செலுத்துவீர்கள்.

சந்திராஷ்டமம் - இல்லை.

கும்பம்

பணவரவுக்குகுறைவுஏற்படாது. உங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றியைத் தேடித் தரும். உத்தியோகஸ்தர்களிடம் சக ஊழியர்கள் நட்போடு பழகுவார்கள். வியாபாரிகள் கூட்டாளிகளிடமிருந்து விலகி தனித்துச் செயல்படுவீர்கள். விவசாயிகள் கொள்முதலில் நல்ல லாபத்தைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் பொதுச் சேவையில் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள். கலைத்துறையினர் ரசிகர்களால் பெருமைப்படுத்தப்படுவீர்கள். பெண்களுக்கு பொருளாதாரத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும். மாணவர்கள் உள்ளரங்கு விளையாட்டுகளில் தைரியமாக ஈடுபடுவீர்கள்.

சந்திராஷ்டமம் - இல்லை.

கன்னி

தன்னம்பிக்கை அதிகரிக்கும். உற்றார் உறவினர் உதவிகரமாக இருப்பார்கள். உத்தியோகஸ்தர்கள் கடினமான வேலைகளையும் செய்து முடிப்பீர்கள். வியாபாரிகள் கடன் கொடுத்து வியாபாரத்தைப் பெருக்க நினைக்க வேண்டாம். விவசாயிகள் கால்நடைகளால் லாபம் அடைவீர்கள். அரசியல்வாதிகள் மேலிடத்திடம் அதிகம் நெருங்க மாட்டீர்கள். கலைத்துறையினர் சக கலைஞர்களை அனுசரித்து நடந்தால் பிரச்னைகளைத் தவிர்க்கலாம். பெண்கள் குடும்பத்தில் பொறுமையுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்வீர்கள். மாணவர்கள் விளையாட்டுகளில் புதிய யுக்திகளைக் கடைப்பிடிப்பீர்கள்.

சந்திராஷ்டமம் - இல்லை.

மீனம்

உற்றார் உறவினர்களின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப காரியங்கள் நடக்கும். உத்தியோகஸ்தர்கள் அலுவலக வேலைகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டி வரும். வியாபாரிகள் கொடுக்கல், வாங்கலில் சாதகமான சூழ்நிலையைக் காண்பீர்கள். விவசாயிகள் நீர்ப் பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். அரசியல்வாதிகள் மாற்றுக் கட்சியினரிடம் நல்ல உறவைப் பேணுவீர்கள். கலைத்துறையினர் புதிய துறை சார்ந்த விஷயங்களைக் கற்றுக்கொள்வீர்கள். பெண்களுக்கு கணவருடன் நிலவி வந்த மனக்கசப்புகள் நீங்கும். மாணவர்கள் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவீர்கள்.

சந்திராஷ்டமம் - இல்லை.

DINAMANI, Madurai Phone : 2525635; Fax : 0452 - 2525636 RNI Reg. No. 1194 / 57. Published by N. Gopalan on behalf of Express Publications (Madurai) Private Limited, at No. 15/2, First Floor, Gokhale Road, Tallakulam, Madurai - 625 002 and Printed by him at : V.C.Printograph, No. D45, Sidco Industrial Estate, Kappalur, Madurai - 625 008.
ஆசிரியர் : கே.வைத்தியநாதன் Editor : K.Vaidiyanathan Madurai. Vol.76, No. 314

Copyright : Express Publications (Madurai) Private Limited. All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.